UG2477
R006B05
U.G
2477

அச்சில் வாரா அருந்தமிழ்—9

# கம்பராமாயணக் கௌஸ்துபம்

ஆசிரியர் :

**கெ. என். சிவராஜ பிள்ளை**

முதல் தமிழ்த்துறைத் தலைவர்,

சென்னைப் பல்கலைக் கழகம்.

பதிப்பாசிரியர் :

**மு. சண்முகம் பிள்ளை**

தமிழ் விரிவுரையாளர்,

திருக்குறள் ஆராய்ச்சிப்பகுதி,

சென்னைப் பல்கலைக் கழகம்.

**சென்னைப் பல்கலைக் கழகம்**

**1979**

முதற் பதிப்பு : 1979

இதுவரை வெளிவந்த அருந்தமிழ் நூல்கள்:

1. அப்பாண்டை நாதர் உலா
— தமிழாய்வு I, 1972.

2. நாககுமார காவியம்
— தமிழாய்வு II, 1973.

3. திருமேற்றிசை அந்தாதி
— அப்பாண்டை நாதர் உலாவின் தனி வெளியீட்டுப் பிற்சேர்க்கை, 1974.

4. ஏனமுத்துப் பாண்டியன் கதை
— தமிழாய்வு III, 1974.

5. அடிமதிக்குடி அய்யனர் பிள்ளைத் தமிழ்
— தமிழாய்வு IV, 1975.

6. மெய்ம்மொழிச் சரிதை
— தமிழாய்வு VI, 1977.

7. சேலம் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி
— தமிழாய்வு VII, 1978.

8. மேருமந்தரமாலே
— தமிழாய்வு VIII, 1978.

# முகவுரை

தமிழுலகில் கவிச்சக்கரவர்த்தியாக விளங்குபவன் கம்பன். கம்பன் படைத்த இராமாவதாரம் தமிழ்க் காவியங்களுள் தலைமணியாய் விளங்குகிறது. கற்றோர் இதயங்களை என்றும் மகிழ்வித்து இன்புறுத்தும் தன்மையது கம்பராமாயணம். உலகில் சிறந்து விளங்கும் மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் தலை நிமிர்ந்து நிற்பதற்குக் காரணமாய் விளங்குவது கம்பன் காவியமே என்பர்.

" பாரில் பெயரோங்கும் பன்மொழிக்கும் நாணாது
நேரில் நிமிர்ந்துதமிழ் நிற்பதுதான்—சீருயர்ந்து
ஏறுபுகழ்க் கம்பன் இராமகதை யால்வந்த
வீறுகொண் டென்று விளம்பு"

(மலரும் மாலையும் 90)

என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை எடுத்துரைக்கிறார்.

கம்பன் கதை நடத்தும் திறமும் அவன் கவியின் நயங்களும் தனிச் சிறப்பு வாய்ந்தவை. கம்பராமாயணம் குறித்து எத்தனையோ வகையான விளக்கங்கள் இயற்றியவர் பற்பலராவர். இவற்றுள் பேராசிரியர் கெ. என். சிவராஜ பிள்ளையவர்கள் படைத்துள்ள கம்பராமாயணக் கௌஸ்துபம், கம்பனுடைய பெருங்காவியத்திற்கு விளக்குப் போல் உள்ளது. கம்பன் காவியத்தின் போக்கினையும் அழகுகளையும் அறிமுகப்படுத்துவதோடு விமரிசன முறையில் அதன் பல்வேறு கூறுகளையும் எடுத்துப் பாநடையிலே விளக்கம் தருகிறார் பேராசிரியர்.

கம்பராமாயணக் கடலுள் இளமைமுதலே நன்கு திளைத்தவர் கெ. என். சிவராஜபிள்ளை. இவருடைய தமையனாரும் கம்பராமாயணப் பிரசங்கம் செய்வதையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்து, 'கம்பராமாயணம் குமரேச பிள்ளை என்று நாடு போற்ற வாழ்ந்தார். கம்பன் காவியத்தில் பேரீடுபாட்டோடு வாழ்ந்த தமிழ்க் குடும்பத்தில் வந்த பேராசிரியர் இந்நூலுக்கு ஓர் ஒப்பற்ற அணிகலமாகக் கௌஸ்துபத்தை ஆக்கியளித்துள்ளார். திருமாலின் பெருமை பேசும் கம்பராமாயணத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைத்து, அதன் ஒப்பற்ற பெரும் புகழை உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காக இயற்றப்பட்ட இந்தச் சிறு காவியத்திற்குக் 'கம்பராமாயணக் கௌஸ்துபம்' என்னும் பெயரைச் சூட்டியுள்ளார்.

இச் சிறுகாவியம் கம்பராமாயணம் போலவே விருத்தக் கவியால் அமைந்தது. கௌஸ்துபத்தின் உட்பிரிவுகளுக்கும் கம்பனிற் போலப் படலம் என்னும் பெயரினையே ஆசிரியர் தந்துள்ளார். முன்னுரைப் படலம் முதலாக கவி இலக்கணப் படலம் ஈருகப் பத்துப் படலங்கள் இதில் உள்ளன. இப் படலப் பெயர்களை நோக்கினுலும் ஆசிரியர் கம்பனையும் அவனது பெருங்காவியத்தை யும் எந்தெந்தவகையில் விளக்கிக் காட்டுகிறுர் என்பது தெள்ளத் தெளியத் தெரியவரும்.

கௌஸ்துபத்தில் உள்ள பாடல்கள் 422 விருத்தங்கள். அங் கங்கே ஆசிரியர் உதாரணமாக எடுத்துக் காட்டிய கம்பராமாயணப் பாடல்கள் 39. ஆக 461 விருத்தக் கவித்திறங்கள் இதில் உள.

கம்பராமாயணப் பாடல்களை முழுமையாய் எடுத்து உதாரணங் காட்டியதோடு கம்பன் கவியின் செஞ்சொற்ருெடர்களையும் எடுத்துத் தம் வாக்கோடு இணைத்தும் இழைத்தும் தந்துள்ளார். கம்பன் வாக்கு களை மாற்றமின்றி அப்படியே எடுத்துப் பயன்படுத்திய இடங்களில் இரட்டை மேற்கோள் குறியிட்டுக் காட்டியுள்ளார். கம்பன் கவித் தொடர்களையே சிற்சில வேறுபாட்டோடு தம் பாடலில் அமைக்கும் பொழுது ஒற்றை மேற்கோள் குறியிட்டுக் காட்டியுள்ளார். இவர்தம் பாவின் போக்குகள்கூடப் பல இடங்களில் கம்பனின் நடையை ஒத்துக் காணப்படுகின்றன.

ஆராய்ச்சிப் பேரறிஞர் கெ. என். சிவராஜ பிள்ளையவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் முதல் தலைவராய் விளங்கியவர். அவருடைய நூற்ருண்டாகிய இந்த 1979 ஆம் ஆண்டு தமிழ்த்துறை வெளியிட்டு வரும் தமிழாய்வு இதழைப் பேராசிரியர் சிவராஜபிள்ளை நினைவு மலராக வெளியிடத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் சி. பாலகப்பிரமணியன் அவர்கள் முனைந்து திட்ட மிட்டார்கள். இவ்விதழில் 'அச்சில் வாரா அருந்தமிழ்' நூல் வெளி யீட்டு வரிசையில் பேராசிரியர் சிவராஜ பிள்ளையவர்களின் இதுவரை வெளிவாராத நூல் ஒன்றை வெளியிடத் திட்டமிட்டோம். அதன் விளைவாகவே கம்பராமாயணக் கௌஸ்துபம் இப்பொழுது அச்சில் வெளிவருகிறது.

'கம்பராமாயணக் கௌஸ்துபம்' என்பதனை ஆசிரியர் சிவராஜ பிள்ளை 1927 ஆம் ஆண்டிலேயே பாடி முற்றுவித்திருந்தார் என்பது அந்த ஆண்டில் காரைக்குடியிலிருந்து வெளிவந்த குமரன் என்னும் பத்திரிகையில் முதல் 12 பாடல்கள் வெளிவந்தமை கொண்டு அறிய லாம். அதன் பின்னர் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய 'செந் தமிழ்'ப் பத்திரிகையின் 28 ஆம் தொகுதியில் கௌஸ்துபத்தின் முதல் 105 பாடல்கள் மூன்று பகுதியாக அச்சாயின. அச்சான பகுதிகளை மீண்டும் மீண்டும் பார்த்துச் சிற்சில இடங்களில் பாடங் களை மாற்றியும் அமைத்திருந்தார். இதன் பிற்பகுதிகள் ஆசிரியர் வாழ்ந்த காலத்தில் தொடர்ந்து வெளிவாராமலே நின்றுபோயிற்று.

பேராசிரியரின் அச்சிடப்பெருத நூல்கள் அவருடைய குமாரர் திரு. நாராயண பிள்ளை, புதல்வி திருமதி சரசுவதி அம்மாள் ஆகியோரிடமிருந்து, இப்பொழுது அண்மையில் நாகர்கோவிலில் தோற்றுவிக்கப்பட்டுள்ள பேராசிரியர் சிவராஜ பிள்ளை நினைவு மன்றச் செயலாளர் திரு. எஸ். சிவராஜ பிள்ளையவர்களிடமிருக்கிறது. நூற்றுண்டு நினைவாகத் தமிழாய்வில் வெளியிட இந்நூலை விரும்பிக் கேட்ட பொழுது அவர்கள் மனமுவந்து மூலப்பிரதியை அனுப்பித் தந்தார்கள். மூலப்பிரதியைத் தந்துதவிய திரு. எஸ். சிவராஜ பிள்ளையவர்களுக்கும் பேராசிரியரின் சந்ததியினருக்கும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர் அமைத்த மூல நூலை அப்படியே பதிப்பித்ததோடு அடிக்குறிப்பில் விளக்கக் குறிப்புகளை நான் தொகுத்து அமைத்துள்ளேன். நூலிறுதியில் பாடல் முதற்குறிப்பு அகராதியும் பொருட்குறிப்பு அகராதியும் சேர்க்கப்பட்டுள்ளன.

'தமிழ்க் கவிவாணருக்கு ஒரு விண்ணப்பம்' என்னும் தலைப்பில் செந்தமிழ்ப்பத்திரிகையில் (தொகுதி 19, 1921) சிவராஜ பிள்ளையவர்கள் எழுதிய ஆய்வுரை பல்லாண்டுகளுக்குமுன் வெளிவந்துள்ளது. இது பொதுவாகத் தமிழ்க் கவிதைபற்றிய விமரிசனமாகவும் சிறப்பாகக் கம்பன் காவியப்பாங்கினை எடுத்து விளக்குவதாயும் உள்ளது. ஆகவே, ஆசிரியர் எழுதிய இவ்வுரைநடைப் பகுதி கம்பராமாயணக் கௌஸ்துபத்திற்கு ஒரு முன்னுரை போலக் காணப்படுகிறது. ஆதலால், இதனை நூல்முகப்பில் சேர்த்து அச்சிட்டுள்ளேன். இன்றைய இலக்கியத்திறனய்வாளர்களுக்கு இந்தக் கட்டுரையும் கௌஸ்துப நூலும் முன்வழி காட்டியாய் அமைகின்றன. எனவே, இலக்கியத்திறனய்வாளருக்கு இது பெருவிருந்தாகும்.

தமிழாய்வு ஒன்பதாம் தொகுதியில் வெளிவரும் இந்நூலைத் தனி நூலாகவும் வெளியிட வாய்ப்பளித்த துணைவேந்தர் பெருந்தகை ஜி. ஆர். தாமோதரன் அவர்களுக்கும் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினருக்கும் தமிழுலகம் என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது.

சென்னை-5
24—7—79

*மு. சண்முகம் பிள்ளை*

# பிழை–திருத்தம்

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 21 | | 29 | இளிய | இனிய |
| 22 | | 7 | பராமாயணம் | கம்பராமாயணம் |
| 25 | 1 | 4 | கிறைத்தண் | கிறைத்ததண் |
| 35 | 71 | 3 | வார்க்கொண்டதோர் | வார்கொண்டதோர் |
| 36 | 75 | 1 | தணிதலருஞ் | கணிதலருஞ் |
| 36 | 76 | 1 | கவிதெரியற் | கவித்தெரியற் |
| 39 | 98 | 2 | தீயெ'ன | தீயென |
| 40 | 104 | 3 | கம்பியன் | கம்மியன் |
| 42 | 117 | 4 | றுள்ளிதந்த | றுள்ளித்தந்த |
| 70 | 281:1 | 1 | பாருமேடாது | பாருமோடாது |
| 73 | 288 | 1 | யென்றனன் | யென்றனள் |
| 75 | 302 | 1 | தாயரற்பரி | தாயரிற்பரி |
| 83 | 338 | 1 | மான்விவி | மான்விழி |
| 86 | 356 | 1 | கிளவுச் | கிளவிச் |
| 87 | 357 | 4 | செல்வி | செவ்வி |

## பொருளடக்கம்


| | | | | |
|---|---|---|---|---|
| | தமிழ்க்கவிவாணருக்கு ஒரு விண்ணப்பம் | | | 1 |
| 1. | முன்னுரைப் படலம் | ... | ... | 25 |
| 2. | ஆக்கியோன் படலம் | ... | ... | 28 |
| 3. | உவமைப் படலம் | ... | ... | 37 |
| 4. | இயற்கை வருணனைப் படலம் | ... | ... | 41 |
| 5. | கதைமக்கட் படலம் | ... | ... | 47 |
| 6. | மெய்ப்பாட்டு வருணனைப் படலம் | ... | ... | 57 |
| 7. | சொல், நடை வனப்புப் படலம் | ... | ... | 68 |
| 8. | புலமைத்திறன் படலம் | ... | ... | 79 |
| 9. | அறவுரைப் படலம் | ... | ... | 89 |
| 10. | கவி இலக்கணப் படலம் | ... | ... | 91 |
| | பாடல் முதற்குறிப்பு அகராதி | ... | ... | 96 |
| | பொருட் குறிப்பு அகராதி | | ... | 102 |

## 4. இயற்கை வருணனைப்படலம்

(பொது)

வஞ்சித்துறை

106) வருணனை நோக்கில்
பொருணிறை வாக்கும்
பருணிதர் பஞ்ச
தருநிகர் தஞ்சா

107) தொலைவில சொல்லும்
உலைவில என்றும்
நிலைவல பண்ணின்
தலைபல நின்றும்

108) வான்றொடர் நான்றோள்
ஊன்றொடர் உயிரோர்
கான்றிட வருமே
தேன்றொடை இவண்பா



கெ. என். சிவராஜ பிள்ளை

# தமிழ்க்கவிவாணருக்கு ஒரு விண்ணப்பம்

கனவான்களே !

கவியின் உண்மை லக்ஷணத்தைச் செவ்விதின் உணர்ந்து நாம் இன்புறுதற்பொருட்டும், நமது தாய்மொழியாகிய தமிழில் அவ்வகை லக்ஷணங்கள் நிரம்பிய செய்யுளிலக்கியம் கிளையோடி வளர்தற் பொருட்டும், இப் பிரசங்கம் செய்ய நான் முன்வந்துள்ளேன். பிரசங்கம் ஒன்றினுல் எனது நோக்கம் நிறைவேறுமோவெனின், ஒரு வாறு நிறைவேறு மென்றே நம்புகிறேன். ஒரு நிலத்திற் பயிர் செழித்து உண்டாகவேண்டுமானல் அதற்கு நிலத்தின் வளமும் வித்தின் நலமும் முக்கியமானவையாம். வித்துவோன் எத்தன்மை யனுயிருந்தாலும் விளைவைப் பாதிக்கமாட்டாது. அதுபோலத் தங்களைப்போன்ற பண்புமிக்கோரது மனதிலே சில உண்மைக் கருத்துக்களை விதைத்தால் அது மிக்க பயனைக் கொடுக்கும் என்பதே எனது துணிபு.

நமது தமிழ்ப்பாஷையின் பழமையினையும் பெருமையினையும் குறித்து நான் தங்களுக்கு விரித்துரைக்க வேண்டிய ஆவசியகமில்லை. இந்தியபாஷைகளில் வடமொழியோடு ஒப்பிடக்கூடியது தமிழ் ஒன்றே. வட இந்தியாவில், சமஸ்கிருதமும் அதன் கிளைகளாகிய பங்காளிமுதலிய பாஷைகளும் எப்படிப் பரவி நிலைபெற்றிருக் கின்றனவோ அப்படியே தென்னிந்தியாவில் தமிழும் அதைச் சேர்ந்த இதர திராவிடபாஷைகளும் நின்று நிலவுகின்றன. இதனுலேயே தமிழின் பெருமை இனிது விளங்கும். மேலும், வடமொழிபோல தமிழ் உலகவழக்கு அழிந்துவிடவில்லை. இலக்கியவழக்கோடு ஜனங்களிடையில் இன்றும் உயிர்த்து உலாவுகின்ற 'நாடோடி' பாஷையென்னும் பெருமையும் வாய்ந்துள்ளது நம் தமிழ். இதுபற்றி யன்றே புராதனர்களுள்ளே கல்வியிற்பெரிய கம்பரும், ஆதுனிகர் களில் தமிழ்ப் புலமைசான்ற மனேன்மணீய நூலாசிரியரும் தமிழைக் கீழ்வருமாறு புகழ்ந்துரைக்கின்ருர்கள் :

---

* இது 1898-ல் திருவநந்தபுரம் சாலைச் செந்தமிழ்க் கழகத்திற் செய்த பிரசங்கக் குறிப்பினின்றும் விரித்தெழுதப்பட்டது. 'செந்தமிழ்' — தொகுதி 19, பகுதி 6, பக். 169–198-ல் 1921 ஆம் ஆண்டு வெளிவந்தது. இது கவிதைபற்றிய ஒரு விமரிசனமாகும்.

'உழக்குமறை நாலினு முணர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவினி னும்மரபி னுடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்'

—இராமாயணம்.

'ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே'

—மனோன்மணீயம்.

வடமொழிபோல் தென்மொழிக்கு இலக்கியவிரிவு இல்லையெனினும் முன்மொழி மனிதர்களது நித்தியவியாபாரத்துக் குபகரிக்குந்தன்மையுடையதா யிருக்கின்றது. இது தமிழ்மொழியின் வளர்ச்சிக்குரிய காரணங்களில் முக்கியமானதொன்றென்று நீங்களறிவீர்கள். உலக வழக்கத்திலிருக்கிற ஏனைய திராவிடமொழிகளோடு நமதுமொழியை ஒத்து நோக்கினும் அதன் பெருமை மேம்பட்டே நிற்கும். திராவிட பாஷைகளுக்கெல்லாம் மூலபாஷையாய் நின்றது நமது தமிழ் என்றே பாஷாசாஸ்திர விற்பன்னர்கள் துணிகின்றார்கள். இதன் உண்மை எவ்விதமாயினும் ஆகுக. வயது முதிர்ச்சியாலும் இலக்கியவிரிவினாலும் ஒலி இன்பத்தினாலும் தமிழ் மற்றைய திராவிடபாஷைகளைவிட உயர்ச்சி பெற்றதாகவே இருக்கிறது. இது கேவலம் அபிமானத்தாற் சொல்லும் புனைந்துரையென்று நினையாதீர்கள்.

ஆயினும் நமது பாஷையிலுள்ள செய்யுளிலக்கியங்களிற் சிற்சில குறைபாடுகள் ஏற்படாதிருக்கவில்லை. பிரபந்தங்களின் ரூபத்தையொட்டியோ அல்லது அவற்றிற் கூறப்படும் பொருளையொட்டியோ ஆராய்ச்சி செய்வோமாகில் இருவிதத்திலும் இலக்கியங்களின் குறை மலையிற்றீபம்போல் மிக்கு விளங்கும்.

நமது பாஷையில் இயற்றப்பட்டிருக்கிற நூல்களெல்லாம் செய்யுள் ரூபத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன ; வசனரூபத்தில் அமைத்த நூல்கள் இல்லையென்றே கூறவேண்டும். வசனநூல்கள் இல்லாதது தமிழ்ப்பாஷைக்கு ஒரு பெருங்குறைவே. அவைகளின்மையாற் சாதாரண ஜனங்களிடையில் அறிவு பரவுவதற்கு இடமில்லாமற்போனது மாத்திரமல்ல ; பாஷையே வளரமாட்டாது ஒரே நிலையில் நின்றுவிட்டது. எவ்வெவ்வழிகளில் நூதனமான சொற்கள் அமையப்பெற்று வழக்கிற் புகுந்து பாஷையை வளர்க்கவேண்டுமோ, அவ்வவ்வழிகளிற் றடைகள் ஏற்பட்டுச் சொல்வளங் குன்றிச் சொல்வனப்பு, சொல்லாற்றல், முதலிய புகழ்தற்குரிய குணங்கள் விருத்தியடையாது போயின. தற்காலத்திற் சிலர் 'நாவல்' என்னும் புதிய கதை நூல்களியற்றி இக்குறையை நீக்க ஆரம்பித்திருக்கின்றனர். இனி வசனநூல், கதை மாத்திரத்தில் நில்லாது சரித்திரம், ஜீவியசரித்திரம், வியாசம், மதிப்

புரை முதலிய பலபிரகாரங்களில் வெளிவரவேண்டும். பிரகிருதி சாத்திரங்களோ, இயற்கையுண்மை மேலெழுந்த தத்துவசாஸ்திரங் களோ, சரித்திரங்களோ, கலைநூல்களோ நம்மிடம் இல்லை. இக்குறை களும் தக்க வசனநூல்களால் நீக்கப்படவேண்டும். தமிழ்நூல்கள் பெரும்பாலும் செய்யுள்ரூபமாக இருப்பது ஒரு சரித்திர உண்மையை நமக்கு விளக்குகின்றது. ஒவ்வொரு தேசத்தாருடையவும் ஒவ் வொரு சமுதாயத்தாருடையவும் பூர்வ இலக்கிய சரித்திரத்தை ஆராய்ச்சிசெய்தாற் செய்யுள்நடை நூல்களே முதன்முதலில் மிகுதி யாக இருந்ததாகக் காணப்படுமென்று மெக்காலே என்னும் ஆங்கிலேய ஆசிரியர் கூறுகின்ருர். இவ்வுண்மை நமது பாஷைக்கும் பொருத்தமுடையதாகவே யிருக்கின்றது. நமது பூர்வீகர்கள் இருந்த நிலையினின்றும் நாம் சிறிதும் பெயராது முன் இருந்தபடியே யிருப் பதனுற்ருன் நமது இலக்கியமும் ரூபத்தால் மாறுதலடையாது அதன் ஆரம்பகாலத்திலிருந்த நிலையிலேயே இன்றும் இருக்கிறது. ஆனல் தற்காலத்திற் பரவிவரும் நல்லுணர்ச்சியினுல் வெகு சீக்கிரத்தில் இக் குறை நிவிர்த்தியாய்விடுமென நம்புவதற்கு இடமுண்டு.

பெரும்பாலும் செய்யுள்ரூபமாகத் தமிழ்நூல்கள் இருப்பதுடன் பொருளைக் கவனிக்குமிடத்து அவை, இதிகாச புராணங்கள், ஞான சாஸ்திரங்கள் என்ற இரண்டில் ஒன்றின்கண் அடங்கியொழிகின்றன. நீடித்தகாலம் நம்மிடம் வெளிநோக்குமியல்பு குறைந்து உள்நோக்கு மியல்பு அதிகரித்தே இருந்தது; இன்னுமிருக்கிறது. இதனுலேயே இயற்கைப்பொருள்களைக் குறித்த சாஸ்திரங்கள் குறைந்து மானசிக தத்துவநூல்களாகிய ஞானநூல், தருக்கநூல், சந்மார்க்கநூல் முதலி யவை அதிகரித்தன. செய்யுள்ரூபத்தில் நூல்கள் அமைத்துவந்த போதிலும் கவியின் உண்மை லக்ஷணத்தையும், நோக்கத்தையும், கற்றுவல்லாருங்கூடப் பிழைபட வுணர்ந்தார்கள். செய்யுளுக்குரிய விஷயங்களைத் தெரிந்தெடுத்தோ அல்லது அதனை இயற்றவேண்டும் ரீதிகளை விசாரித்துணர்ந்தோ நம்மவர்கள் நூல்செய்தார்களில்லை. இக்குறை இலக்கிய மதிப்பாசிரியர்கள் இல்லாததால் வந்ததேயன்றி வேறன்று. தமிழ்ச்சங்கப் புலவர்களும் பிற்கால ஆசிரியர்களும் இலக்கியங்களைத் தக்கவாறு ஆராய்ச்சிபுரிந்து மதிப்புரை தந்தார் களில்லை. ஆராய்ச்சி வல்லாரது கழகமொன்று ஏற்படாதபடியால் தமிழிலக்கியமென்னும் அகன்ற பிரதேசம் சிற்சில அலங்காரமாளிகை களால் அழகுபெறுவதோடு நமக்கு அருவருப்புத்தரத்தக்க குடிசை களையும் குப்பைமேடுகளையும் காட்டி விகாரமடைந்துமிருக்கின்றது. தமிழிலக்கியத்தின் குறைபாடுகளிங்ஙனமிருக்க, தமிழ்க்கவியின் குறைகளைமட்டுமே இங்கே எடுத்து விசாரிப்போம்.

கவியின் பொதுவிலக்கணங்களையும் சிறப்பிலக்கணங்களையும் அறிந்துகொள்ளாது காவியம் அமைக்கத்தொடங்கும் ஆசிரியர் அரங்கின்றி வட்டாடல் தொடங்கும் சிறுவரைப்போல் இடர்ப்படுவர். நற்கலைகளின் ஒரு பிரிவாகிய கவி, நற்கலைகள் எல்லாவற்றிற்கும் பொதுவாகவுள்ள நோக்கத்தைத் தழுவியே நிர்மிக்கப்படல் வேண்டும். நற்கலைகளின் பொதுநோக்கம் இன்பம் பயத்தலே.

இவ்வின்பத்தைச் சித்திரம் சிற்பம் முதலியன ரூபவழியாகவும், இசை அல்லது சங்கீதம் ஒலிவழியாகவும், கவி சொல்வழியாகவும் ஊட்டு கின்றன. 'செஞ்சொற்கவியின்பம்' என்றார் கம்பநாடரும். இவ் வின்பம் எங்குக் கெடுகின்றதோ அங்கு நற்கலையென்பதே இல்லா தாகின்றது. தமிழ்க்கவிக்கடலிற் சற்று இறங்கி நோக்குவோமானால் அங்கே ஆரவாரமும் கொந்தளிப்பும் நுரை நிரைகளுமே ஏராளமாகக் காண்போம். கம்பராமாயணம் போன்று பலவகையானும் சிறந்த காவியங்கள் கிடைப்பது அருமையினுமருமை.

முதன்முதல், நம்முடைய கவிஞர்கள் காவியம் புனையுமுன் காவி யத்திற்காம் விஷயத்தைத் தெரிவதிற் கவனம் செலுத்துகிறார்களில்லை. இஃதொரு பெருங்குறை. பௌதிகசாஸ்திரங்களும் தத்துவநூல்களும் காவியநிர்மாணத்திற்கு இடங்கொடுக்குமா? கணிதம், சோதிடம், வைத்தியமுதலிய சாஸ்திரவிஷயங்கட்கும் காவியத்தாற் பிரதிபாதிக் கப்படவேண்டும் விஷயங்கட்கும் எத்துணை வித்தியாசம். இதை அறியமாட்டாமையினாலன்றோ வேதாந்த சித்தாந்த சாஸ்திர வுண்மைகளெல்லாம் காவியத்துறையிலுட்படுத்தப்பட்டன! காவிய இன்பம் தருதற்கொவ்வாக் கணிதத்தையும் கவியிற் புனைந் தனரன்றோ! மருந்தைப்பற்றி இயற்றிய கவிகளெல்லாம் மருந்தினும் கசப்பே! ஞான காவியமெல்லாம் மோன காவியமாகவே முடிந்தன! சோதிடப் பாக்களோவெனின் வாதிடவேண்டிய பாக்களே!

கவியின்பம் கேடுறுவதற்கு இரண்டாவது காரணம் கவித்திறம் சிறிதும் அமையப்பெறாத அறிவிலிகளாலும் போலிக்கவிகளாகிய சித்தர் முதலியோர்களாலும் கவியியற்றப்பட்டமையே. பல்லிசாஸ் திரம், பக்ஷிசாஸ்திரம், பாம்பாட்டிச் சித்தர்பாடல், ஞானவெட்டி முதலிய நூல்களை எடுத்துக்கொள்ளுங்கள். இவைகளிற் 'கேளப்பா' என்று தொடங்கி ஏனைய அடிகளில் 'நாளப்பா' 'தாளப்பா' 'மாளப்பா' என்று எதுகை சேர்த்துக் கவியை முடித்துவிடுவார்கள். 'பொருள்' இக்கவிஞர்களுக்கு ஓர் பொருளன்று. சித்தர்களெல்லாம் கவியின் அழகைக் கெடுக்க வந்த பிரசித்தர்களே யென்று அன்னார் இயற்றிய நூல்களை வாசிக்கும் ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளா தொழியார்.

மூன்றாவதாக, வித்துவான்களென்று மதிக்கப்படு மெவரும் க எழுதப் புகுந்தது கவிச்சிறப்புக் குன்ற வேறொரு காரணமாயிற்று. கவி பாடுந்திறம் ஒருவனிடம் இல்லையெனின் அவனை ஒரு தமிழ் வித்துவான் என மதித்தலே கூடாதென்ற தப்பெண்ணம் நம்மிடம் வேரூன்றி நிற்கிறது. இதனால் உத்தமக்கவிகளாகிய நென்மணி களோடு போலிக்கவிகளாகிய பதர்களும் விரவிக்கிடக்கக் காரண மாயிற்று.

இயற்கையிலேயே கவிவாசனை அமையப்பெறாத வித்துவான் களது கவிகளிற் கவிச்சுவை சிறிதும் காணுதலரிது. அவைகள் பல கல்வித் துறையினும் அவர்களுக் குள்ள திறமையினைக் காட்டு

மாயினும் ரசமில்லாக் கனிபோல் இன்பம் சிறிதும் பயவா. அதிவீர ராமபாண்டியனது 'நைடதம்', சிவஞான சுவாமிகளின் 'கம்பரந்தாதி', மகா வித்துவான் மீனுக்ஷிசுந்தரம்பிள்ளையவர்களின் 'திருத்தில்லை யமகவந்தாதி', முருகதாச ரென்னும் தண்டபாணி சுவாமிகளின் ஒலியலந்தாதி' முதலிய நூல்கள் நான் சொல்லும் உண்மையை விசதமாக்கும். இக்கவிஞர்கள் புத்தி சாமர்த்தியத்திலோ பாண்டித்தியத்திலோ குறைந்தவர்களென யாரும் சொல்லத் துணியார். ஆயினும் அவர்களது பாடல்களை இன்பம் ஒழுகும் பாக்களாக நற்கலையுணர்ச்சியுடையார் மதிப்பரோ? மேலான கவிமாதுரியம் அமையவேண்டுமாயின் ஒரு கவிஞனிடம் இரண்டு விசிஷ்ட தர்மங்கள் ஒருங்கே அமைந்திருத்தல்வேண்டும். அவற்றி லொன்று பிறப்புவிசேடத்தினு லமைவது. அழகில் ஈடுபடும் உணர்ச்சி நலன், அவ்வழகினைக் கருத்தினுல் நூதன ரூபங்களில் அமைக்கவல்ல மனுேதர்மம், முதலிய குண விசேஷங்கள் ஒரு கவிஞனிடம் பிறவியிலேயே பொருந்தியிருத்தல் வேண்டும். உலகத்திலுள்ள மகாகவிகள் எல்லாரும் இவ்வகைப் பிறப்பு விசேஷமுடையவர்களே. மற்றொன்று அநுபவவிசேடத்தினு லமைவது. லோகாநுபவத்தால் மக்களைப்பற்றியனவும் பிரகிருதியைப்பற்றியனவுமாகிய உண்மைத்தொகுதிகளை உணர்ச்சிவழியே அறிந்தவனுதலோடு காவியப்பயிற்சியும் நிரம்ப உடையனுதல். இவற்ருற் காவியத்திற் பிரதிபாதிக்கவேண்டிய உண்மைகளும் அவ்வுண்மைகளைத் தக்க அழகோடு வெளியிட வேண்டிய பாஷாபரிஞ்ஞானமும் ஏற்படும். இந்த விசேஷகுணமும் மகாகவிகள் எல்லாரிடமும் காணப்படுவனவே.

நான்காவதாகப் பொருளைக்காட்டினும் உருவத்திற்கு அதிகச் சிறப்பு நமது கவிஞர்கள் கற்பித்துவிட்டார்கள். சந்தப்பாக்களும் ஏகபாதங்களும் கோமூத்திரி முதலிய சித்திரக் கவிகளும் பாற்கடலிலெழுந்த விஷமென்று சொல்லலாமேயன்றிப் பிறிதென்சொல்வது? ரதபந்தம், நாகபந்தங்க ளெல்லாம் கவியின் மனுேபந்தங்களேயல்லாமல் வேறென்ன? 'மாலைமாற்று' என்பது உண்மைக்கவியின் வேலைமாற்றே! 'சுழிகுளம்' என்பது கவிஞர் மூழ்கும் இழிகுளமல்லவோ! 'காதைக்கரப்பு' என்று கூறுவதைக் காட்டிலும் கவிஞரின் போதகரப்பு என்று சொன்னுற் றவறில்லையே! 'பிறிதுபடு பாட்டு'ச் சமைக்கப் புகும் கவியின் பாடு சிறிதுபடு பாடோ! ஐயோ! இக்கவிஞர்கள் எல்லாரும் வாயையும் மூக்கையும் மூடிச் செவிவழி சுவாசம் விட்டு மாளுகின்ருர்களே! சிவஞானசுவாமிகள் செய்த காஞ்சிப்புராணத்திற் சுரகரீசப்படலம் நோக்கிச் சித்திரப்பாக்களின் விசித்திரங்களைத் தெரிந்துகொள்ளுங்கள். நிரம்பவழகிய தேசிகர் செய்த சேதுபுராணத்தில்,

'நேசமோ டுதகமுழ்கி நிலைமொழி தன்னை நீத்தான்
பூசுர னென்று தொக்க புணர்மொழி யிரண்டு தம்மில்'

— வேதாளவாதச் சருக்கம்

எனவும்,

'வெறுங்கையா ரென்னும்பேரின் மென்மையை வன்மை
[செய்யும்

— இலக்குமிதீர்த்தச் சருக்கம்

எனவும் வரும் செய்யுட்களிற் கவியின்பம் உளதாகக் கருதுவாரும் உளரன்றோ!

ஐந்தாவதாக, நம்மிடையே கவி, இலக்கண வித்துவான்களால் வரையறுக்கப்பட்டு வளர்ச்சிகுன்றிப் போய்விட்டது. இதனுற் காவியத்துறையில் நூதனக் கருத்துக்களும் நூதன அணிகளும் தோன்ருமற் போயின. சங்க காலத்து இலக்கிய கர்த்தர்கள் இக் கட்டுப்பாட்டினுல் வருந்தினுர்களில்லே. பிற்காலத்துப் புலவருக் கோவெனின் முன்னோர்களது இலக்கிய இலக்கண நூல்கள் 'சுருதி' போன்று இன்றியமையா ஆதாரங்களாய் முடிந்தன. நூல்கள் இன்னின்ன மொழிகளிற்ருெடங்கி, இன்னின்ன மொழிகளில் முடிய வேண்டுமென்றும், உவமானங்கள் இன்னின்ன பொருள்களில் அடங்கியிருக்கவேண்டு மென்றுமுள்ள நிபந்தனைகள் கவிஞனது மனுேதர்மத்தை வளரச்செய்யுமா? இலக்கண விளக்கமென்னும் சிறந்த நூல், மலேமகள் என்று அமங்கலப் பொருள்படத் தொடங்கு தலே ஆக்ஷேபித்துப் புலவரேறு என மதிக்கப்படும் சிவஞான சுவாமி கள் குறைகூறினுரென்பதை அறியாதார் யார்? இதைத் தற்காலத்துக் கல்வி வல்லார் அங்கீகரிப்பரோ? மேற்கூறிய சுவாமிகள் செய்தது போன்ற குதர்க்கவாதச் சண்டமாருதத்தினுற் கவியென்னும் பசுங் கொம்பு முற்காலத்திற் சிதற அடிக்கப்பட்டதென நாம் அறிய வேண்டும்.

ஆருவதாக, நமது காவியங்களெல்லாம் மதசம்பந்தமாக எழுந் தனவாயுள்ளன. பாரதம், இராமாயணமென்னும் இதிகாசங்களும், பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் முதலிய புராணங்களும் காஞ்சிப்புராணம், குற்ருலப் புராணம் முதலிய ஸ்தல புராணங்களும் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய திருமுறைகளும் தாயுமானவர், பட்டினத்தார் முதலியோரது தோத் திரப்பாக்களும் பதிகம், பரணி, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, உலா, அந்தாதி முதலிய பிரபந்தத்தொகைகளும் சைவ வைஷ்ணவ வைதிக மதங்களைத் தழுவி இயற்றப்பட்டனவேயாகும். சிந்தாமணி, மணிமேகலே, சூளாமணி முதலிய நூல்களினும் ஜைன புத்தமதக் கொள்கைகள் நிரம்பப் பயின்றுவந்திருப்பதைக் காணலாம். ஆனுல், சங்க நூல்களில் இவ்வாறு காணுதல் அரிது. புறநானூறு, கலித் தொகை முதலிய தொகை நூல்களை நோக்கினுல் இங்கே கூறியதன் உண்மையறியலாம். இந்தச் சமயப்பற்று ஆரியரோடு ஊடாடின பிறகுதான் திராவிடர்களிடம் அளவுக்கு மிஞ்சி அதிகரித்து விளங் கியதெனத் திட்டமாகக் கூறக்கூடும். உதாரணமாக அக்காலத் திருந்த தமிழர்களுடைய பெயர்களையும் தற்காலத்துத் தமிழர் களுடைய பெயர்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால் நாம் மதத்தால் முற்றும் விழுங்கப்பட்டோமென்பது அறியலாகும். ஜீவிதத்தி

லேயே மதப்பற்று அளவுகடந்து நிலைபெற்றால் அது சமுதாயத் தாரது இலக்கியத்திலும் புகாதிருக்குமோ? பிற்காலத்துத் தமிழ் நூல்களெல்லாம் மேற்கூறிய காரணத்தால் மதநூல்களேயாயின. சிதம்பரம் — இராமலிங்கசுவாமிகளின் கவித்திறம் அருட்பாவை வாசித்து அதில் ஈடுபட்டோர் யாரும் எளிதிலுணருவர். எனினும் இவரது அருமையான கவித்திறத்தைப் பக்திக் கடலின்மட்டும் கவிழ்த்தனரேயன்றி மனிதரது உலகவாழ்க்கைத்குத் துணையான வேறுகாவியத்துறைகளிற் காட்டினாரில்லை. இது மிகவும் விசனிக்கத் தக்கதே.

ஏழாவதாகச் சங்கச்செய்யுட்களை யொழித்த பிற்காலத்துக் காவியங்களில் 'உண்மை' முழுதும் மறக்கப்பட்டது. அவைகளிற் பிரகிருதிவருணனை தவறாகவே இருக்கும். அரசர்கள் கூடவேண்டு மாயின் ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் கூடிவிடுவார்கள்! 'திணை' 'திணைமயக்கம்' முதலிய வருணனைகள் கவிஞனது சொல்வளத்தைக் காட்டவேண்டியதே தவிர நிலவளத்தைக் காட்டவேண்டியதில்லை. 'வரம்பெலா முத்தம் தத்தும் மடையெலாம் பணிலம்' என்ற மாதிரி எங்கு நாம் கண்ணைத்திருப்பினும் பொற்குன்றமும் முத்தின்குவையும் பவளத்திரளுமேயல்லாது வேறொன்றுமில்லை! பசையற வறந்த பாலை நிலமேயானாலும் கவிசாதுரியத்திற்காக அது பாலும் தேனும் பொங் கித் ததும்பும்! உருவத்தால் எப்புருடனும் மன்மதனுதலும் எப்பெண் ணும் இரதியாதலும் சர்வசாதாரணம்! வறுமைநோயால் நலியப்பட்ட மாந்தரும் குபேரராய்விடுவார்கள்! சுருங்கச் சொல்லிற் கவிஞ னுடைய இயற்கை வருணனைகளை அலங்காரமாக நாம் எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர உண்மைக் கூற்றாக நினைத்துவிடக் கூடாது அலங்கார சாஸ்திரத்தில் 'உயர்வு நவிற்சியணி' என்று ஒரு அணியிருப்பதாக அறிவீர்களே. அது மிதமாகக் கையாடப்படு மானாற் கவிக்கு ஒருவித அழகும் மனதிற்கு ஒருவித இன்பமும் கொடுக்குமென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் இந்தியக்கவிகள் அதனை அளவுகடந்து உபயோகப்படுத்தி அருவருக்கத்தக்க விதத்தில் ஆக்கிவிடுகின்றனர். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சல்லவோ? ஆங்காங்குச் சிற்சில இடங்களில் உபயோகப்படுத் தினால் அணியாகும்; இல்லாவிட்டால் அது மகிழ்ச்சியைக் கொல்லும் பிணியாகவே முடியும்.

எட்டாவதாக, நமது காவியங்களிற் சந்மார்க்க நாசத்திற்கேது வான கதைகளும் வருணனைகளும் மலிந்து கிடக்கின்றன. பாதாதி கேச வருணனையில் ஸ்திரீகளின் ஒவ்வொரு அவயவமும் வருணிக்கப் படாவிடிற் குற்றமாக முடியுமாம். கலவிப்போரைப் பாரதத்திலும் பெரியபோராக விரித்து வருணிக்கின்றார்கள் அதிவீரராமபாண்டியன் முதலிய புலவர்கள். வாலியைக்கொன்ற இராமனது வஞ்சனையும் பாரதப்போரில் சூரியனை மறைத்த கிருஷ்ணனது வஞ்சனையும் இகழத் தக்கனவாயிருந்தும் மதக்கோட்பாட்டின் மருட்சியாற் புகழப் பட்டன. சாதாரணக் கவிஞர்கள் இங்ஙனம் இழுக்கினும் சைவ சித்தாந்த பானுவாய் விளங்கித் திராவிட மகாபாஷ்யம் வகுத்த முனி

புங்கவரும் இராமாயண நாந்திச்செய்யுட்கு நூறு குற்றங்கூறித் தமது பெருமையை நிலைநாட்டினவருமாகிய சிவஞானசுவாமிகள் தமது காஞ்சிப் புராணத்திற் சுரகரீசப்படலத்திற் கூறியுள்ளது போன்ற ஆபாசக்கதைகளைக் கூறுதல் தகுதியாகுமா? சைவசமய ஆசாரியர்களின் தலைவரான ஞானசம்பந்தருங்கூடப் பாண்டிமாதேவியை வருணிக்குமிடத்து, 'பையரவ .... ...பாண்டிமாதேவி' என்று கூறி நம்மைப் பிரமிக்கச்செய்கின்றார்.

இக்குறைகளாகிய கொப்புளங்களாற் காவியம் என்னும் மெல்லணங்கின்றேகம் விருபமடைத்திருக்கின்றதென்பதை யாரும் சம்மதிக்கவேண்டும். இம்மாதிரிப் பல குற்றங்களும் அம்மெல்லியலைப் பீடிக்கத் தக்க காரணங்கள் உண்டென்றே சொல்லுவேன்.

(i) *சமுதாயத்தாரது அறிவின் வறுமை:*—சிறந்த காவியங்கள் அமையவேண்டுமாயின் அவற்றிற்குத்தக்க கருத்துச் செல்வம் மிகுதியாக விருத்தல்வேண்டும். கருத்துச்செல்வம் உண்டாவது சமுதாயத்தாரது பலதிறப்பட அநுபவ முதிர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. அநுபவ முதிர்ச்சியென்பது அறிவு முதிர்ச்சியே. ஆதலால் அறிவு முதிர்ச்சியில்லாதே அஞ்ஞானம் என்னும் இருளிற் கிடந்து தத்தளிக்கும் மனிதர்களிடையிற் பெருங்காவியங்கள் உதிப்பது அருமை. இயற்கையிலேயே அதி நுட்ப புத்திவாய்ந்த புலவர்களும் தம் கால தேசங்களினாற் கட்டுண்டு கிடக்கவேண்டியதாய் ஏற்படுகின்றது. தம் சமுதாயத்தாரோடு ஒட்டியொழுகுதல் வேண்டுமே தவிர அவரைப் புறமே நிராகரித்துத் தள்ளி மேற்சொல்லுதல் சாலாது. ஆகையினாற்றான் ஒவ்வொரு கவிஞனது நூலினும் அவனது சமுதாயத்தின் நிலையும் ஒருவாறு தோன்றி நிற்கிறது.

(ii) *கவியைப்பற்றிய தப்பெண்ணம்:*—கவியின் பொதுவான இலக்கணத்தைப்பற்றியும் சிறப்பிலக்கணத்தைப்பற்றியும் தவறான எண்ணம் நம்மில் அநேகர் இன்னும் வைத்திருக்கின்றனர். கவி நற்கலைகளில் ஒன்றென்றும் அதன் நோக்கம் இன்பம் பயப்பதே என்றும் முன் கூறியுள்ள உண்மையை இன்னும் அறியாதார் மிகப்பலர். மாத்தியு ஆர்னல்டு (Mathew Arnold) என்ற ஆங்கில ஆராய்ச்சியாளர் ஜீவித மகத்துவங்களை ஆராய்ந்து விளக்கும் கருவியே கவியாம் என்று கூறியதனால் மாத்திரம் கவி நற்கலையாகாமற்போய் விடுமா?

(iii) *அளவுகடந்த மதப்பற்று:*—இதனால் மதவிஷயங்களை எடுத்துக் காவியம்புனைவார் நற்கலையுணர்ச்சிகளை விருத்தி செய்யுமாறு கவிபுனையாது மதவுணர்ச்சியை மட்டிலும் விருத்தி செய்யக்கூடிய செய்யுட்களை இயற்றியிருக்கின்றனர். இதற்குப் பெரிய புராணம் கந்தபுராணம் முதலிய புராணங்களே சான்றாகும். இவைகள் உண்மைக் கவியின்பம் தரத்தக்கவையல்ல. இராமசரித்திரம் என்னும் ஒரே விஷயத்தை எடுத்துத் துளசீதாசரும் கம்பரும் காவியஞ் செய்துள்ளார்கள். துளசீதாசரது காவியம் பக்திச்சுவை துளும்பு

தலின் மதவுணர்ச்சியை விருத்திசெய்வதும், அதுபோலாது கம்பரது காவியம் கவிச்சுவை துளும்புதலின் நற்கலையுணர்ச்சியை விருத்தி செய்வதுங் காணலாம். ஆங்கிலேய கவிஞராகிய மில்டனும் (Milton) இத்தாலியக் கவிஞராகிய டாண்டேயும் (Dante) மதவிஷயத்தைக் காரியார்த்தமாக எடுத்துகொண்டபோதிலும் அவர்களுடைய சிறந்த கவித்திறத்தால் உயர்தரமான காவியங்கள் இயற்றியிருக்கின்றார்கள்.

இங்கே கூறியதுபோன்ற பலகாரணங்களினால் நமது காவியங்களில் ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளை முழுதும் நீக்கிக் கவியை ஓர் உந்நத நிலைக்குக் கொண்டுவரவேண்டிய வழிகளைப்பற்றி இனி ஆலோசிப்போம். காவியம் இயற்றப்போகும் கவிஞன் இரண்டு முக்கிய விஷயங்களைக் கவனிக்கவேண்டும். அவையாவன :—

(i) காவியத்திற்காம் விஷயங்களைத் தெரிந்தெடுத்தல்.

(ii) அவ்விஷயத்தைக் குறித்துச் சிறந்த காவியம் புனையும் முறைகளையறிதல்.

இவ்விரண்டினும் ஒருபடியே கவனஞ்செலுத்தாவிடிற் காவியம் அழகு குன்றிவிடுதல் நிச்சயம். ஆதலாற் கவிஞர்கள் இவ்விரண்டினும் கவனஞ் செலுத்தக் கடமையுள்ளாராகின்றார்கள்.

காவியத்திற்குரிய விஷயங்களை எடுத்துக்கொள்வதில் பொதுவாகக் கவிஞனது அறிவுமுதிர்ச்சியும் அவனது வழுவுதலமையா உணர்ச்சிப் போக்குமே வழிகாட்டியாயிருப்பினும், புறமேயிருந்து சிலவிதிகளை ஏற்படுத்திக்கொள்வது நலமாகும். முதலாவது :— இன்பம் பயக்கும் விஷயங்களையே தெரிந்து எடுத்துக்கொள்ள வேண்டும். இவ் விதிக்குமாறுகவே ஆங்கில நாடகக் கவிஞராகிய ஷேக்ஸ்பியரது (Shakespeare) டீட்டஸ் அன்டிரானிக்ஸ் (Titus Antironicus) என்ற நாடகமும் பெரியபுராணத்திற் சிறுத்தொண்டர் சரித்திரமும் கவிஞர் கையிற்புகுந்த வாள்மாதிரி வாசிப்போர் மனத்தை அறுத்துப் போழ்கின்றன. தற்காலம் அபிநயக்கப்படும் புதிய நாடகங்களை நடித்துக்காட்டும் நடர்களோ எந்தக் கதையானாலும் நிமிஷநேரத்தில் நாடகமாக்கிவிடுவர்! ஒரு ராஜாவும் ஒரு விதூஷகனும் ஒரு ராக்ஷஷனும் ஒரு ரிஷியும் ஒரு கலியாணமும் வேண்டும்; கதை எவ்வளவு அசம்பாவிதமாயிருந்தாலுஞ் சரி; அது அவர்கள் கையில் நாடகமாகிவிடும்! அரபிக்கதையில் வருகிற அதியற்புத விநோத கதைகளெல்லாம் அவர்களுக்கு நாடகத்திற்காம் கதைகளே! அறிவு முதிர்ச்சியில்லா, இந்நடர்கள்போலாது கவிஞர் தாமியற்றும் காவியத்துக்கு விஷயம், நற்கலையுணர்ச்சி வழியால் ஆராய்ச்சி செய்தே எடுத்துகொள்ளவேண்டும். இரண்டாவது :—சாஸ்திர விஷயங்களோ, சரித்திர விஷயங்களோ எடுத்துக் கொள்ளப்படினும் அவைகளில் உதிக்கும் உண்மைகளைக் காவிய இன்பமெனும் அமுதளாவியே படைக்கவேண்டும். ஷெல்லி (Shelly) யெனும் ஆங்கிலக்கவி இயற்றிய 'மேகம்' (Cloud) என்னும்

கவிதையை வாசிப்போருக்கு இவ்வுண்மை நன்ருகப் புலப்படும். மூன்ருவது :—இன்பவுணர்ச்சிக்கு இடங்கொடுக்காத விஷயமோ அல்லது துன்பவுணர்ச்சியை மட்டும் தரத்தக்க விஷயமோ எடுத்துக் கொள்ளப்படின் அவற்றைக் குறித்து விஸ்தரியாமல் அவற்ருேடு சார்புள்ள வேறு இனிமை தரத்தக்க விஷயங்களேயும், அதுவும் சாத்தியமில்லேயெனக் கண்டால் அவ்விஷயத்தினின்றெழும் நமது கருத்துக்களேயும் உணர்ச்சிகளேயும் இன்பவழிப்படுத்தி வருணிக்க வேண்டும். கிரே (Grey) என்னும் ஆங்கிலக்கவிஞரின் 'எலிஜி' (Elegy) என்று சொல்லுகிற இரங்கற்பா முன்னதற்கும், கூப்பர் (Cowper) என்பவரின் 'சோபா' (Sofa) பின்னதற்கும் உதாரணமாய் எடுத்துக்கொள்ளலாம். நான்காவது :—எடுத்துகொள்ளப்படும் விஷயம் இயன்றவரையிற் புதிதாயிருப்பின் நலம். எப்பொழுதும் புது விஷயம் கவிஞர் எடுத்துக்கொள்வதில்லே. ஏனெனில் ஜனங்கள் ஏற்கெனவே அறிந்திருக்கும் விஷயமாளுல் அதைக்கொண்டெழுந்த காவியம் ஜனங்களுடைய மனதில் நன்ருகப் பதிந்து இன்பங் கொடுக்குமென்று கவிஞர்கள் நம்புகிருர்கள். இது மறுக்கக்கூடிய தன்று. எனினும் நூதன விஷயங்களாக விருப்பின் ஜனங்களுக்கு முன்னதினும் பல மடங்கு ஆநந்த முண்டாமென்பதற்குச் சந்தேக மில்லே.

ஒரு தக்க விஷயம் தெரிந்தெடுத்துக் கொண்டபின் காவியம் இயற்றும் முறையிற் கவிஞன் சிற்சில விதிகளேக் கையாடல்வேண்டும். இவைகள் :—

1. காவியத்தின் பொருளேப்பற்றியன
2. காவியத்தின் உருவத்தைப்பற்றியன

என்று இருவகைப்படும்.

பொருளேக் கவனிக்குமிடத்து, முதலாவது :—கவிஞன் காவியம் புனேயும் ரீதியில் ஆலோசனே செய்யவேண்டும். கதையின் போக்கை முற்பட வகுத்துக்கொண்டு அம்முறை வழுவாது ஒரேரீதியில் அதனே அமைக்கவேண்டும். சில இடங்களில் அநாவசியமாக விரித்தும் சிலவிடங்களில் அநாவசியமாகச் சுருக்கியும் கதை நடைபெறச் செய்தல் கூடாது. நைடதமென்னும் காவியம் சென்று தேய்ந்திறுதல் என்னும் குற்றத்திற்கு இலக்கானது, இவ்விதியை ஆசிரியர் கவனியாதபடியால்தான். மேலும் பெருங்காப்பியங்களுள், சிறு கதைகள் ஆங்காங்குக் கிளேகளாகப் பிரியவேண்டுமாளுலும் முக்கிய கதையின் ருெடர்ச்சியை அவை முறித்துவிடாவண்ணம் கதைகள் இயக்கப்பட வேண்டும்.

இரண்டாவது :—காவியத்தில் வரும் இயற்கை வருணனேயோ, நாயகன் நாயகி முதலிய பாத்திரங்களின் வருணனேயோ, உண்மை யோடு முரணுதிருக்கவேண்டும். இவை உண்மையினின்று பிறழு மாயின் நற்கலேயின் முக்கிய நோக்கமான இன்பம் இல்லாதொழி கின்றது. இவ்விதியை ரஸ்கின் (Ruskin) என்ற ஆங்கில கலாசாஸ்திரி

விரிவாகத் தமது நூல்களிற் பலவிடத்தும் கூறுகின்றார். ஆனால், இன்பம் பயத்தலைக்கருதி உண்மையை அலங்கரித்து மாற்றிக் கூறுவதனாற் கவிஞன் உண்மையைக் கைவிட்டவனாகமாட்டான். காமத்தை ஒரு வெப்ப நோயாக வருணிப்பது தமிழ்க்கவிஞரின் மரபு; அதனாற் கிடக்கை மலர் கரிந்துபோவது வெப்பத்தின் கொடுமையைக் காட்டக் கவிஞர் எடுத்துக்கொள்ளும் கற்பனை. இதனைப் பொய்யென்று தள்ளவேண்டிய ஆவசியமில்லை. ஓரணியாக மாத்திரம் மதிக்கவேண்டும். கற்பனை ஆவசியங்களுக்கல்லது இயற்கையுண்மைகள் சிதைய ஒருவன் கவி இயற்றுவானாகில் அது இன்பம் பயக்கும் கவியின் மூல லக்ஷணமே பொருந்தாதாகிவிடும்.

மூன்றாவது :—சொல்லைப்பார்க்கிலும் பொருளிற் கவனம் செலுத்தப்படல்வேண்டும். சிறந்த பொருளமைதியில்லாக் கவி உயிரில்லா உடம்பு போலாம். இவ்வகைச் செய்யுட்களை ஆங்கிலத்தில் (Verse) (யாப்பு) என்றும், அதை இயற்றுகின்றவரை (Versifir) யாப்புறுப்போர் என்றும் கூறுவர். கவியிற் பொருள் நயம் ஏற்படுதற்கு முக்கிய காரணமாவது கவிஞனது மனோதர்மமே. இதில் ஒரு பகுதியை ஆங்கிலேயர் (Creative Imagination) கற்பனாசக்தி என்று பெயரிட்டு வழங்குகின்றனர். இந்தச் சக்தியோடு ஒரு கவிஞனுக்கு ஏராளமான காவியக் கருத்துக்களும் (Poetical ideas or Concepts) வேண்டும். இது உணர்ச்சி வழியொழுகும் புத்திசாதுரியத்தினால் வரவேண்டிய பாகம். இவ்விருவகை மானஸ தத்துவங்களாலும் பொருட்செறிவும் பொருள் வனப்பும் கவியில் ஏற்படும். இப்படிக்கன்றிப் பொருளை முழுதும் விளக்கிக் காட்டுவது கவியின் லக்ஷணமாகாது. ஒரு சரித்திரகர்த்தா கதைத்தொடரைச் சாங்கோபாங்கமாக விரித்து ஒன்றையும் விடாது கூறக் கடமைப்பட்டவராகிறார். கவிஞனோ அங்ஙனம் செய்தல் கூடாது. சிற்சில விடங்களிற் கதைத் தொடரையும் அதில் வரும் சம்பவங்களையும் கதா புருஷர்களின் மனோபாவங்களையும் அவர்களது சம்பாஷணைகளையும் சிறிது சூசிப்பித்து விட்டுவிடவேண்டும். இவ்வித சூசனைகளிலிருந்து காவியம் வாசித்தோ கேட்டோ உணர்வார் மனதில் அநேக தொனிப்பொருள்கள் தோன்றுமாறு கவிபுனைதல் வேண்டும். இதனையே ஆங்கில நூலார் (Suggestiveness) என்றும், வடநூலார் வியங்கியம் என்றும் கூறுவர். இதுவே கவியின் உயிர்நிலையென் றெண்ணுங்கள். கம்பராமாயணத்திற்குப்பின் வந்த புராணகர்த்தகளில் அநேகர் இவ்வரிய இலக்கணம் பெறாது கவிஞர் என்னும் பெயருக்கே உரியரல்லராய் விடுகின்றனர்.

நான்காவது :— காவியத்திற் சன்மார்க்கவழு ஏற்படாதிருக்க வேண்டும். வாய்மை, பொறுமை, தயை முதலிய நற்குணங்களுள்ளார் இன்புறுதலும் அவையில்லார் துன்புறுதலும் ஆவசியமே. இதனையே மேற்றிசையோர் (Poetical Justice) காவியநீதி என்று சொல்லுவர். ஆயினும் சிற்சில இடங்களில் தருமம் தாழவும் அதருமம் தழைக்கவும் காண்கின்றோம். இம்மாதிரிக் கதைகளைக் கவிஞர் எடுத்துக் கொள்வார்களேயானால் அவைகளை விஸ்தாரமாகக் கூறுமிடத்துக் கேட்போர் வாசிப்போர் மனதில் அவை ஒரு குறைபாடான

நிலையைக் குறிக்கின்றன என்று தோன்றுமாறே அறிவுறுத்தல் வேண்டும். சந்மார்க்கத்தோடு முரணிக் காவியம் புனைவது நலம் பயக்கவேண்டியதோர் சக்தியைத் தீயவழியிற் செலுத்துவதாகும். பைரனுடைய (Byron) டான் ஜுவான் (Don juan) என்னும் ஆங்கில காவியமும் தமிழில் அகத்திணையிற் களவினைச் சிறப்பித்துக் கூறும் நூல்களும் இவ்விதிக்கு மாறுபாடாகவே எழுதப் பெற்றனவென்று அறியக்கிடக்கின்றன. விறலிவிடுதூது என்ற நூல் சிறுவரை நன் னெறியில் ஊக்குமென யார்தாம் சொல்லுவர். இதையொட்டி அதி வீரராமபாண்டியர், கம்பர் இவ்விருவரையும் ஒப்பிட்டு நோக்குங்கள். நளனும் தமயந்தியும் அநுபவித்த சுகத்தை எத்தனையோ செய்யுட் களில் விரித்து வருணிக்கின்றார் முன்னவர். கம்பரோவெனின், சீதை பால் இராமன்றுய்த்த இன்பத்தை, 'மார்க்கட லன்ன மனத்தவ ளோ டும், கார்க்கடல் போல்கரு ணைக்கடல் பண்டைப், பாற்கட லன்ன தோர் பள்ளி யணைந்தான்' என்றவளவே சூசிப்பித்துள்ளார். ஒரு உயர்தர கவிஞன் சந்மார்க்கபோதனுகவும் ஏற்பட வேண்டியவனு தலால் அறநெறி வழுவாவண்ணம் சில சம்பவங்களை மறைக்கக் கடமைப்பட்டவனாக ஆகின்றான்.

இனி, காவியம் புனையும் முறையில் உருவத்தைப்பற்றியுள்ள விதிகளை யாராய்வோம். முதலாவது :—ஜனங்களிடை வழங்குகின்ற சொற்களையும், சொற்றொடர் முறைகளையும் அநுசரித்தே காவியம் புனைதல் உசிதமாகும். ஆனால் அங்ஙனம் புனையுங்காலத்து பாஷை யைச் செய்யுள் நடையாக்கிக் கொள்ளுதற்குத் தக்க வேறுபாடுகள் முறையறிந்து செய்து கொள்ளப்படல் வேண்டும். சுவபாஷாரீதி யைச் சற்றுங் கவனியாது, சிறிதும் தொடர்பில்லாத அந்நிய பாஷா ரீதியிலே தமிழிற் காவியமியற்றப் புகுவோமானல், அது வீண் முயற்சியாகவே முடியும். 'வீல நாடகம்', 'இரவிவர்மா' என்ற நாடக நூல்கள் இதனை உண்மைபடுத்தும். இப்படிச் சொல்லுவதனல் முழு மாமூலைப் பின் தொடர்ந்தே கவியியற்றல் வேண்டுமென்று நான் சொல்ல வரவில்லை. நமது காவிய அமைப்பிற் சிற்சில விடங் களில் மாற்றம் செய்தால் நலமாகவே யிருக்கும். அவைகளை இங்கே விரிவாக எடுத்துக்காட்ட வேண்டாமென்று நினைக்கிறேன். பாயிரம், காப்பு, அவையடக்கம், பதிகம், நாட்டுப்படலம், நகரப் படலம் முதலிய நூலுறுப்புக்கள் இனிவருங் காவியங்களில் இதுவரை உள்ளனபோலவே இருக்கவேண்டுவது ஆவசிகமில்லை. இப்படிக் கருப்பிடித்துக் கொடுத்தனுற்றான் கவிஞரது மனோதர்மம் அவை களிற் கட்டுண்டு காவியங்கள் ஒரே மாதிரியில் வார்க்கப்பட்டு வந்தன. இவ்வழக்கத்தினுற் புதியன புனையும் ஆற்றல் (Originality) அறவே கெட்டுவிட்டது.

இரண்டாவது :—கவியை அலங்கரிக்கும் அணிகள் புதியனவாக வும் பொருத்த முடையனவாகவும் மனதிற்கு இன்பம் தரத்தக்கன வாகவு மிருக்கவேண்டும். 'பிறைநுதல்' என்று சொல்லிச் சொல்லி நுதலினது விசேஷ அழகைக் கெடுத்தார்களேயன்றி அதனை மேம் படுத்தினர்களில்லை. முற்காலக் கவிஞர்களைத் தொடர்ந்தே பிற்

காலக் கவிஞர்களும் அலங்காரங்களை அமைத்துக்கொள்ள வேண்டு மென்பது ஆவசிகமில்லை. மேற்றிசைக் கவிஞர்கள் அணிபுனை வதிற் றத்தம் மனோதர்ம வழியே சென்றிருக்கின்றார்கள். இதனால் அவர்களுடைய காவியங்கள் நூதன அணிகளால் அலங்கரிக்கப் பெற்று வாசிப்போரது மனதைக் கவருகின்றன. தமிழ்க் கவிஞர் களிற் பிற்காலத்தார் புனைந்துள்ள காவியங்களோ ஒரு அச்சிலே யிட்டு அடித்த பிரதிகள் மாதிரி ஒரே தன்மையுடையனவா யிருக் கின்றன. இதனால் அவற்றிற் காவியச்சுவை குன்றிவிடுகின்றது.

மூன்றாவது :—சொற்களைப் புணர்த்திச் சிருஷ்டிக்கும் காவிய நடையிற் முக்கிய குணங்க ளமைதல் ஆவசிகம்.

(1) முதன்முதல், தெள்ளிய நடையாக விருக்க வேண்டும். கவியினது பொருள் வாசிப்போர் மனதில் எளிதிற் பதியத்தக்கதாக விருத்தல் வேண்டும். பொருளைப்பற்றி மயங்குதற்கோ திகைப்ப தற்கோ கவியிடங்கொடுக்கக் கூடாது. இந்தத் தெளிவு என்னும் கவியின் உத்தம குணத்தைக் கம்பர் தமது இராமாயணத்திற் பல விடங்களிலும் அழுத்திக் கூறுகின்றார். ஒரு கவியிற் 'புன்கவி யெனத் தெளிவின்றி' என்றனர். பம்பை வருணனையில் அந்நீர் நிலையின் தெளிவையும் ஆழத்தினையும் வியந்து 'கற்பக மனையவக் கவிஞர் நாட்டிய சொற்பொரு'ளோடு உவமிக்கிறார். கோதாவரியை வருணிக்குஞ் சந்தர்ப்பத்திலும் 'சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர் — கவியெனக் கிடந்த கோதா வரி யினை வீரர் கண்டார்' என்று எடுத்துக் கூறுகின்றார். கவியில் இத் தெளிவு ஏற்பட வேண்டுமானாற் கவிஞரது கருத்துக்கள் தெளிவு பெற்றிருப்பதோடு அக்கருத்துக்களைத் தக்க சொற்றொடர்களில் அமைத்து நமக்குப் புகட்டவும் சக்தி ஏற்படவேண்டும். இவற்றில் முன்னது இயற்கை நலத்தாலும், பின்னது காவியம் முதலிய நூற் பரிசீலனையினாலும் வருமே தவிர வேறல்ல.

(2) ஒழுகிசை நடையினவாகவும் கவிகள் இருத்தல் வேண்டும். இந்நடை கம்பராமாயணத்திற் பலவிடங்களிலும் பயின்றுள்ளது. ஒழுகிசை நடையென்றால் வாசிப்போனது நாத் தடையுரு வண்ணம் ஆற்றொழுக்குப்போலக் கவியோடிச் செல்வது. இராமாயணத்திற் கங்கைப் படலத்து முதல் நான்கு கவிகளையும் வாசித்து அவற்றின் ஒழுகிசையை யறிந்து ஆனந்திக்க வேண்டியதே :

'வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
வையோவிவன் வடிவென்பதொ ரழியா வழகுடையான்.'

கலன்காண் படலத்தில் 34-வது கவிதொடங்கி இறுதிவரை வாசித்துப் பார்க்க. பள்ளத்துப் பாயும் நன்னீர் போலவே தட்டுத் தடையில்லாமல் விரைந்து செல்லும் கவியினிசையில் உங்கள் மனதும் இழுக்கப்பட்டுப் போய்விடும்.

'வெங்கணாளி யேறுமீளி மாவும்வேக நாகமும்
சிங்கவே றிரண்டொடுந் திரண்டவன்ன செய்கையார்
தங்குசால மூலமார் தமாலமேல மாலைபோற்
பொங்குநாக முந்துவன்று சாரலூடு போயினர்.'

கார்முகப் படலத்தில் 47-வது கவி முதல் 55 வரையுள்ளன வெல்லாம் ஒழுகிசையினை விளக்கும் செய்யுட்களே.

'நாணுலாவு மேருவோடு நாணுலாவு பாணியும்
தூணுலாவு தோளும்வாளி யூடுலாவு தூணியும்
வாணிலாவி னூலுலாவு மாலைமார்பு மீளவும்
காணலாகு மாகினவி காணலாகு மேகொலாம்.''

கைகேசி சூழ்வினைப் படலத்தில் 46-முதல் 63-வரையுள்ள பாடல்களும் இவ்வொழுகிசையை நன்கு காட்டும்.

(3) நடை சந்தர்ப்பந்தத்திற்குத் தக்கதாகவுமிருத்தல் வேண்டும். இராக்கத வேஷத்தை விடுத்து ஸ்ரீராமனை வசீகரிக்கத்தக்கதான அழகியதோர் மெல்லுருவம் தாங்கிச் சூர்ப்பணகை வருதலைக் கம்பர் கீழ்வருமாறு வருணிக்கின்றார் :

'பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்சையென வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.'

இதன் பின்வரும் ஆறு கவிகளும் சூர்ப்பணகையின் வசீகர சக்தியைத் தெள்ளிதிற்காட்டும். தாடகையின் கோரவுருவத்தையும் கோபக் குறியையும் வருணிக்குமிடத்து வல்லின எழுத்துக்கள் மிக்கு வரச் செய்யுளியற்றியுள்ளார்.

'இறைக்கடை துடித்தபுரு வத்த ளெயிறென்னும்
பிறைக்கடை பிறக்கிட மடித்தபில வாயள்
மறக்கடை யரக்கிவட வைக்கன லிரண்டாய்
நிறைக்கடன் முளைத்தென நெருப்பெழ விழித்தாள்.'

இரவிற் றுயின்றவரை மெல்லிய ஒலியாற் காலையிலெழுப்பும் பல வாத்தியங்களும் அயோத்தியா நகரில் எவ்விதம் முழங்கினவென்று கூறுமிடத்துக் கம்பர்தரும் அழகிய செய்யுளை முன்னதோடு ஒப்பிடுக. மெல்லின இடையின வெழுத்துக்களே இதில் மலிந்து வருகின்றன.

'வங்கியம்பல தேன்வி ளம்பின வாணி முந்தின பாணியின்
பங்கியம்பர மெங்கும் விம்மின பம்பை பம்பின பல்வகைப்
பொங்கி யம்பல வுங்க றங்கின நூபு ரங்கள் புலம்பவெண்
சங்கியம்பின கொம்ப லம்பின சாம கீதம் நிரம்பவே.'

பரசுராமன் கோபாக்கினியால் ஜொலிக்கும்போது உலகமானது பயத்தாற் பீடிக்கப்பட்டு நடுக்குற்றுத் தளர்வதைக் கீழ்வரும் கவியில் வருணிக்கின்ருர். பெரும்பயத்தால் ஏற்படும் தேக நடுக்கும், பயம் அளவு கடந்துபோகும் போதுண்டாம் ஸ்தம்பிதம் அல்லது நடுக்க மின்மை இவையாவும் அக்கவியடிகளிற் குதித்துநிற்கக் காணலாம்.

'கம்பித் தலையெறி நீருறு கலமொத் துலகுலையத்
தம்பித் துயர்திசை யானைக டளரக் கடல்சலியா
வெம்பித் திரிதர வானவர் வெருவுற் றிரிதரவோர்
செம்பொற் சிலைதரி யாவயின் முகவா ளிகடெரிவான்.'

விரைவுக்குறிப்பைக் காட்டவேண்டிக் கம்பர் எடுத்துக்கொண்ட 'சந்தமும்' 'சொற்சுருக்கமும்' மிகவும் பாராட்டத் தக்கன.

'மாலு மக்கணம் வாளியைத் தொட்டதும்
கோல விற்கால் குனித்ததுங் கண்டிலர்
காலனைப் பறித்தக் கடியாள் விட்ட
சூல மற்றன துண்டங்கள் கண்டனர்.'

இதுபோலவே கார்முகப்படத்திலும்,

'தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினில் யாரு மறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்.'

(4) கவியினது நடை அதனை இயற்றும் கவிஞனுக்கே உரித்தான விசேஷ வனப்பு வாய்ந்த நடையாக விருக்கவேண்டும். இதனை ஆங்கில நூலார் Individuality of Style என்று கூறுவர். மகா காவியங்களிலெல்லாம் இக்குணம் ஏற்படாமலிராது. கம்பரது கவிப் போக்கை யாண்டும் அறிந்துகொள்ளலாமென்பதே எனது துணிபு. இந்த நடை விசேஷத்தை வைத்தே அவரது காவியத்தில் இப்போது உள்ள இடைச்செருகற் செய்யுள்களை இரத்தினங்களுடன் கலந்த பருக்கைக்கற்களைப் போல எளிதிற் பிரித்தெடுத்து விடுதல்கூடும்.

நான்காவது :—கவிக்குத் தக்க சொற்களைத் தெரிந்தெடுத்தல். பொருளினுற் கவியழகு பிரகாசிக்குமானுலும் சொல்லழகும் உடன் சேரிற் பொன்மலர் மணம்பெற்றதுபோல் அதிகமாகச் சோபிக்கும். இயற்கையிலேயே பொருள் வனப்புள்ள செய்யுள்கள் சொல் வனப் புடனேயே யாக்கப்படுகின்றன. சொல் வளங்குன்றுவது கவிஞனது கருத்தின் வறுமைபற்றியே யன்றிப் பிறிதன்று. ஆயினும் சோனு மாரியாக ஒரு கவிஞன் சொற்கள் பொழியவேண்டுமானுல் பல்வேறு இலக்கியக்கடலையும் அவன் பருகியிருக்கவேண்டும். சொற்களைத் தெரிந்தெடுத்துக் கொள்வதிற் கவிஞன் கவனிக்கவேண்டிய விஷயங் களாவன :—

(1) எளிய, தெள்ளிய சொற்களைத் தெரிந்தெடுத்துக்கொள்ளல் வேண்டும், கடினமான பதப்பிரயோகங்களும் பல பொருள் பயக்கும் சொற் பிரயோகங்களும் கூடாவாம். கீழ்வரும் இராமாயணச் செய்யுட்களைக் கவனியுங்கள். உரையாசிரியரின் உரையின்றியே அவற்றின் பொருள் அறியக் கிடக்கின்றது.

'ஓங்குமர னேங்கிமலை யோங்கிமணை லோங்கிப்
பூங்குலை குலாவுகுளிர் சோலைபுடை விம்மித்
தூங்குதிரை யாறுதவழ் சூழலதொர் குன்றின்
பாங்கருள தாலுறையுள் பஞ்சவடி மஞ்ச."

—அகத்தியப்படலம் 5.

'மயிலும் பெடையு முடன்றிரிய மானுங் கலையு மருவிவரப்
பயிலும் பிடியும் கடகரியும் வருவ திரிவ பார்க்கின்றான்
குயிலுங் கரும்புஞ் செழுந்தேனுங் குழலும் யாழுங் கொழும்
[பாகும்
அயிலு மமுதுஞ் சுவைநீத்த மொழியைப் பிரிந்தா லழியானே.'

—அயோமுகிப்படலம் 29.

'அருந்துதற் கினியமீன் கொணர வன்பினால்
பெருந்தடங் கொம்பிடைப் பிரிந்த சேவலை
வருந்திசை நோக்கியோர் மழலை வெண்குரு
கிருந்தது கண்டுநின் றிரங்க லெய்தினான்.'

— விபீடணனடைக்கலப்படலம் 30.

இறட்டுறமொழிதலென்பது ஒருத்தியேயாயினும் செய்யுள் முழுவதுஞ் சேர்ந்து இங்ஙனம் இரண்டாவதோர் அருத்தம் பயந்தாலழகாயிருக்குமே தவிர அதிற் சிற்சில பதங்கள் மட்டிலும் இரு பொருள் தந்தால் அவை வாசிப்போர் மனதைத் திகைப்புறச் செய்யும்.

(2) எடுத்துக்கொள்ளப்படும் சொற்கள் பிண்டப்பொருளைத் (Concrete pictures) தரக்கூடியனவாயிருத்தல் வேண்டும், கேவல குணத்தைமட்டும் கூறும் மொழிகள் மனதினாற் பாவிக்கத்தக்க வுருவந் தரவேமாட்டா. அதனாலேயே கவிஞர்கள் மனோபாவங்களை இந்திரியங்கட்குப் புலப்படக்கூடிய தேக விகாரங்கள் அல்லது மெய்ப்பாடுகள் மூலமாக வருணிக்கின்றார்கள். அசோகவனத்திற் சீதையடைந்த துயரை நாம் உணருமாறு கம்பர் சொல்லும் கவியை நோக்குக :—

'விழுதல் விம்முதன் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுத லேங்குத லிரங்குத லிராமனை யெண்ணித்
தொழுதல் சோருத லுளங்குத லுயருழந் துயிர்த்தல்
அழுத லன்றிமற் றயலொன்றுஞ் செய்குவ தறியாள்.'

பிராட்டி களங்காண்படலத்திலும் சீதையின் ஆற்றெணுத்துயரம் வருணிக்கப்படுகின்றது.

‘விழுந்தாள் புரண்டா ளுடல்முழுதும் வியர்த்தா
ளுயிர்த்தாள் வெதும்பினுள்
எழுந்தா ளிருந்தாண் மலர்க்கரத்தை நெரித்தாள்
சிரித்தா ளேங்கினுள்
கொழுந்தா வென்ரு ளயோத்தியர் தங்கோவே
யென்ரு ளெவ்வுலகும்
தொழுந்தா ளரசேயோ வென்ருள் சோர்ந்தா
ளரற்றத் தொடங்கினுள்.’

மாயா சீதைப்படலத்திற் சீதை கொல்லப்பட்டாள் என்று அநுமாஞற் கேள்வியுற்ற இராமனது மனேதுக்கம் இதிலும் ஒருபடி கடந்து நிற்பதைக் காணலாம்.

‘துடித்தில னுயிர்ப்பு மில்ல னிமைக்கிலன் றுள்ளிக் கண்ணீர்
பொடித்தில னியாது மொன்றும் புகன்றிலன் பொருமி யுள்ளம்
வெடித்திலன் விம்மிப் பாரின் வீழ்ந்திலன் வியர்த்தா னல்லன்
அடுத்துள துன்பம் யாவு மறிந்தில ரமர ரேயும்.’

(3) எடுத்துக்கொள்ளப்பட்ட சொற்கள் உசிதமான சொற்களாயிருக்கவேண்டும். சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமில்லா மொழிகளையொழித்து விடவேண்டும்.

‘ஓதிம மொதுங்கக் கண்ட வுத்தம னுழைய ளாகுஞ்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவள் தானு மாண்டு வந்துநீ ருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்.’

இதில், சீதையின் மந்தகாசத்தைச் சிறிது உயர்த்திக் கூற வேண்டிப் ‘புதிய’வென்றும் ‘பூத்தாளெ’ன்றும் இரண்டு சொல்லைப் பொறுக்கிவைத்து அம்மெல்லியலின் அளக்கொணு அழகையும் குறிப்பித்தார். பூங்கொடி போல்வாள் சிரிப்பைப் ‘பூத்தாள்’ என்று சொல்லுவதும் அச் சிரிப்புப் புதுமலர்போல் ஒளியையும் மணத்தையும் மகிழ்ச்சியையும் தரத்தக்கது என்று சொல்லுவதும் எவ்வளவு உசிதமென்று பாருங்கள்.

அயோத்திநகரின் வெண்மாடங்களை வருணிக்கத் தொடங்கின கம்பர் தங்கவியில் என்னென்ன பொருள்களை என்னென்ன சொற்களிற் றெடுத்துத் தருகின்ருர் என்று கவனியுங்கள்.

‘திங்களுங் கரிதென வெண்மை தீற்றிய
சங்கவெண் சுதையுடைத் தவள மாளிகை
வெங்கடுங் கால்பொர மேக்கு நோக்கிய
பொங்கிரும் பாற்கடற் றரங்கம் போலுமே.’

—நகரப்படலம் 27.

இதில் வரும் ஏழு மொழிகளாற் குறிக்கப்படும் வெண்மை ஒன்ருகத் திரண்டு வெண்மையின் அதிதாவள்யத்தை நமது கண்முன் கொண்டு வராதிருக்குமோ ?

உண்டாடல் அமைந்தார் விரும்புவதான நிலாத்தோற்றத்தைக் கீழ்வருமாறு வருணிக்கிருர் :

'ஆறெலாங் கங்கையே யாய ஆழிதாம்
கூறுபாற் கடலேயே யொத்த குன்றெலாம்
ஈறிலான் கைலேயை இயைந்த என்னினி
வேறியான் புகல்வது நிலவின் வீக்கமே.'

இது நிலவின் தண்ணியவொளியை அதிகரித்துக் காட்டுகின்றதல்லவோ ! வெண்மையை இவ்விதம் வருணிக்கும் கவியே கருமையை எப்படி வருணிக்கிருரென்பதும் இங்கே கவனிக்கத் தகுந்தது.

விராதனது கரியவுருவத்தை எடுத்துப் பேசுங்கவி யிது :—

'தங்குதிண் கரிய காளிமை தழைந்து தவழப்
பொங்குவெங் கொடுமை வஞ்சனே புழுங்கி யெழமா
மங்குல் பாதகம் விடங்கனல் வயங்கி நிமிரக்
கங்குல் பூசி வருகின்ற கலிகால மெனவே.

இக்கவியிற் கருமை தழைத்து நிற்கின்றதை எளிதிற் காணலாம். இதுபோலவே தாடகை வாசஞ்செய்யும் பாலேநிலத்தின் கொதிப்பை வருணிக்குமிடத்து, 'சூடளவுகருவி' யினலு (Thermometre) மளக்க முடியாத சூட்டுமிகுதியைத் தமது வார்த்தைகளினுல் அளந்து காட்டுகின்ருர்.

'படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகருநா
முடியவே முடியமு டிருளும் வான் முகடும்வேம்
விடியுமேல் வெயிலும்வே மழையும்வே மின்னிஞே
டிடியும்வே மென்னில் வேறி யாவை வேவாதவே.'

(4) மிகுந்த சொல்வன்மை (copiousness of vocabulary) அமைந்திருக்கவேண்டும். அதாவது ஒரு பொருளேயோ ஒரு கருத்தையோ குறிப்பதற்குப் பல சொற்கள் கவிஞருக்கு வந்துதவவேண்டும். இல்லாவிடிற் கூறியமொழிகளேயே திரும்பக்கூறி இன்பத்தைக் குறைத்து விடுவர். பலவகை ஒலிக்குறிப்புச் சொற்களேக் கம்பர் உபயோகிக்கும் திறனேப் பாருங்கள் :

'ஆறுபா யரவ மள்ள ராலேபா **யமலே** யாலேச்
சாறுபா **யோசை** வேலேச் சங்குவாய்ப் பொங்கு **மோதை**
ஏறுபாய் **தமர** நீரி லெருமைபாய் **துழனி** யின்ன
மாறுமா ருகித் தம்மின் மயங்குமா மருத வேலி.'

— நாட்டுப்படலம்.

மிதிலை நகரத்தில் ஸ்ரீராமனை வந்து காணக் கூடின மாதர் வரும் விதம் பலமாதிரியெனக் காட்டப் பின்வருமாறு கூறுகின்றார் :

'மானினம் வருவ போன்றும் மயிலினந் திரிவ போன்றும்
மீனினம் மிளிர்வ போன்றும் மின்னின மிடைவ போன்றும்
தேனினம் சிலம்பி யார்ப்பச் சிலம்பினம் புலம்ப வெங்கும்
பூநனை கூந்தன் மாதர் பொம்மெனப் புகுந்து மொய்த்தார்.'

கவிவாணருக்குச் சொல்வன்மை ஆவசியம் வேண்டுமென்று கம்பர் தாமே முதற்போர்ப்படலத்திற் கூறுகின்றார்.

'பல்லிய லிலகுறு பாடை பாடமைந்
தெல்லையி னூற்கட லேற நோக்கிய
நல்லிய னவையறு கவிஞர் நாவரும்
சொல்லெனத் தொலைவிலாத் தூணி தூக்கினன்.'

சொல்வளம்போலவே கருத்துவளமும் இராமாயணத்தில் நிரம்பியுளதெனக் காட்டுதல் மிக எளிது. ஒரு கவிமட்டிலும் இங்கெடுத்துக் கூறுகிறேன்.

'நிலமகண் முகமோ திலகமோ கண்ணோ
நிறைநெடு மங்கல நாணோ
இலகுபூண் முலைமே லாரமோ வுயிரி
னிருக்கையோ திருமகட் கினிய
மலர்கொலோ மாயோன் மார்பினன் மணிகள்
வைத்தபொற் பெட்டியோ மலரோன்
உலகின்மே லுலகோ வூழியி னிறுதி
யுறையுளோ யாதென வுரைப்பாம்.

இவ்வாறு அயோத்தியா நகரம் வருணிக்கப்பட்டிருக்கின்றது.

(5) சொல்வன்மையோடு பலவிகற்பங்கள் அல்லது பேத கதியமைந்த சொற்றொடர் புணர்க்கும் வல்லமையும் ஓர் கவிஞனுக்கு ஏற்படவேண்டும். கம்பர் கண்ணென்னும் ஓர் உறுப்பை எவ்வித வேறுபாட்டுடன் பலவிடங்களிலும் வருணிக்கிறார் என்று பார்ப்போம்.

அ. 'கொல்லும் வேலுங் கூற்றமு மென்னு மிவையெல்லாம்
வெல்லும் வெல்லு மென்ன மதர்க்கும் விழி.'

ஆ. 'வென்றம் மானைத் தாரயில் வேலுங் கொலைவாளும்
பின்றம் மானச் சேர்கய லஞ்சப் பிறழ்கண்.

இ. 'புள்ளுறை கமல வாவிப் பொருகயல் வெருவி யோட
வள்ளுறை கழித்த வாள்போல் வரியுற வயங்கு கண்.'

ஈ. 'களிப்பன மதர்ப்ப நீண்டு கதுப்பினை யளப்ப கள்ளம்
ஒளிப்பன வெளிப்பட் டோடப் பார்ப்பன சிவப்புள் ளூற
வெளுப்பன கறுப்ப வான வேற்கண்.'

உ. 'நஞ்சிடை யமிழ்தங் கூட்டி நாட்டங்க ளான வென்னச்
செஞ்சவே நீண்டு மீண்டு சேயரி சிதறித் தீய
வஞ்சமுங் களவு மின்றி மழையென மதர்த்த கண்கள்.'

ஊ. 'குவளையி னெழிலும் வேலின் கொடுமையுங் குழைத்துக்
[கூட்டித்
திவளுமஞ் சனமென் றேய்ந்த நஞ்சினைத் தெரியத் தீட்டித்
தவளவொண் மதியுள் வைத்த தன்மைசால் தடங்கண்.'

எ. 'வாளும் வேலும்விட் டளாயின வனையகண்.'

ஏ. 'குருதி வாளெனச் செவ்வரி பரந்தகண்.'

ஐ. 'வடுவின் மாவகி ரிவையெனப் பொலிந்த கண்.'

ஒ. 'நெய்கொ ணீருண்டு நெருப்புண்டு நீண்டமை நிறைந்த
வைகொள் வேலெனக் காலனும் மறுகுறுங் கண்.'

ஓ. 'அஞ்சம்பையு மையன்றன தகலம்பையு மளவா
நஞ்சங்களை வெலவாகிய நயனங்கள்.'

ஔ. 'சேணுற நீண்டு மீண்டு செவ்வரி சிதறி வெவ்வே
றேணுற மிளிர்ந்து நாளு விதம்புரண் டிருண்ட வாட்கண்.'

இதை இம்மட்டில் நிறுத்திவிட்டுத் திரிமூர்த்திகளை இராமாயணத்திற் பலவிடங்களிலும் எங்ஙனம் குறிக்கின்றாரெனக் கவனிப்போம்.

அ. 'கரிய மாலினுங் கண்ணுத லானினும்
உரிய தாமரை மேலுறை வானினும்'

ஆ. 'உமைக்கு நாதற்கு மோங்குபுள் ளூர்திக்கும்
இமைப்பி னுட்டமொ ரெட்டுடை யானுக்கும்.'

இ. 'புலியினத ளுடையானும் பொன்னுடை
புனைந்தானும் பூவினனும்'

ஈ. 'முளரிமேல் வைகுவான் முருகற் றந்தவத்
தளிரியல் பாகத்தான் றடக்கை யாழியான்.'

உ. சிவனும் நான்முகத் தொருவனுந்
தேவர்க்குத் தெரியா—அவனும்.'

ஊ. 'பூவுளான் புணரிமேலான் பொருப்பினுன் முதல்வராய'

எ. 'பங்கயத் தொருவனும் விடையின் பாகனும்
சங்குகைத் தாங்கிய தரும மூர்த்தியும்'

ஏ. 'உமைக்கொரு பாகத் தொருவனு மிருவர்க் கொருதனிக்
கொழுநனு மலர்மேற் கமைப்பெருஞ் செல்வக் கடவுளும்.'

(6) இங்ஙனம் சொல்வன்மையிலும் சொற்றெடுக்கும் வன்மையிலும் தேர்ந்த புலவன் அர்த்த மில்லாதனவும் அர்த்த புஷ்டியில்லாதனவுமான சொற்களைக் கடிந்தகற்றுதல் வேண்டும். பொருள்

பயவாத இடைச்சொற்களும் அடைமொழிகளும் விரவாமற் கவி புனைவதே சிலாக்கியம். கீழ்வரும் கம்பரது கவிகளில் நிரர்த்தக மொழி ஏதேனும் நுழைந்திருக்கிறதா என்று கவனியுங்கள்.

'காக துண்டம் நறுங்கல வைக்களி
யாக முண்ட தடங்கலும் நீங்கலாற்
பாக டர்ந்த பனிக்கனி வாய்ச்சியர்
வேக டஞ்செய் மணியென மின்னினர்.'

'முந்துஞ் சுனைகாண் முழைவா ழரிகாள்
இந்தந் நிலனோடு மெடுத்த கைநா
லைந்துந் தலைபத்து மலைந்துலையச்
சிந்தும் படிகண்டு சிரித்திடுவீர்.'

'பொன்கொண் டிழைத்த மணியைக்கொடு பொதிந்த
மின்கொண் டமைத்த வெயிலைக்கொடு சமைத்த
என்கொண் டியற்றிய வெனத்தெரி கிலாத
வன்கொண்டல் விட்டுமதி முட்டுவன மாடம்.'

அனுவசியச் சொற்களை அகற்றுவது மாத்திரமல்ல: சில இடங்களில் ஒரு மொழிகொண்டே மிக்க பொருளைக் கம்பர் தருகின்றார். ஓர் உதாரணம் இங்கே தருகிறேன். கையடைப் படலத்தில் விசுவாமித்திரனோடு செல்லுகின்ற இராமன்கொண்ட கோலத்தை :

'வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோல்
என்றுந் தேய்வுறுத் தூணி யார்த்திரு
குன்றம் போன்றுயர் தோளிற் கொற்றவில்
ஒன்று தாங்கினன் உலகந் தாங்கினன்'

என்று வருணித்துப் பின் இலக்குமணன் கோலத்தைக் குறித்து 'அன்ன தம்பியும்' என்று கூறி நிறுத்துகின்றார். 'அன்ன' என்ற ஒரு சொல்லினால் அதே மாதிரி வின்முதலியன அணிந்துகொண்ட இலக்குமணன் என்று கம்பர் சூசிப்பிக்கிறார்.

(7) கவிஞன் மெல்லோசை பயக்கும் இனிய சொற்களைத் தெரிந்தெடுத்துக்கொள்ளுதல் வேண்டும். இவ்வன்மை பண்டைக் காலத்துப் புலவர் பலரிடமும் இருந்ததென அவரியற்றிய நூல்கள் சான்று பகருகின்றன.

சூளாமணி :—

'காந்தளங் குலையால் களிவண்டினங்
கூந்திளம் பிடிவீசக் குழாங்களோ
டேந்துசந் தனச்சார லிருங்கைம்மா
மாந்திநின்றுறங்கும் வரை மாடெலாம்'

சீவகசிந்தாமணி :—

'தேனுலா மதுச்செய் கோதை தேம்புகை கமழ வூட்ட
வானுலாஞ் சுடர்கண் மூடி மாநக ரிரவு செய்யப்
பானிலாச் சொரிந்து நல்லா ரணிகலம் பகலைச் செய்ய
வேனிலான் விழைந்த சேரி மேலுல கனைய தொன்றே.'

பராமாயணம் :—

'தேனுக வருவி சிந்தித் தெருமர லுறுவ போலக்
கானமு மலையு மெல்லாங் கண்ணினீ ருகுக்குங் கங்குல்.'

மாயாசனகப்படலத்திற் சீதைபால் இராவணன் இரந்து தனது ஆசையை வெளியிடுங்கவிதைகள் மிக்க அழகுடையன :

'தோற்பித்தீர் மதிக்கு மேனி சுடுவித்தீர் தென்றல் தூற்ற
வேர்ப்பித்தீர் வயிரத் தோளை மெலிவித்தீர் வேனில் வேளை
ஆர்ப்பித்தீர் என்னை யின்ன லறிவித்தீ ரமரர்அச்சந்
தீர்ப்பித்தீ ரின்ன மென்ன செய்வித்துத் தீர்தி ரம்மா.'

இதன் முன்வரும் இரண்டு கவிகளும் பின்வரும் இரண்டு கவிகளும் இதுபோலவே அழகுவாய்ந்துள்ளன. நல்லிசைப்புலவர் கவியினின்றுதிக்கும் அழகிய பொருட்செறிவைக் கீழ்வருஞ் செய்யுளால் வருணிக்கின்றார் கம்பர்.

'நல்லியற் கவிஞர் நாவிற் பொருள்குறித் தமர்ந்த நாமச்
சொல்லெனச் செய்யுட் கொண்ட தொடையெனத் தொடையை [நீக்கி
எல்லையில் செல்வந் தீரா விசையெனப் பழுதி லாத
பல்லலங் காரப் பண்பே காகுத்தன் பகழி மாதோ !'

(8) சுத்தத் தமிழ்மொழியையே கூடியவரையில் தெரிந்தெடுத்துக்கொள்ளுதல் வேண்டும். பிறபாஷை மொழிகள் வேண்டப்படுமாயின் அவற்றைத் தமிழ்ப்பாஷையின் போக்கை அநுசரித்து ரூப மாற்றிக் கையாளுதல் வேண்டும். எல்லா மொழிகளும் தற்சமமாக வந்து கொள்ளுதலமையாது; வந்து பிரயோகிக்கப்படினும் கவிப் பான்மைக்குத் தக்க இசையொழுக்குப் பெறவேண்டும். இதனல் வடமொழிக் கலப்பில்லாமலே தற்காலம் தமிழ்க்காவியம் இயற்றல் வேண்டுமென்பது எனது கருத்தன்று. வேண்டியவிடத்து மாத்திரம் ஸம்ஸ்கிருத மொழிகளைப் பிரயோகித்துக் கொண்டாற் போதும்.

(9) இனி எதுகை மோனை முதலியன கவிக்கு ஆவசிகமான உறுப்புக்களோவென்று கவனிக்கவேண்டும். கவியியற்றுவோனது மனோதர்மத்தை இவை தளைகின்றனவென்று யாரும் ஒப்புவர். அவற்றுற் செய்யுட்குச் சந்தவின்பம் வராமற்போகவில்லை. ஆனல் ஒரு விஷயம் நாம் கவனித்துக்கொள்ளுதல் வேண்டும். பொருளின்பத்தைக் கெடுத்துச் சொல்லின்பம் கொள்ளுதற்கும் மலரையொழித்து

நாரை மாலையாகக் கொள்ளுதற்கும் அதிக வித்தியாசமில்லை. ஆதலால் வேண்டுமாயின் இச்சொல்லின்பத்தை உரிய இடத்தில் விட்டு விடுவது தவருகாது. எதுகையை ஒழித்துவிட்ட சில கவிகள் சிந்தாமணியில்வரக் காண்கின்றோம்.

'அங்கைபோல் வயிறணிந்த வலஞ்சுழி யமைகொப்பூழ்
கங்கையின் சுழியலைக்குங் கண்கொளா நுடங்கிடையை
யுண்டெனத் தமர்மதிப்பர் நோக்கினுர் பிறரெல்லா
முண்டில்லை யெனவைய மல்லதொன் றுணர்வரிதே'

'கங்கை மாக்கடற் பாய்வதே போன்று காளைதன் கார்முக
மைந்த ரார்த்தவர் வாயெலா நிறைய வெஞ்சரங் கான்றபி
னெஞ்சம் போழ்ந் தழலம்புண நீங்கி ஞருயிர் நீண்முழைச்
சிங்க வேறுகள் கிடந்தபோற் சிறுவர் தேர்மிசைத் துஞ்சினர்.

இவ்வித வேறுபாடு பிற்காலக்கவிகளிற் காண்ப தருமை. எனினும் தமிழ்க்காவியவளர்ச்சிக்கு இவ்வழியையும் நாம் கையாட வேண்டியதவசியமே.

காவியத்திற் ருேன்றவேண்டும் 'ரஸம்' 'வருணனை' முதலியவற்றை இவ்விடம் விரித்துக்கூற நான் எண்ணவில்லை. எனினும், கம்பர் புதிதாகவிற்றிய உவமான அணிகள் மனதிற்கு ஆனந்தம் தராமலிரா. அவற்றுட் சிலவற்றைக் கூறுகின்றேன்.

'ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றெரு
பூசை முற்றவு நக்குபு புக்கென'

'காம்பு கால்பொரக் கண்ணகன் மால்வரைப்
பாம்பு நான்றெனப் பாய்பசுந் தேறலே'

'வையக முழுவதும் வறிஞ னேம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசுசெய் கின்ருன்'

'ஐயனு மிளவலு மணிநில மகள்தன்
* * * *
நெய்குழ லுறுமிழையென நிலைதிரிவார்.'

'சோர்பொழு தணிநகர் துறுகுவ ரெதிர்வார்
கார்வர வலர்பயிர் பொருவுவர் களியால்'

'மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தாள்'

'ஆலமர் வித்தி னருங்குற ளானுன்'

'இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார்'

'அரக்கரென் கடலிடை யாழ்கின் ருரொரு
மரக்கலம் பெற்றென மறுக்க நீங்கினர்'

'தோட்ட நுங்கிற் ருளையுறு மூக்கினைக்—காட்டெனு'

'சாகா மிருகத் தலைவரிற் றிலகமன்னன்
* * * *
ஆகாய முற்ற கதலிக் குவமையானன்.'

'கோல்பிடித் தெழுகுறு குருடர் கூட்டம்போல்
வால்பிடித் தொழுகின கவியின் மாலையே.'

மேலும், 'சிரித்தபங்கயம்,' 'பஞ்சின்றிப்பழுத்தபாதம்', 'வெங்களி விழிக்கொரு விழவு,' 'கருநெருப்பினிடையே யெழுந்த வெண்ணெருப்பு', 'தாயரிற்பரிசேடியர்' 'நதியினுங் குளத்தும் பூவா நளினங்கள்', 'பள்ளத்துப்பாயு நன்னீரனையவர்', 'ஆம்பலொத் தமுதூறு செவ் வாய்ச்சியர்', 'தீங்கரும்பினுந் தித்திக்கு மின்சொலார்', 'அரக்கரென்னும் கான்சுட மூளைத்த கற்பின்கனலி', 'அன்பெனும்விட முண்டாரை யாற்றலா மருந்து முண்டோ', 'நெய்த்தலைப் பால்கலந் தனைய நேயம்', கமலத்தின் காடுபூத்த காளமாமேகம்' முதலிய அழகிய சொற்றொடர் இராமாயணத்திற் செறிந்துகிடக்கக் காணலாம்.

இதுவரையும் கூறப்பட்ட விதிகளெல்லாம் நமது செய்யுள் இலக்கியம் பரிஷ்காரமடைதற் பொருட்டேயாம். இவ்விதிகளை ஒட்டிக் காவியம் சமைப்பினும் ஒரு சிறந்த காவியமாக அமைவது எளிதன்று. அதற்குக் கவிஞனிடம் பிறவியிலேயே விசேஷமான கவித்துவம் பொருந்தியிருத்தல் வேண்டும். நம்முடைய விதிகளெல்லாம் அந்த இயற்கையாற்றலை வளர்க்க உபகரணங்களாயிருக்குமேதவிரத் தாமாகவே பெரும்பயனைத் தரமாட்டா. எனினும் வரையறுத்தற்கு இடங்கொடுக்கக்கூடியவை இவ்விதிகளே. இதுபற்றியே இவைகளை மட்டும் தங்கள் முன்னிலையிற் கொண்டுவந்தேன். தமிழ்க் காவியத்தின் நோக்கம் தப்பாயிருக்குமிடத்திற் றிருத்தம் பெறவேண்டும்; சுருங்கியிருக்குமிடத்தில் விரிக்கப்பட வேண்டும்; கவின் குன்றினவிடத்திற் கவினுறச் செய்யவேண்டும். இதுவே, தமிழ்ப் புலவோர்களின் முக்கிய கடமை. இந்நோக்கம் நிறைவேற வேண்டுமாயின், பிறபாஷைகளிலுள்ள காவியங்களைக் கற்றுணர்ந்து, அவற்றின்கணுள்ள மேலான லக்ஷணங்களையறிந்து அவையனைத்தையும் தமிழ்க்காவியங்களில் அமைக்க முயல வேண்டும். காலத்திற்கேற்ப இலக்கிய பரிஷ்காரமும் நடைபெற வேண்டியது மிகவும் ஆவசிகமே. இதை மறப்போமாயின் நமது இலக்கியம், அதிலும் காவிய இலக்கியம், வளர்ந்து விரிந்து பொலிவு பெறுதுபோகும்.

ஆகையால், தமிழர்களாகிய நாம் நமது இலக்கிய வளர்ச்சியிற் றக்க கவனஞ்செலுத்தி முயலுவோமாக. முயற்சி திருவினையாக்கும் என்ற பெரிய உண்மை கடைப்பிடிக்கத்தக்கது.

*K. N.* **சிவராஜ பிள்ளை**, B.A.,
திருவனந்தபுரம்.

# கம்பராமாயணக் கௌஸ்துபம்

## 1. முன்னுரைப் படலம்

1. கம்பன் என்னும்ஓர் காளமே கம்தமிழ்
அம்பு ராசி அடங்கலும் மொண்டுவான்
பம்பும் ஆரிய மாம்இம யம்படிந்
திம்பர் நாட்டிற் கிறைத்தண் வாரியே. 1

2. "தேவ பாஷையில் இக்கதை செய்தவன்"
யாவ னேஅவன் பாவெனும் ஆவிநின்
றேவில் ராமன் தமிழ்க்கதை யாறெழுந்
தோவில் தெக்கணம் எங்கும் உலாயதே. 2

3. கம்பம் வேய்ந்த குடில்வைகு வார்மணிக்
கம்பம் வாய்ந்தபொன் மாளிகை கண்டவா
கம்பன் தீந்தமிழ் உண்டு கரசிரக்
கம்பம் செய்து கவிஞர் களிப்பரால். 3

4. காமர் பூவுதிர் கற்பகக் காக்கொலோ?
பூமகள் செவ்வி பொங்கும் பயோதமோ?
நாம கள்மெய்ந் நடம்செயும் ரங்கமோ?—
பாம கார்பதி கம்பன்நற் பாடலே. 4

5. வான யாறு மடுத்தப்ர வாகமோ?
கான யாறெனும் கங்கை திரண்டதோ?
தேனி ரூல்இனி சிந்துறும் சிந்தென்ப
தேன்?இ ராதமு தத்தும் இதன்சுவை! 5

6. வேரி மாமணம் வீசும் தமிழணங்
காரும் ஆரமோ? ஆய்முத்தின் ஆரமோ?
பாரில் வானில் பயில்அழ கும்எழில்
சேரப் பூணும் செழுமணிப் பேழையோ? 6

---

1. ஒப்பு. பால. ஆற்றுப். 3.
2. பால. பாயிரம். 1; ஆவி-வாவி.
4. பயோதம் - பாற்கடல்; ரங்கம் - அரங்கம், நடனசாலை; பாமகார் - கவிஞர்கள்; பதி-அரசன்.

5-6. ஒப்பு. பால. நகரப். 2.

7. ஓசை இன்பம் ஓர் ஊற்றெடுத் தேமனம்
மாச யின்றிடா வாறு வருதலாற்
பூச லைம்பொறி போழ்நர்க்கும் மேற்புலன்
ஆசை இன்ப அமுதினை ஊட்டுமால். 7

8. கூறில் அண்டரும் கொண்ட அமுதினல்
ஈறில் வாழ்க்கையை எய்தின ரேனுமக்கம்
மாறில் லாமகிழ் மீறுகம் பன்கவிப்
பேறிலா தின்றும் பேதுற் றழுங்கினர். 8

9. பூவின் மென்மை பொலிவற் றிழிவது,
காவின் தண்மை கனன்று தெறுவது,
கோவின் தேசெதிர் கூசிக் குலைவது,—
பாவிற் பாவெனும் கம்பன்மெய்ப் பாட்டினல். 9

10. பண்ணில் வந்த சுவையையும், பாவைமார்
கண்ணில் வந்த களிப்பையும், ஞானியர்
எண்ணில் வந்தநல் லின்பையும், கம்பன்பா
நண்ணி வந்த நலம்நலம் தீய்க்குமால். 10

11. குமுத வாயிற் குழவி மிழற்றுதேங்
கமுத தாரை இனிதென் றசைத்த அவ்
விபுதன் நூலொடு மெய்ப்பல கைக்கணே
சமனில் நின்று தயங்கத் தகுவது. 11

12. அங்கம் சேரும் அவயவ சாலத்துள்
துங்கம் சேரொண்மை சூட்டும் முகமன்றே!
திங்கள் போலும் முகத்திற் கெழில்நலம்
தங்கச் செய்வ சலச விழியரோ! 12

---

7. பால. ஆற்றுப். 1.

8. அமுதம் உண்டு அமர வாழ்வு பெற்ற தேவரும் கம்பன் கவி யமுது பெருது மனம் அழுங்கினராம். தேவரமுதினும் இனியது கம்பன் பா என்பதாம்.

10. இசையின்பம், காமவின்பம், பேரின்பம் யாவற்றையும் கம்பன் பாநலம் வென்று மேம்பட்டு விளங்குகிறது.

11. விபுதன் நூல் - திருவள்ளுவர் திருக்குறள் ; மெய்ப்பலகை - சங்கப்பலகை.

12. அவயவ சாலம் - உறுப்புத் தொகுதி. உறுப்புகளுள் சிறப் புடையது முகம் ; முகத்திற்கு அழகுசெய்வது கண்கள். சலசம் - தாமரை.

13. பாஷை மாதர் பலருளும் இன்னிசை
ஓசை மாதர் உறும்தமிழ் ஒண்டொடி
வாச வாண்முகம் வாய்ந்த விழியுகம்
ஏசில் ராமன் கதைகுறள் என்பவே. 13

14. காவி யன்றக விஞர்பூங் கானரு
காவி யன்றழ காரலர் தூவுமங்
காவி யன்றரு வன்றேஇத் தென்கவி
காவி யமணம் கான்றெளிர் கற்பகம். 14

15. நாமகள் அருள் நண்ணும் வரகவி
ஹோமர் வர்ஜில் மில்ற்றனென் றேதுவர் —
வாமமார் வடதேச வான்மீகி தென்
சீமையத் தமிழ்க் கம்பன் தெரிகிலார். 15

16. பூமி மாது புனேயும் மஹாகவித்
தாம நாப்பண் தயங்கிச் சதிரொளி
ஏமம் விசி எரிநடு நாயகம் —
காம இன்பமும் கைப்பித்த கம்பனே. 16

17. பாங்கின் வேந்தைப் பனிக்குடை பாலிக்கத்
தாங்கும் சக்கரவர்த்தித் தகைமைபோல்,
தூங்குஞ் செந்தமிழ்த் தொல்கவி ராஜர்மேல்
ஓங்கும், கம்பன் ஒருகவி நீழலே. 17

18. மான் சமடு வந்த சரயுபோல்
பாந சைப்புல வர்பல குன்றிடை
வான சைல மெனவளர் கம்பனுள்
ஞான வாவியிக் காவியம் நல்குமால். 18

---

13. தமிழ் ஒண்டொடி - தமிழணங்கு. இராமன் காதையும் திருக்குறளும் தமிழணங்கின் இருவிழிகளாம். விழியுகம் - கண் இரண்டு.

14. தரு - தேவலோகக் கற்பக மரம்.

15. வான்மீகியும் கம்பனும் ஆங்கில மகாகவிகளினும் மிக்கோராவர்.

16. நிலமகள் அணியும் மகாகவி மாலேயுள் நடுநாயக மணியாகத் திகழ்வது கம்பன் காவியம்.

17. கம்பன் எல்லாக் கவிஞர்களுக்கும் மேலாகச் சக்கரவர்த்தியாக விளங்குகிறுன்.

18. வான சைலம் – ஆகாயம் அளாவிய மலே. மானச வாவியுள் தோன்றிய சரயுநதிபோலக் கம்பனின் ஞானவாவியுள் எழுந்த ஆறு ராமாயண காவியம்.

## 2. ஆக்கியோன் படலம்

[வேறு]

19. ‘‘வாங்கரும் பாதம் நான்கும் வகுத்தவான் மீகி’’ தந்த
ஓங்கொரு புகழ்நூற் பற்றி யுதவின னேனும், கம்பன்,
வீங்கறி வுடைய ஞாலம் வேண்டிய வாறு காதை
ஆங்கங்கே திருத்தி, யாண்டும் அழகுற அமைத்த திந்நூல். 1

20. முதலென வழிநூ லென்ன முடித்துளார் முறையிற் சென்றே
சதிருறு முதநூல் தானே தலைநின்று தயங்கு மென்பர்;
மதித்திறன் மதிக்க லாதிம் மதம்விரித் துரைத்தார் தாமும்
எதிரிலா ராம காதை யெதிரநா வெடுக்க லாரே. 2

21. நூலினை வகுத்துக் கூறும் நுண்ணறி வெனைத்தென் றாலும்
மேலினை வகுக்கு மாபோல் வினைக்கடை வியர்த்த மாமே;
ஞாலத்திற் புலவர் புந்தி நடைத்திறன் கணித்தல் சீவன்
மூலத்தைக் கணித்தல் போலும், முரட்டுற்ற முயற்சி யம்மா! 3

22. பூதபௌ திகத்துட் காலப் புதுமைபூத் தொளிராச் சத்தி
ஓதுமோ ரளவைத் தாகி யொதுங்கலு மதற்கு மாறாய்
மேதகு மனத்தி னூற்றம் விளைந்து மேக்குறலும் கால
பேதத்திற் பின்ன லாய பெரும்பரி ணாம மன்றே. 4

23. ஆதலால் அறிஞ ரானோர் அளக்குறார் உளத்தி னாற்றல்
பூதலத் துயிரின் போக்கைப் புனைபொறிப் புகுத்த நோக்கார்
மாதவத் துயர்ந்த முன்னோர் மாண்புள ரெனினும், பின்னார்
மேதினி விளக்கு ஞானம் மேவல்போல் மேவி டாரே. 5

24. பண்டமை நூல்க ளெல்லாம் பண்டையர்ப் போலப் பீடு
கொண்டன வென்னக் காட்சி கோடற்க; இற்றை ஞான்றும்
எண்டயங் குறுநூல் செய்தாங் கிசைநட்டா ருளரே யாதற்
கண்டனம் ராம லிங்க கவியருட் பாவின் காட்டால்.

---

19. பால. நாட்டுப். 1. கம்பன் வாக்குகளை வேற்றுமையின்றித் தாம் எடுத்தாளும்போது இரட்டை மேற்கோள் குறியிட்டும் (‘‘ ’’) சிறிது வேறுபாட்டோடு தரும்போது ஒற்றை மேற்கோள் குறியிட்டும் (‘ ’) ஆசிரியர் காட்டியுள்ளார்.

20. முதனூலே சிறந்தது என்பார் கம்பன் இராமகாதையை எதிர்ப்படின் அவ்வாறு மொழியார் என்றபடி. கம்பன் காவியம் முதல் நூலினும் விஞ்சி நிற்பது என்பதாம்.

21. மேல் - ஆகாயம்.

22. பரிணாமம் - இயற்கைத் தோற்றம் உயர்ந்தடையும் மாற்றத்தினை விளக்கும் அபிவர்த்தனவாதக் கொள்கை (Evolution).

23. பண்டைய நூல்கள் மட்டுமே சிறந்தன என்னல் வேண்டா. காலந்தோறும் கவின்பெறும் நூல்கள் தோன்றுவதுண்டு. இதற்கு எடுத்துக்காட்டாகச் சென்ற நூற்றாண்டில் தோன்றிய இராமலிங்கசுவாமிகளின் அருட்பாவைச் சொல்லலாம்.

25. ஆரிய மொழிக்கோர் ஆதி கவியெனும் அழிவில் சீர்த்தி
சேரிய முனிவன் ருனே செப்பின னேனுந் தொன்னூல்,
கூரிய அறிவில் ஞானக் கோளகை குணித்த கம்பன்
சீரிய கலைக்குட் சித்ர கலைக்கவி சிறத்தல் செய்ய, 7

26. குறைப்பனகுறைத்து,வேண்டிக் கொள்வன கொண்டு, மாற்றம்
செறிப்பன செறித்துச் செப்ப னிட்டசே டகப்பொற் றட்டிற்
குறிப்பன கோலத் துள்ள துகிலிகைக் கொண்டு, யாணர்ப்
பொறிப்பன வாய பொன்சித் திரத்தின் வித்தார மம்ம ! 8

[வேறு]

27. காதை யுள்ளமை காதைக
ளோதும் வாறெவர் ஓதினர் —
மோது வார்புனற் கங்கைசார்
போது லாம்நதி போதல்போல் ? 9

28, இராம காதையெ னுவியல்
அராம மேவிடு வார்க்கிவை
சிராமம் தீர்த்திடச் சிந்துபூம்
பராகப் பித்திகைப் பத்தியே. 10

29. படிகம் போற்றெளி பனுவலும்
அடிக ளோடும ராகமும்
துடிகொள் தூக்குடை நோக்கமும்
வடிகொ ளும்பொருள் வண்மையும், 11

30. போந்த காதையின் போக்கொடு
ஆய்ந்து நோக்கியம் மாகவி
வேய்ந்த காவிய விசித்திரம்
தேர்ந்து கொள்ளுவர் சீரியோர். 12

31. செந்தொ டையொடு செம்பொருள்
வந்து லாவு கிளைக்கதை
முந்து சந்த முதற்கதைக்
குந்து மந்தமில் லந்தமே. 13

32. ஆன்ற ஓவியச் சீரையார்ந்
தேன்றி லங்குறு சித்திரம்
தோன்ற லான எழிற்சுடர்
ஞான்ற பின்னெடு நாறுமே. 14

---

26. கம்பன் காவியம் பொன்தட்டில் பொறிக்கப்பெற்ற அழகிய சித்திரமாம்.

28. சிராமம் - சிரமம் என்னும் சொல் இடை நீண்டு நின்றது. பராகம் - மகரந்தம் ; பித்திகை - மல்லிகை.

33 இசைக் கிசைதரு பின்னிலை
இசைய தாகி யிணைந்தபோல்
வசையில் மாக்கதை மாணுற
அசைப்ப ராலநு காதையே. 15

[வேறு]

34. காவின் வேந்தனும் காவினைத் துறந்தனன், கமலப்
பூவின் வேந்தனும் படைப்பினிற் பொலிவழிந் தொழிந்தான்,
சாவின் வேந்தனும் தண்ணளி காட்டிடச் சமைந்தான்
பாவின் வேந்தனும் கம்பன்பா பம்புபன் னலத்தான். 16

35. கள்ளுண் மாந்தரும் கள்ளினைக் கைப்பெனக் கனன்றார்,
புள்ளுண் வேடரும் புனிதநன் னெறிவந்து புகுந்தார்,
உள்ளுண் யோகியர் உறுபதம் சிறிதென ஒறுத்தார்
தெள்ளு தீந்தமிழ்க் கம்பன்செய் தென்கவி யின்பால். 17

36. ஆடல் வேண்டலர் ஆடின அரங்கிள மகளிர்,
பாடல் வேண்டலர் பண்ணிசைக் கண்ணுளர், வெறிதார்
சூடல் வேண்டலர் தோகையர், கம்பன் சொல்லமிர்தம்
நாடல் வேண்டினர் நண்ணுறு மகிழ்துய்க்க நயந்தே. 18

37. எந்தச் சாதியர் எத்தொழி லாளரெப் பாலார்
சிந்த னைதெளி முதியரோ டிளைஞரா தியபேர்
அந்த மில்லராம் வேற்றுமை யாளரிக் கவியிற்
றந்த மக்குள தத்துவம் கண்டுளம் தழைப்பார். 19

38. சமைய வாதியர் தருக்கஞ்செய் தொடக்கெலாம் தவிர்ந்தே
அமைய நின்றுளிர் அலகிலா வருந்தனிப் பொருளை
உமையின் பாகனே டிலக்குமி கேள்வனென் றுன்னு
தவனிநாதனென் பொதுமையிற் காப்பொன்றே யணிந்தான். 20

39. ஹோமர் மாகவி யுதித்திவூர் யூங்கல அலவீங்
காமென் றேயெழு நகரங்க ளெடுத்துப்போர் தொடுத்த ;
பாம கள்பணி கம்பனை யப்பரி சுரைத்தார் ;
பூமி யிற்பெரி யாரையார் தம்மொடும் புணர்த்தார் ? 21

---

33. பின்னிலை - Back-ground. சித்திரக் கலைகளில் எழும் உருவங்களில் எழிலை மிகுக்க அவற்றின்பின் அமைக்கப்படும் அரங்கமே இங்கு 'பின்னிலை' எனச் சுட்டப்பட்டது.

34. சாவின் வேந்தன் - இயமன்.

38. 'உலகம் யாவையும்' எனத் தொடங்கும் காப்புச் செய்யுளின் பொதுமை எடுத்துரைக்கப்பட்டது.

39. கம்பன் பிறந்தவூர் திருவழுந்தூர், திருவெண்ணெய் நல்லூர் முதலியனவாகக் கொண்டு உரைக்கும் பாங்கு நினைவூட்டப் பெற்றது.

40. வீறெ டுத்தகா வியமெனுங் கரும்பின்கான் விசித்துச்
சாறெ டுத்துல கர்க்கொரு காப்பியம் சமைத்தான் ;
சேற டுத்தமண் டுகம்போற் றேறலுண் ணுதே
மாறெ டுத்ததம் மதமுரை நூலென்றும் மருண்டார். 22

41. சமைய நோக்கமே தலைக்கொண்டார் ராமன்றன் னுமம்
அமைய வந்திடும் ஐந்தோடெட் டெழுத்தென அறைவர் ;—
உமையின் கேள்வனை இலக்குமி காந்தனை ஒருவிக்
கமைகொள் மூலமாப் பொருட்பெயர் அஃதெனக் காட்டா. 23

42. சைவம் வைணவம் மென்றிரு சமையத்தின் னிலையிற்
கைவந் தமத நூல்களோ கணக்கில ; கவியின்
மெய்வந் தேவிக சிக்குமிந் நூல்விர கறியார்
பொய்வந் தேறிடப் பொதிந்தனர் கவிப்புல னில்லார். 24

43. கதையென் னுங்கடற் கலக்கியே கவித்திறம் கனிந்த
சுதையுண் ணுதரும் பொருள்பல தோற்றுவாய் செய்மன்
பதையின் நோக்கமும் பாயசத் துள்ளுறை உறையொன்
றெதுவென் றுய்ப்பவர் நோக்கமும் வேற்றுமை யிலையால். 25

[வேறு]

44. பாதம்நான் கோதிய பருணி தன்தமிழ்
வேதம்நா வுதவிய விரிஞ்சன் வள்ளுவன்
மாதர்மா மணங்கழ் மணிசெய் மாமுனி
ஆதியர் ஓதிய அரும்பன் னூலிடைக், 26

45. கட்டன பொருளெலாங் கரக்க வைத்தொளி
விட்டன வாயவிவ் வீர காவியம்
பட்டன பாத்தொகை பரந்த தாயினும்
எட்டனை யியற்றியற் கிசைதரா தென்பர். 27

46. எவ்வுரை கொள்ளினு மிதுபொ ருமையின்
தெவ்வுரை தானெனத் தேற லல்லது
நவ்வுரை முன்னையர் நடைந யத்தலும்
ஒவ்வுவ தன்றென வொறுத்தல் செய்யலம். 28

---

41. கம்பன் பெருங்காவியம் ஒரு சமய நூல் அன்று; சிறந்த காவியங்களின் நற்பண்புகளெல்லாம் திரண்ட ஒரு பெருங் காவியம் ஆகும்.

44. பாதம் நான்கு ஓதிய பருணிதன் - வான்மீகி. கம்ப. பால. நாட்டுப். 1. தமிழ்வேதம் - திருக்குறள் ; மணி - சீவக சிந்தா மணி ; மாமுனி - திருத்தக்க தேவர்.

45. வீரகாவியம் - கம்பராமாயணம் ; எட்டனை - எள் அளவு.

46. நவ்வுரை - சிறந்த சொல்.

47. முன்னவர் நூற்றெகை முடிபு கோடலே
பின்னவர் முன்னலாம் பெருமைத் தாய்வரும்
எந்நிலை யவரினும் இதுசெய் யாதுபாப்
பன்னினர் உண்டுகொல் சுயம்பயக்கவே. 29

48. முற்றிலும் புதுமையிம் முதிய வையகத்
துற்றிட லென்பதோ உரையின் மட்டுமே ;
கற்றிடு பழமையுட் கலப்பு ருவிடின்
வற்றிடும் நெற்றென மதிஞர் பாவுமே. 30

[வேறு]

49. விரிந்த சாத்திரத் தொகை, கலைத்தொகுதி, வேற்றுமையே
தெரிந்தி லார்பலர் ; தெரிந்தவர் கலையினுட் பிரிவாய்ப்
பொருந்தெ ழிற்கலை தொழிற்கலை வேற்றுமை பூட்டார் ;
திருந்து சித்திர கலையுளுங் கவிக்கலை தெரியார். 31

50. ஓவியம் சிற்ப மெனுமுயர் கலையினுள் ளொதுங்குங்
காவிய மென்னுங் கலைபயப் பதோகவி னின்பம் ;
தீவு காவியக் கலைவரு வேற்றுமை தெரிப்பின்
பாவி கத்துரு மொழிகொடு பண்ணலே மண்ணி. 32

51. இன்னும் வேறெரு வேற்றுமை காவியத் தியலும் :
முன்னங் கூறிய சிற்பமோ வியமமை முறையுட்
டுன்னும் ; பாவிக வுருவொரு கணநிலை தொகுக்கும் ;
மன்னுங் காவியப் பொருளிறப் பெதிர்வினுன் மலியும். 33

52. காவிய மென்னுங் கடற்படு நூனிரை கணிப்பார்
ஓவி யக்கலை யுள்ளுறை நோக்குண ராதே
கூவிக் காட்டிய கொள்கையுங் கொள்கையாக் கொள்ளேம் ;
மேவு சித்திரம் விழியிலான் மதித்திடின் விலையென்? 34

53. ஆயினு மிஃதறிந் திலரா கித்தம் மதமாந்
தீயி னுங்கிய சிந்தைய ராய்ச்செவி செறுத்தே
வாய னுங்கிய வாறுரை மதித்தனர் தமிழெந்
தாயு நுங்கிய தனியமு தலையெறி கடலே. 35

---

47. முன்னையோர் நூல்முடிபுகளைப் பின்னையோர் கொண்டு உரைத்தல் இயல்பே.

48. பழமையோடு கலந்து வருதலே சிறப்பு. மதிஞர் - அறிஞர்.

50. தீவு - இனிமை ; பாவிகம் - தொடக்கம் முதல் முடிவு வரை வனப்புடையதாய் அமையும் காவியப் பண்பு.

54. கம்பன் பாவருங் கனிவினைக் கனிதர வியலா ;
கம்பன் பாவருங் கடிமணம் மலர்தந்து கமழா ;
கம்பன் பாவருங் கவினுரு கலைதந்து நிலையா ;
கம்பன் பாவருங் கண்டிசை எண்டிசை காட்டா. 36

[வேறு]

55. அளப்பரு மான்ற தன்மை யாழ்ந்துகீழ் போகு நீர்மை
கிளப்பரு குளிர்மை யின்ன கெழுமிய குணத்தி னாலும்
களைப்பற வுயிர்கட் கோசைக் களிப்பையே யளிப்பதாலும்
வளைப்புறு கடலுங் கம்பன் கவியென மருவிற் றன்றே. 37

56. சவியுறத் தெளித லாலும் தவழ்நயம் தழைத லாலும்
புவியுறு முயிர்க்கு மேலாம் புலம்நின்று விளங்க லாலும்
கவினுறு பொருட்கோ ரெல்லை கதுவுரு விதப்பி னாலும்
கவியுறு விசும்புங் கம்பன் கவியெனக் காட்டிற்றன்றே. 38

57. தொல்லையிற் றொடர்ந்த ஞானத் தொகைவயின் வருத லாலும்
வல்லையில் வரம்பி லின்பம் மக்கட்கு வகுத்த லாலும்
ஒல்லையி லொன்றே யாகி யொப்புயர் வின்மை யாலும்
எல்லையிற் பொருளுங் கம்பன் கவியென இலகிற் றன்றே. 39

58. சொல்வளம் பெரிதென் கோயான்? சொல்லினுட் டுளும்பு ஞான
நல்வளம் பெரிதென் கோயான் ? நவையறு மணிகள் வீசும்
வில்வளம்பெரிதென்கோயான்? வியங்கியம் விழுமி தென்கோ?
பல்வளம் செறிந்து பண்ணும் பரிமளம் மியன்ற பாவில். 40

59. அழகினை முடியக் காண வகிலத்துட் புலவ ரெல்லாம்
பழகிய நூலின் பெற்றி பற்றியொன் றென்றே கண்டார் ;
பழையவா சனையிற் கம்பன் பைந்துணர் பூத்த பாவிற்
குழகெலா மொருங்கே கூடிக் குடியிருப் பதையுங் கண்டார். 41

60. பூவிடைப் பொலிவு நோக்கிப் பொற்றிரு நளினஞ் சார்ந்தாள்
சேவுடைச் சிவனர் சோதி திகழவே யுமையுஞ் சேர்ந்தாள்
நாவினின் றொலிக்குஞ் சொல்லி னயமெலா மடுத்த கம்பன்
பாவிலிவ் விருபண் பொன்றப் பாரதி பருகி வென்ருள். 42

---

54. கம்பன் பாவின் கனிவு, மிகுமணம், அழகு வடிவு, பாவிசை யினிமை ஆகியவற்றை எடுத்துரைத்தல் காண்க. கண்டு - கற்கண்டு.

55. கடலைக் கம்பன் கவியொடு ஒப்பிட்டுக் காணல்.

56. கம்பன் கவி ஆகாயம் போன்று விளங்கும் தன்மை கூறல்.

57. ஒப்பு : பால. ஆற்றுப். 19.

59. பாவின் அழகெலாம் ஒருங்கே திரண்டு கம்பன் காவியத்தில் நிலவுதல் குறிக்கப்படுகிறது. குழகு - அழகு.

60. நளினம் - தாமரை. பாரதி - கலைமகள்.

61. வம்பவிழ் மலரில் வந்தோன் வகுத்தவர் கோடி யேனும்
கம்பன்பார் உதித்த பின்ருன் கறுவிய கதமுட் கொண்டான்,
கொம்பெனும் வாணி தன்னுக் குடிச்செய னீக்கி யன்னுன்
பம்பிசை நாப்புக் காங்கு பணிசெய்து நிற்றல் கண்டே. 43

62. கல்லெலாம் மணியே யான ; கனியெலாங் கனக மான ;
அல்லெலாம் ஒளியே யான ; ஆறெலா மமுத மான ;
புல்லெலாம் புலமே யான ; புகழெலாம் புகுத லான
சொல்லெலாந் தொகுத்துக் கம்பன் சூழ்ரச வாதச் சீரால். 44

[வேறு]

63. பல்வளத்தின் மாரிவான்ப டர்ந்துதாரை சோரலோ,
எல்வளத்தி னெல்லிநூ றெழுந்துசோதி வீசலோ,
மல்வளத்தி ராமன்வில் வழங்குமீளி வாளியோ,
சொல்வளத்தின் பெற்றிமுற்றச் சொல்லலாக வற்றதோ ? 45

64. ஓடலாலு லாவலாலுள் ளோய்வுலேத்துற் சாகமே
மூடலால்மு ணுங்கலால்மு ழங்கலால் முகந்தணி
சூடலால் சொலித்தலால் தொனித்தலாலுள் எம்நெகிழ்
பாடலாலின் பத்துழுரிப் பாருளாரில் யாருளார் ? 46

65. வில்லெடுக்கும் மீளிகை விரல்தெரிந்த வாளிபோற்
சொல்லெடுக்கும் வன்மையி லவைதொடுக்குஞ் சூழ்ச்சியில்
எல்லெடுக்குங் கம்பன்முன் னெதிரடுத்த பாவலர்
புல்லெடுக்கும் போர்மறவர் போலொதுங்கிப் போவரே. 47

66. சொல்லினுட் டுவன்றலாம் பொருட்டொடை தெருட்டல்தான்
கல்லினுட் டுறுமணுக் கலேத்தெடுத்த லாகுமோ ?
புல்லுட லுயிர்த்திறன் பொறித்திறன் புலத்திறன்
எல்லேமாய வொன்றினென் றெழுந்தவா றெழுந்தவால். 48

---

61. வாணி - கலேமகள் ; கம்பன் நாவில் நாமகள் குடி கொண்டாள் என்பதாம்.

62. ரசவாதம் - உலோகங்களேப் பொன்னுக மாற்றும் வித்தை கம்பன் வாக்காகிய ரசவாதத்தால் பொருள்கள் சிறப்புற்ற தன்மை குறிக்கப்படுகிறது.

63. கம்பன் சொல்வளம் முற்றமுடியச் சொல்லுவது இயலாத தொன்றும்.

64. கம்பனின் நடைப்போக்கு. கம்பன் பாடல் இன்பத்துள் ஈடு படாதார் உலகில் எவரும் இவர்.

65. கம்பன் முன், ஏனைய பாவலர் எதிர் நிற்கலாற்ருது ஒதுங்கிப் போவர் என்பதாம்.

66. சொல்லினுள் தோன்று பொருள் - தொடை நயம்.

67. கடல்மடை திறந்தகாட்சித் தாயினுங்கம் பன்கவி
அடலடைந் தொளிர்வசொல் வளத்துமட்டி னன்றுகாண்
உடலடைந் தியக்குயிர் போலொண்பொரு ளோடோடியாற்
றிடையடைந் தொழுக்குபோ லிசையுமுள் ளிழுக்குமால். 49

68. நாடிநாடிப் பாவல்லோர் நயந்தசெஞ்சொல் மாமணி
மூடிமூடி வைத்தசெப்பும் முற்றுமுட்டல் செய்வதோ ?
தேடித்தேடிச் சென்றுமன்னர் சேர்கிலா மணித்திரள்
கோடிகோடி யாக்குவிக்கும் கம்பனுழி கூலமே. 50

69. ஐயின் வாரிக் கொண்டவா ரமுதளாவு சீர்பதம்
கையின் வாரித் தூவினர்மற் றைக்கவிஞர் ; கம்பனே
மெய்யின் வாரிக் கொண்டசொல் விரைமுகந்து போகமே
வையமாரு வண்ணம் வட்டி வட்டியாகக் கொட்டினன். 51

[வேறு]

70. பொருள் தேடிடப் புகுவார்மிடிப் புரையாடிடல் முறையோ ?
தெருளாய்ந்துறத் திரிவார்செறி மருள்மாய்ந்திறல் திறனே ?
அருணடிய வுளத்தார்கவி யருட்பாவினை மிகத்தாம்
சுருள்சூடுதூத் திரமாமெனத் தொகுத்தாரிருள் மிகுத்தார். 52

71. முன்னர்வினை வினைவோகலை முடிப்பார்தவ முடிவோ
மின்னுள்தமிழ் மிளிர்மேனியின் மெலிவோ பிணிநலிவோ
பின்னுளூறு வார்க்கொண்டதோர் பித்தோகவி முத்தைச்
சின்னபின மாக்கிட்டுருச் சிதைத்தார்திருப் புதைத்தார். 53

72. அறியார்செயுந் தீங்கோசிறி தறிந்துமறி யாராய்
வெறியார்புரி வினைமுன்னரே வெளிருமெனல் மெய்யே
குறியாதுமுன் னர்பாட்டுறை குறைப்பெய்தனர் பின்னர்
செறியாதன செருகாங்கவி யுளவோவுளச் செருக்கால். 54

73. குருடனெறிக் காட்டக்குறி யிடங்கூடிடல் செலுமோ ?
புருடன்வெலாப் போரையொரு பூவைவெலப் புகுமோ ?
அருடன்வரத் தாலாங்கவி யறிவானரு ளிலையேல்
மருடன்வயத் தாராய்தொடர் வழிவிட்டுழல் வாரே. 55

---

67. கம்பன் கவியில் சொல்வளம் மட்டுமன்று ; உடலையியக்கும் உயிர்போல் பொருளும் ததும்பி ஆற்றொழுக்குப் போல் செல்லும் நடையுங் கொண்டதாகும்.

68. கம்பன் கவிக்கடலில் பாவல்லோர் பிறர்க்குக் கிட்டாத செஞ் சொல் மணித்திரள் கோடி கோடியாக உள.

69. மதுரமான அமுதம் கலந்த சிறந்த சொற்களைப் பிற புலவர் கையால் வாரி இறைத்தனர் ; ஆனல் கம்பனே வட்டி வட்டி யாகக் கொட்டி வைத்துள்ளான். வட்டி - பனையோலையாலும் நாராலும் முடையப்பட்ட பெட்டி.

74. எல்லார்விரி வெயிலைச்சில ரிருளோவென மருளாப்
புல்லார்சிறு விளக்காலொளி புகட்டப்புகுந் தனரே ;
முல்லைமுருக் கவிழ்மாமணம் முடையென்றிவ ரடையாம்
வில்லைவெறி யளவாவெறி யளவாமிகுத் துரைத்தார். 56

75. அழகுக்கழ தணிதலருஞ் செயல்யாவினு மரிய
பழுநும்பழக் கனிவைப்படுங் கனிவாக்கலும் பழுதே ;
மழைத்தாரைபோற் கம்பன்பொழி வான்காவிய வமுதைக்
குழைத்தாரென லன்றிச்சுவை குவித்தாரென லாமோ ? 57

76. தெய்வமணம் நாறியுயிர் திளைக்குங்கவி தெரியற்
செய்வான்வரு மலரோசிறு தரைசிந்தின வலவே ;
மெய்வானுறை தருநின்றவன் மிளிர்மாமலர் பொறுக்கிப்
பெய்வான்தனிப் பிணையலிதைப் பிறிதார்கமழ் பிணிப்பார்? 58

77, மின்னற்பிழம் பாலுமெரி வெயிலோன்கதி ராலும்
பொன்னினொளி யாலுஞ்சுவர் போக்கிமணிக் குவைக்காழ்
தன்னிற்புரை தபுத்தேசவி தளந்தந்துயர் கம்பன்
கன்னிச்சுடர் காலப்பொலி கவிமந்திர மமைத்தான். 59

78. கவிமாளிகை புனைவாரிவண் கடந்தேகவின் கிடந்த
சவியோவியச் சமைப்பின்விழி யிமைப்பற்றுயிர்ப் பெடுப்பர்
புவியுள்ளுறை யொருவனிதிற் புரைகாணிய விரைவான்
அவிகொள்வள வமுதிற்சுவை யறுபாகமாய் வானே. 60

[வேறு]

79. சொல்கண்டார் சொல்லே கண்டார் ; சொல்லினுட் சொலிக்
[கும் ஞான
எல்கண்டார் எல்லே கண்டார் ; இனிமையோ டிகலும் சந்த
மல்கண்டார் மல்லே கண்டார் ; மகிழ்கவித் துறைகை போய
வல்கண்ட புலவர் யாரிவ் வரகவி முடியக் கண்டார் ? 61

---

70-75. பிற கவிஞர் புனைந்த பாக்களின் போக்குகள்.

76. கம்பன் கவி தெய்வமணம் கமழும் கற்பகப் பூமாலை.

77-78. கம்பன் அமைத்த கவிமாளிகையின் கவின்.

79. கம்பன் கவியின் சொல், பொருள், சந்தங்களை முற்ற முடிய உணர்ந்தாரிலர் என்றபடி. ஒப்பு. 'தோள் கண்டார் தோளே கண்டார்' என இராமனின் அழகை வருணிக்கும் பாடல். பால. உலாவியல். 19.

80. மொழிவளம் மொழிகு வேனே? மொழிகதைத் தருண முன்னிப்
பொழிவளம் புகலு கேனே? பொருள்வளம் புடைத்து விம்மிக்
கழிவளங் கழறு கேனே? காவியக் கழனி யோங்கிச்
செழிவளஞ் சிரித்து முத்தந் தெரித்தொளி சிதறும் பாவில். 62

[வேறு]

81. ''பொன்கொண் டிழைத்தமணி யைக்கொடு பொதிந்த
மின்கொண் டமைத்தவெயி லைக்கொடு சமைத்த
என்கொண் டியற்றியவெ னத்தெரிகி லாத''
மன்கொண் டமாமதிம ருட்டுகவி மாடம். 63

[வேறு]

82. மூவரும் மூவரின் முதல்வரு மிவராள்
தேவரு மிதனிசை செவிமடுத்திடுவர்
மேவரு மரசரும் விபுதரும் மேலாம்
பாவரு புலவரும் பருகலும் வியப்போ ? 64

## 3. உவமைப்படலம்

83. ''ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கெ''னப்
பேச லாய உவமையுட் பேரெழில்
மூசத் தந்த கவித்திறம் முன்னுமுன். 1

84. ''ஈர நீர்ப்படிந் திந்நிலத் தேசில
கார்க ளென்ன வருங்கரு மேதி''யென்
றேரெ டுத்த இசைப்பு ளிழைத்தனன்,
ஊர டுத்தவோர் காட்சிக் கொருபடம். 2

85. 'கோல்பி டித்தகு ருடரொ முக்குப்போல்
வால்பி டித்தொழு குங்கவி மாலை'யாம்
மால்ப டிந்தவு வமைஇ யற்கைமெய்ந்
நூல்ப டிந்தவ ரல்லர் நுவல்வரோ ? 3

---

80. கம்பன் காவியக் கழனியில் தோன்றிய பாவின் பல் வளங்களையும் வியந்து பேசுதல்.

81. சுந்தர. ஊர்தேடு. 1. 'வன் கொண்டல் விட்டு மதி முட்டுவன மாடம்' என வரும் நான்காம் அடியை மட்டும் சிறிது மாற்றிக் கம்பன் கவி மாடத்திற்கு ஆக்கியுள்ளார்.

82. கம்பன் பாவினிசையைத் தேவர்களும் செவி மடுக்கும்போது ஏனையோர் ஏற்றுக் கொள்ளுதலில் வியப்பில்லை என்றபடி.

83. கம்ப. பாயிரம். அவையடக்கம் 1.

84. பால. நாட்டுப். 25.

85. யுத்த. அதிகாயன் வதைப். 99.

86. 'மீனை ளித்தவான் முத்தினி டுபந்தர்
தானை ளித்தெ'னச் சாற்றுங் கவிநயம்
தேன ளித்தசெ ழுஞ்சொலின் சீரிய
ரான ளித்திட லன்றிமற் றாவதோ ? 4

87. 'அரக்கி வன்குடர்க் கொண்ட வனுமனைக்
குரக்கு வாலிற் குயிற்றிக் குழுஞ்சிறார்
பறக்க விட்ட கதலி'யெ னப்பயன்
சிறக்கச்சொற்ற திறக்கத் தகுவதோ ? 5

88. நிலம கள்முக மென்ன நிறுத்திடா
துலக வூழியு றையுள்வ ரைப்படி
பலக ணித்த வுருவகப் பந்திசெய்
புலவன் புந்தியோ ரந்தம் புணர்வதோ ? 6

89. ''இடைந்து போனவி னைஞர்தம் சிந்தைபோல்
மடந்தை மார்பின் மருவின மஞ்ஞை''யென்
றுடந்தை யாளன் உரைத்த உவமைநூற்
கடைந்து நோக்கினுங் காணக் கிடைப்பதோ ? 7

90. 'விண்ண வர்க்கு முனிசெயும் வேள்வியை
மண்ணைக் காத்துறை மன்னவன் மைந்தருங்
கண்ணைக் காக்குமி மையிற்காத் தா'ரென
எண்ணிக் கூறிய ஏற்றமுங் காண்பிரால். 8

91. 'எண்கின் கூட்டம் எறிந்தகி ரிக்குலம்
புண்ணி யம்பொருந் தாதமு யற்சிபோற்
சுண்ண நுண்பொடி யாகித் தொலைந்தெ'னத்
திண்ண றத்திறன் செப்பலுங் காண்பிரால். 9

92. 'திங்க ளைக்கரி தென்னத் திருத்திய
சங்க வெண்சுதை தாங்கிய மாளிகைத்
தங்கு வெண்மை தழைப்புறப் பாற்கடற்
பொங்க லைக்குவெங் காலும்' பொருத்தினன். 10

---

86. அயோத்தியா, கைகேசி. 50.
87. சுந்தர. கடல்தாவு. 84.
88. பால. நகரப். 2.
89. பால. நாட்டுப். 52.
90. பால. வேள்விப். 41.
91. யுத்த. சேதுபந்தனப். 44.
92. பால. நகரப். 27.

93. 'இடும்பை யெத்தனை யும்படுத் தெய்தினுங்
குடும்பந் தாங்குங் குடிப்பிறந் தாரினே
துடும்பல் வேலைது ளங்கிய தில்'லென
நெடும்பு கழ்ப்பெரி யார்நிலை கூறினன். 11

94. 'வஞ்சப் பூசையின் வாயின் மறுகுறும்
பஞ்ச ரக்கிளிப் பான்மை கதறலும்
தஞ்ச மாயதன் சேவற் பிடிபட
அஞ்சு மன்னத் தழுங்கலுந்' தந்தனன். 12

95. 'கருந்த டக்கணக் காரிகை காதலற்
பொருந்த வெண்ணிப் புகுந்தக டைசிநாள்
வருந்து நீர்நசை யால்வரு மானெ'னப்
பெருந்த டையிற்பே துற்றதும் பேசினன் 13

96. 'வானும் மண்ணுநீர் வற்றம றுகுறும்
மீனெனமுகில் மேற்றுவள் மின்னெனக்
கான வேழங்கை விட்டபிடி'யெனக்
கோனி ழந்தகொ டியைக்கு றித்தனன். 14

97. 'முன்பி ழைக்கவ றுமையில் முற்றினோர்
பொன்பி ழைக்கப் பொதிந்தனர் போலென
வெம்பி யந்தியில் வீடடை தாயினை
அன்பில் வந்தணை யான்கன்று' போலென. 15

98. 'ஊதை தாக்க ஒசியுங் கொடியென
ஊதி முட்டிடா ஊழியின் தீயெ'ன
ஓது மண்டத் துறையமை வாயெ'ன
ஏதெல் லாம்பரி செண்ணி யடுக்கினன் ! 16

99. 'பார்ப்பைச் சேக்கையிற் பார்க்கும் பறவையும்
பார்ப்பு னைகுழல் பார்க்குங் கணுடியும்
மார்ப்பு கக்கன்று வாராக் கறவையும்'
ஏர்ப்பு கத்தரு மேய்ப்பினன் வாய்ப்பரோ ! 17

---

93. யுத்த. சேதுபந்தனப். 53.

94. ஆரணிய. விராதன். 25,

97. அயோத்தியா. நகர் நீங்கு. 13. மந்திரப் ; 60.

98. அயோத்தியா. நகர் நீங்கு. 94.

99. ஆரணிய. சடாயுகாண். 46.

100. புற்ற ராவென நெஞ்சுபு ழுங்கலும்
பற்று வேங்கைமுன் ஞடு படுதலும்
செற்றயா னைக்காற் செல்லெனத் தீய்தலும்'
உற்றெ டுத்தவு வமைஒய் யாரமே. 18

[வேறு]

101. 'புனைவர உயிர்வரு முலவை பூத்தென
அனைவர நோக்குமாக் கன்றடைந்தெனக்
கனைகட லாழ்குநர் கலங்கண் டா'ரென
முனிவரர் மகிழ்ச்சியின் முன்னல் போற்றினன். 19

102. "இழைபடப் பெடையொடு மெள்ளி நள்ளிகள்
புழையடைத் தொதுங்க"லிற் புனைந்த சித்திரம்
பழையவர் பண்பினர் பரிசி லாருளம்
உளைவர ஒளித்துறை உலோபர்க் காட்டுமே. 20

103. "கல்வியிற் றிகழ்கணக் காயர் கம்பலை
பல்விதச் சிறுவரிற் பகர்வ பல்லரி"
சொல்விதம் தமிழ்நடை தொடங்கும் பள்ளிகள்
புல்வித மிதுவெனப் பொறித்துக் காட்டுமே. 21

[வேறு]

104. 'வெறுங்கை நாற்றிய விழுதுடை யாலன்ன மெய்யன்
மருங்கு சேய்கொடு மரம்புகு மந்தியென் னனுமன்
கருவிக் கம்பியன் கூடத்தின் பொரியெனக் காய்வான்'
தருமி யற்கையைத் தழுவுமிவ் வுவமையோ பலவால். 22

[வேறு]

105. 'கோட்டிலை துறும ரம்போற் கொடிகளிற்றனவே' யென்றும்
'தோட்டியென் வேதத் தாலே தொடக்குமால் யானை'யென்றும்
'காட்டினை யெரிக்கக் கட்டை போற்கவி கரிந்த' வென்றும்
தீட்டுறு முவமை யெல்லாம் தேட்டுறு முவமை யாமே. 23

---

100. யுத்த. இராவணன் மந்திரப். 46.

101. ஆரணிய. அகத்தியப். 4-6.

103. கிட்கிந்தா. கார்காலப். 114.

104. யுத்த. முதற் போர் புரி. 250.

## 4. இயற்கை வருணனைப் படலம்

### பொது

### வஞ்சித்துறை

106. வருணனை தேக்கிப்
பொருணிறை வாக்கும்
பருணிதர் பஞ்ச
தருநிகர் தஞ்சர். 1

107. தொலைவில சொல்லும்
உலைவில எண்ணும்
நிலைவல பண்ணின்
தலைபல நண்ணும். 2

108. வான்றொடர் நாள்கோள்
ஊன்றொடர் உயிரோர்
கான்றிட வருமே
தேன்றொடை இவர்பா. 3

109. உள்ளி லுதித்துத்
துள்ளுணர் வகிலம்
கொள்ளலி னிவர்பா
அள்ளுவ தழகே. 4

110. தீவியல் கடலில்
நாவிக நெறிபோல்
பாவியல் பௌவம்
பாவிகம் படரும். 5

111. அருங்கவி வாணர்
வருமகத் துருவை
வருணனைக் கோலான்
வரைவரோர் கோல. 6

112. கைத்திடு பொருளை
வைத்திடு முறையில்
மெய்த்திரு விலகத்
துய்த்திடத் தருவர். 7

---

106-116. கம்பன் பாவில் அமைந்து விளங்கும் வருணனைகளின் வளமையைப் போற்றி உரைக்கின்றன.

106. பருணிதர் - அறிவு முதிர்ச்சி பெற்ற புலவர். பஞ்ச தரு-தேவ லோகத்துக்குரிய அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரி சாதம், மந்தாரம் என்னும் ஐந்து மரங்கள்.

113. வருணனை வன்மை
பொருணிறை தன்மை
தருங்கவி தாரார்
பெருங்கவி வாரார். 8

[வேறு]

114. வானிடை வந்த எல்லோ வில்லோ
கானிடை வந்த பாரோ யாரோ
ஊனிடை வந்த உயிரோ உணர்வோ
தேனிடை இவர்பாத் திகழும் திகழும். 9

115. மாந்தர் மடுக்கும் வழக்கோ இழுக்கோ
சாந்தர் தொடுக்கும் தவமோ பவமோ
வேந்தர் விளைக்கும் அடலோ மிடலோ
ஏந்தலி னிவர்பா இலகும் இலகும். 10

116. மனத்துற லாய மகிழோ மயக்கோ
இனத்துற லாய இகழோ புகழோ
தனத்துற லாய தருக்கோ சுருக்கோ
அனைத்துற இவர்பா அணியு மணியும். 11

[வேறு]

117. "புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தன தாரைகள்
வள்ளி யோரின் வழங்கின மேக" மென்
றுள்ளி தந்த வருணனை உன்னுமின். 12

118. 'வேந்தன் நற்புகழ்' 'வேதியர் ஏதில் கை
யேந்து தானம்' 'எழில்விலை மாதர்' 'வான்
போந்த வில்லு' 'பொருள் வணிகர்' 'மது
மாந்து மாக்கள்'நீர் வர்ணிக்க வந்தவே. 13

119. 'அரவி னுடும் புனிதன்' 'அணைகட்டும்
குரங்கி னீத்தம்' 'குலம்' 'மதமா' 'மதம்
பரவு மெய்ப்பொருள்' 'தாய்முலை'ப் 'பல்லுடல்
விரவுயிர்' வெள்ள வர்ணனை வேய்ந்ததே. 14

120. 'ஆற்ற ரவமும் ஆலை யமலையும்
சாற்றி னோசையுஞ் சங்குபொங் கோதையும்
ஏற்றி னோடு எருதின் துழனியும்'
வேற்று மைப்பட ஓசை விரிப்பவே. 15

---

117. பால. ஆற்றுப். 4.

118. பால. ஆற்றுப். 5, 6, 8. 7, 10.

119. பால. ஆற்றுப். 15, 9, 18, 11, 19, 12, 20.

120. பால. நாட்டுப். 3.

121. 'தழங்கு பேரியி னார்கலி யானைதாள்
முழங்கு மோதைமுந் நீர் முழக்கு, பதம்
அழுங்கு நூபுர மார்குரல்' வானகம்
விழுங்க லாம்பல் துழனி விரிப்பவே. 16

திங்கள்

122. 'ஆறெலாங் கங்கை யாயக லாழியே
கூறு பாற்கட லொத்தது குன்றெலாம்
ஈறி லான்கை லைமலை யேய்ந்த'வென்
றேரு லாநிலா வீக்கம் இயம்பினன். 17

123. "கண்ணி னைக்கரந் தப்புறம் போயினும்
பெண்ணி றமுள்ள தாயிற் பிடிப்ப"லென்
றுண்ணி றைநெடு நீருல கெங்கணும்
வெண்ணி லாவலை வீசல் விரித்தனன். 18

124. 'வான மேந்திய கைவிளக் கோமகத்
தான தர்மமாம் தையல் வதனமோ
பானு ரைச்சுதை கொண்டுப மூவண்டம்
தான்பு துக்குந் தவழ்நில' வென்றனன். 19

125. 'வெண்ணி றநறை வெள்ளம் நிறைந்ததோ
பண்ணி றஞ்செறிந் தெங்கும் பரந்ததோ
உண்ணி றைதரு காம மொழுகிற்றோ'
தண்ணி லாவின் தழைப்பெனச் சாற்றினன். 20

126. 'வெள்ளிக் கும்பம், கமுகிளம் பாளைவான்
அள்ளற் றாமரை வெண்மல ராரெழிற்
பள்ளப் பாற்கடற் பாயு மமுத, முட்
கொள்ளு பொற்கலம்' என்னவுங் கூட்டினன். 21

ஞாயிறு

127. 'ஆன்ற காத லஃதுற வெய்துழி
மூன்று லோகமும் மூடு மரக்கராம்
ஏன்ற காரிருள் நீக்க இராகவன்
தோன்றல்' சாலச் சுடர்வர வேத்தினன். 22

---

121. சுந்தர. ஊர் தேடு. 13.
122. பால. உண்டாட்டு. 3.
123. யுத்த. இலங்கை கேள்விப். 5.
125. பால. உண்டாட்டு - 1.
126. பால. மிதிலைக். 72.
127. ஆரணிய. சூர்ப்பணகைப். 89.

128. 'நீல வல்லிருள் நீங்கலு நீங்குமம்
மூல மில்கன விற்றிரு முற்றுற
ஏலு நல்வினை துய்ப்பவர்க் கீறுசெல்
காலம் போற்'கதிர் தோன்றலைக் காட்டினன். 23

129. ''மானி னேக்கியர் மைந்தரோ டாடிய
ஆன நீர்வினை யாடலை நோக்கினன்
தானு மன்னது காதலித் தானென ''
மீன வேலை விழுமொளி வேய்ந்தனன். 24

130. ''அன்ன மென்னடை யாளடை காமத்தீ
தன்னை யுஞ்சுடு மென்னத் தரிக்கிலா
நன்னெ டுங்கை யடங்கன டுங்கப்போய்
முன்னை நீர்க்கதிர் மூழ்கல் முடித்தனன். 25

இருள்

131. 'ஆலம் பூமிப ரந்தது வோ ?அவர்
நீல முள்ள நிரம்பிய தோ ?கடும்
கால னூர்நிறம் கவ்விய தோ' வென
மாலி ருட்டின் மயத்தை வடித்தனன். 26

வெப்பம்

132. 'படியின் வெம்மை பகரின் பகருநா
முடியவேம் முடிருள் வான்மு கடுவேம்
விடியுமேல் வெயில்வேம் மழைவே'மென்று
கொடிய சூட்டின் கொழுந்துகண் டாரெவர் ? 27

கானல்

133. 'ஏய்ந்த ருங்கன லெய்தின கானற்றேர்
வேந்தன் வேனிலான் வீற்றிருக் கப்புனை
பாய்ந்த பொற்காற் பளிங்குநற் பீட'மென்
ருய்ந்து கான லழகுதந் தாரெவர் ? 28

---

128. அயோத்தியா. திருவடி சூட்டு. 18.

129. பால. நீர்விளையாட்டுப். 32.

130. பால. மிதிலைக். 61.

131. பால. மிதிலைக். 67.

132. பால. தாடகை வதைப். 6.

133. பால. தாடகை வதைப். 14.

### பறவை

134. ‘உன்னு நாரை மகன்றில் புதாவுளில்
அன்னங் கோழிவண் டானமோ டாழிப்புள்
கின்ன ரங்குரண் டம்கிலுக் கஞ்சிரல்
சென்னம் காகம் குணலம் திரட்டினன். 29

### மக்கள் தொழில்

135. பகடு ரப்பலும் நெல்லின் படுபரச்
சகட மூர்தலும் தந்தி பொருத்தலும்
மகளி ரோடு வதுவை பொருந்தலும்
தொகையி லாடவர் சூழ்செய லாகுமே. 30

136. ஊடலு மன்பர்க் கூடலு மின்னிசை
பாட லுங்கரி யூரலும் பன்மலர்ச்
சூடலுந் தேற லுண்டுசூ துந்தலும்
ஆடலும் மாத ரார்செய லாகுமே. 31

137. ‘பங்க யநீலம் வள்ளை படர்கொடி
செங்கி டைவெண் தரங்கம் சினைவரால்
தங்க ளவய வங்கள் தழுவிய’
மங்கை யர்குடை வாவி மடுத்தனன். 32

### இசை

138. ‘ஊன ளைந்த வுடற்குயி ராமெனத்
தான ளைந்து தழுவின தண்ணுமை
தேன ளைந்து செவியுற வார்த்தென
வான ளைந்த இசையும்’ வகுத்தனன். 33

139. ‘புள்ளி கொள்வன பொன்விரி புன்னை’யென்
றுள்ளித் தந்த வுவமை யுரைக்குமால்
பள்ள நீருல கெங்கும் படர்பொருள்
கொள்ள லாய குணங்கள் குறித்திறன். 34

---

134. சுந்தர. ஊர்தேடு. 151.

135. பால. நகரப். 67, 68.

136. பால. நகரப். 66.

137. பால. மிதிலைக்காட்சிப். 18.

138. அயோத்தியா. பள்ளிபடைப். 16.

139. பால. நாட்டுப். 33.

[வேறு]

140. ‘பங்குனி மலர்ந்தொளிர் பலாசவனம்’ ‘வாய்மீன்
தங்குவதாம் வன்கொடிறு தாங்குமுது நாரை
திங்கரவம் கவ்வியெழு திண்கலுழன்’ எல்லாம்
இங்குறையி யற்கைபரி செய்துமுறை யாமே. 35

கார்காலம்

141. “நிறைந்தன நெடுங்குளன் ; நெருங்கின தரங்கம் ;
குறைந்தன கருங்குயில் ; குளிர்ந்தவுயர் குன்றம் ;
மறைந்தன தடந்திசை ; வருந்தினர் பிரிந்தார் ;
உறைந்தன” கடுத்தமழை ஓதுவகை ஒன்றோ ? 36

இலங்கை எரியூட்டல்

142. “முடிந்தன பிளந்தன முரிந்தன நெரிந்த
மடிந்தன பொடிந்தன மறிந்தன முறிந்த
இடிந்தன தகர்ந்தன எரிந்தன கரிந்த
ஒடிந்தன ஒசிந்தன காவுக்கவகை யொன்றோ ? 37

போர் வருணனை

[வேறு]

143. “கடல்வற்றின மலையுக்கன பருவக்கனல் பருகுற்
றுடல்வற்றின மரமுற்றின கனல்பற்றின உதிரம்
சுடர்பற்றின சுறவுக்கன துணிபட்டுதிர் கணையின்
திடருற்றது பரவைக்குழி” செருவுற்றது மொன்றோ ? 38

ஆறு

[வேறு]

144. “அலம்பு மாமணி யாரத்தோ டகிலனை புளினம்
நலம்பெய் பூணகில் நாகிள வஞ்சியா மருங்குல்
புலம்பு மேகலைப் புதுமலர்ப் புனையறற் கூந்தற்
சிலம்பு சூழ்பதச்” சோணைபாய் சிறப்பினைத் தெரிமின். 39

145. ‘புவியி னுக்கணி யாயரும் பொருளுகப் புலத்தோ
டவிய கத்துறை தாங்கி ஐந் திணையொட ளாவிச்
சவியு றுந்தெளி வோடுந்தண் ணெழுக்கொடுஞ் சான்றோர்
கவியெ னுங்கோ தாவிரி’ விரிதலைக் காண்மின். 40

---

140. சுந்தர. ஊர்தேடு. 68.
141. கிட்கிந்தா. கார்காலப். 71.
142. சுந்தர. பொழிலிறுத்த. 9.
143. யுத்த. நிகும்பலையாகப். 112.
144. பால. அகலிகைப். 1
145. ஆரணிய. சூர்ப்பணகைப். 1.

146. ‘காயுஞ் சூரிய குலத்தர சரோகைக் கொண்ட
ஏயும் நல்லொழுக் கின்படி பூண்டது எழிலே
வாயும் கோசலம் வாழுயி ரனைத்தையு மூட்டும்
தாய்மு லையொக்குஞ் சரயுசார் சந்தமுந் தரிமின். 41

147. ‘தேனுஞ் சாந்தமும் மான்மதம் செறிநறுஞ் சோறும்
வான நாண்மலர் கற்பக மலர்களும் வயமாத்
தான வாரியும் நீரொடு மடுத்தலிற் றழீஇய
மீனு தானுமோர் வெறிகொளும்’ விதத்தினை விரித்தான். 42

148. ‘திருகு றுஞ்சினத் தரக்கருங் கருநிறம் தீர்ந்தார்
அருகு போவதாற் றிங்களு மறுவற்ற தழகைப்
பருகி லங்கையின் ஒளிகடற் பாய்தலிற் பொன்னே
உருகல் போன்றது’ வெனவொளி யொளிரலு முரைத்தான். 43

இலங்கை

[வேறு]

149. “மின்ன லோவிளக் கோவெயி லோவெனும்
கன்னி மாநகர் காலும்நிழல் கௌவிப்
பொன்னுல காய்ப்பொ லிந்தது வா’னெனச்
சொன்ன வர்ணனைத் தூங்குமோர் தோரணை. 44

## 5. கதைமக்கட் படலம்

### இராமன்

150. இற்பி றப்பா ரிரண்டுபா லார்க்குமே
கற்பிற் பொற்பா ரணிகல னில்லென
அற்பிற் றுய்ப்பா ரருந்தனை யில்லெனக்
கற்பிக் கின்ற திராம கதையரோ. 1

151. சீதைபோல் கற்பின் றிண்மை சேர் மாதரார்
ஓத லாமெனி னுமுயர் காவியத்
தேதி லாவ திராமற் கெதிரெனக்
கோதி லாவோர் குமரனைக் கூறுதிர். 2

---

146. பால. ஆற்றுப். 12.

147. சுந்தர. ஊர்தேடு. 17.

148. சுந்தர. ஊர்தேடு. 15.

149. பால. நகரப். 40.

152. ''ஆர்வத் தாலழி யாயிழை கொண்கற்குச்
சோர்தொறும் சோர்தொ றும்உயிர் தோன்றலால்
ஆருயி ரொன்றே ஆயிர மா'' மென்ற
ஏர விர்கவிப் பாடவம் எண்ணுதிர். 3

153. ''ஏதி லாரு மெளியரென் றுரையும்
தீது தீர்ப்பதென் சிந்தைக் கருத்தென''
ஓது மப்பெரு முத்தமன் கட்டுரை
மேதி னிக்கோர் விதிதரு மேலுரை. 4

154. ''ஈர மாவதும் இற்பிறப் பாவதும்
வீர மாவதும் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவதும் மற்றொரு வன்மனைச்''
சோர னுவது வோவெனச் சுட்டினன் 5

155. ''ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் தம்பிநீ
தோழன் நங்கை கொழுந்தி'' எனச்சொலும்
ஆழிநண் பிற்கோர் ஆழங் குறிப்பதோ? 6

156. தீய ளான கைகேசி பரதனைத்
தாயும் தம்பியு மாக்கத் தசரதற்
கேயும் மன்னிப் பினிமை யியம்புதல்
தூய வுள்ளத் திராமன் துணிவரோ. 7

[வேறு]

157. 'உட்டனை யன்பொன்றே உயிரின் மாற்றறி
கட்டனை' யாமெனக் கைகை கூற்றையும்
விட்டிடா வாறுதன் தாதை வேண்டிய
சிட்டன துரையுயிர் திருத்த லாறன்றே. 8

158. ''உன்னைமீட் பான்பொருட் டன்றே யூர்பழி
என்னைமீட் பான்பொருட் டிலங்கை எய்தினேன்''
என்னுஞ்சொற் காட்டுமே ராமன் மாமனம்
துன்னெழுக் காறவாம் சோர்வில் காட்சியே. 9

159. கூரிய அம்பெனக் கூறுந் தம்பியை
ஆரியன் இனிதுற நோக்கி, ''ஐயவிச்
சீரிய வல்லன செப்பல்'' என்பதும்
பாரியல் பதத்தின் மேற்பத மளிப்பதே. 10

---

154. கிட்கிந்தா. வாலிவதைப். 99.
155. சுந்தர. காட்சிப். 23
158. யுத்த. மீட்சிப். 63.
159. அயோத்தியா. தைலமாட்டுப். 46.

160. "இளையவ னிறந்தபின் னெவரு மென்னெனக்
களவறு சீர்த்தியென் ? அறிவென் ? ஆண்மையென் ?
கிளையுறு சுற்றமென் ? அரசென் ? கேண்மையென் ?"
உளைவுறு ராமனன் புரையீ தாகுமே. 11

161. நாதனிந் திரன்நிற்கு நல்குந் தேரென
மாதலி யுரைக்கவும் வாய்மை கொள்கிலான்
தீதிய லக்கரின் செயல யிர்த்தவா
ரேதுமே பலபட வூன்றி யாய்மதி. 12

162. "முன்புநின் றிசைநிறீஇ முற்றும் பேரறம்
இன்பம்வந் துறுமெனின் இனிய தாயிடைத்
துன்பம்வந் துறுமெனின் துறப்பதோ" வெனு
அன்புடன் அறத்திறன் அளக்க லாயினன். 13

163. "நிறப்பெரும் படைக்கலம் நிறத்தி னேருற
மறப்பயன் விளைக்குறும் வன்மை யன்றரோ
இறப்பினும் திருவெலா மிழப்ப எய்தினும்
துறப்பில ரற"மெனுந் துணிவு சூட்டினன். 14

164. "ஏழுமே கடலுல கேழும் ஏழும்வாய்
வாழுமே மையர்சிறு வலிக்கு வாளமர்
தாழுமே இராகவன் தனிமைத்" தன்மையென்
ஞளுமே யெனத்தம்பி நாட்டிக் காட்டினன். 15

[வேறு]

165. மறத்தைக் கோறவும் மன்னுயிர்க் கின்னல் மாய்த்திடவும்
அறத்தை நாட்டவும் அவதரித் தானியா ரளப்பர் ?
"பிறத்தி யாவையும் காத்தவை பின்னுறத் துடைக்கும்
திறத்து மூவரும் திருத்திய திருத்து மத்திறலோன்." 16

[வேறு]

166. "என்ன ஏவினனே தாதை அஃதியற் றுவல்யா னெ" ன்றும்
"மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுக்கே" னென்றும்
"பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதெ"ன்றும்
சொன்னவன் தமர்பாற் பூணும் தொடர்புக்கோ ரிலக்குச்
[சூழ்ந்தான். 17

---

160. யுத்த. மருத்துமலைப். 77.
161. யுத்த. இராமன் தேரேறு. 16 - 25.
162. அயோத்தியா. தைலமாட்டு. 29.
163. அயோத்தியா. தைலமாட்டு. 30
164. ஆரணிய. இராவணன் சூழ்ச்சிப். 6.
165. அயோத்தியா. மந்திரப். 39.
166. அயோத்தியா. கைகேயி சூழ்வினைப். 110.

167. "குகனொடு மைவ ரானேம் முன்பு, பின் குன்று சூழ்வான்
மகனொடு மறுவ ரானேம் எம்முழை யன்பின் வந்த
அகனமர் காத லைய நின்னொடு மெழுவ ரானேம்"
சகத்தினி லிங்ஙன் நட்புச் சாற்றின ருளரோ தேற்றி ? 18

168. "கார்த்தவீ ரியனென் பானுற் கட்டுண்டா னென்னக் கற்கும்
வார்த்தையுண் டதனைக் கேட்டு நாணுறு மனத்தி னேற்கு
போர்த்தலை பிறகிட் டான்மேற் புகும்வென்றி யவத்த"மென்ற
பார்த்திப னுரையில் வீரப் பான்மையின் மேன்மை பல்கும். 19

169. 'தொழுங்கையிற் குளறிவாயும் துளங்குமெய் விதிர்த்துப் பாரில்
விழுந்திரி கவியின் சேனை வெருவப்பா லமளி யந்நாள்
எழுந்திருப் பவன்போல் ராமன் எழுந்தனன்' என்னல் வீரத்
துளந்தரு உறைப்பின் ஊற்றச் சிறப்பினை உயர்த்து மன்றே. 20

170. "வன்புலங் கடந்து மீளும் தம்பிமேல் வைத்த மாலைத்
தன்புல நயன மென்னுந் தாமரை சொரியுந் தாரை
அன்புகொல்? அழுக ணீர்கொல் ? ஆனந்த வாரி யேகொல் ?
என்புக ளுருகிச் சோருங் கருணைகொல்?" எனல்மே லுண்டோ?

[வேறு]

171. 'அவ்வகை யறுபதெழு கோடியரி வேர்ந்தர்க்
கெவ்வகைய பூணினொடு தூசிவுளி நல்கிப்
பவ்வமென லாயபடை வீரர்கடை நோக்கம்'
துவ்வஅளி தோன்றலுளம் தோய்கருணை என்னே ! 22

சீதை

172. "ஆரந் தாழ்திரு மார்பர்க் கமைந்ததோர்
தாரந் தானல ளேனுந் தரித்தவில்
வீரங் காத்திட" வேண்டின சீதையின்
பேரபி மானப் பெற்றியைப் பேணுதிர். 23

173. "யானி ழைத்த வினையினின் இவ்விடர்
தான டுத்தது ; தாயினு மன்பினேய்
கூனி யிற்கொடி யாரலர்" என்றவான்
தேன்பொ திக்கரு ணைத்திறம் தேர்குதிர். 24

---

167. யுத்த. வீடணன் அடைக்கலப். 146.
168. யுத்த. இராவணன் வதைப். 208.
169. யுத்த. இராமன் தேர் ஏறு. 1.
170. யுத்த. இந்திரசித்துவதை. 65.
171. யுத்த. விடைகொடுத்த. 28.
172. சுந்தர. சூடாமணிப். 30.
173. யுத்த. மீட்சிப். 35.

174. ''ஈசற் காயினு மீடழி வுற்றிறை
வாசிப் பாடழி யாத மனத்தினன்''
கூசிக் கூசித்தன் னுசை குழறிட
ஏசும் மெல்லிய லீட்டினுக் கீடெது ? 25

175. 'திங்க ளொன்றி லிராமன் செலானெனிற்
கங்கை யாற்றிற் கடன்செயச் செப்புபூ
மங்கை சீதை மனத்திட னுட்டுமே
மங்கலில் வன்மை மெல்லியர் மாட்டுமே. 26

176. 'நாய கன்வனம் நண்ணலுற் றுனென,
மேய மண்ணிழந் தானென விம்மலள்
நீவ ருந்தலே நீங்குவன்' யானெனும்
தீய சொல்லே தன்காதற் றெறுதலால். 27

177. ''உற்று நின்ற துயரமி தொன்றுமே
எற்று றந்தபின் இன்பங் கொலா'' மெனச்
சொற்ற சீதை துணிந்த குறிப்பிகழ்
வெற்றி கொண்ட திராமன் விழிக்கவே. 28

பரதன்

[வேறு]

178. ''நிறையி னீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையி னீங்கிய தவமும் பொங்கருட்
டுறையி னீங்கிய அறமும் தொல்லையோர்
முறையி னீங்கர சினைவிஞ் சா''வென, 29

179. அறைத ரும்பர தன்றன் வாய்மொழி
மறைத ரும்பல நெறிக்கும் மாதவர்
துறைத ரும்பல சூழ்தொ ழிற்குமோர்
நிறைத ருந்துலாக் கோல்நி கர்க்குமே. 30

அனுமான்

[வேறு]

180. ''திறம்தி றம்பிய காமச் செருக்கினல்
மறந்து தத்தம் மதியின் மயங்கினர்
இறந்தி றந்திழிந் தேறுவ தே''யென
அறந்த வாவுரை யாற்று மனுமனே. 31

---

174. சுந்தர. காட்சிப். 102.
175. சுந்தர. சூடாமணிப். 32
176. அயோத்தியா. நகர் நீங்கு. 224
177. அயோத்தியா. நகர் நீங்கு. 234.
178. அயோத்தியா. திருவடி சூட்டு. 100.
180. சுந்தர. பிணிவீட்டு. 96.

### இராவணன்

[வேறு]

181. இசைபெறு மிராவண னிருந்த மந்திரத்
திசைபெறுங் காவலின் செருக்கு நோக்குமின்
''விசையுறு பறவையும் விலங்கும் வேற்றவும்
அசைதொழி லஞ்சின சித்தி ரத்தினே.'' 32

182. ''இன்னபோ திவ்வழி நோக்கு மென்பதை
உன்னலர் கரதலம் சுமந்த உச்சியர்''
என்னரா வணனர சிருக்கை கூறவே
அன்னவ னடல்பிறி தறைய வேண்டுமோ? 33

183. ''யாவரு மிறைவரென் றிறைஞ்சு மேன்மையோர்
மூவரு மொதுங்கின ருனக்கு மொய்ம்'' பென
மேவரு மிராவணன் மிடலுங் கொற்றமும்
தாவறக் கூறலைத் தாண்டல் சாலுமோ? 34

[வேறு]

184. ''எழுமி ருக்கு மிரைக்கு மிரக்கமுற்
றழும ரற்று மயர்க்கும் வியர்க்கும்போய்
விழும்வி ழிக்கும் முகிழ்க்கும்தன் மேனியால்
உழும் நில''மெனி னேனுடை யாதுயிர்? 35

### கும்பகன்னன்

185. இல்ல வாகொள் ளரக்கனை ராமனை
''வெல்ல லென்பதும் வேயிளந் தோளியைப்
புல்ல லென்பதும்'' போலி நினைப்பெனக்
கல்லத் தூண்டுகன் னனுரை காண்பிரால். 36

186. ''என்னை வெல்லின் இலங்கையர் காவலா
உன்னை வெல்லுத லுண்மைய தாமெ''னச்
சொன்ன வாக்கிற் றெனிக்கு மிலங்கையின்
மன்னைக் கன்னன் மதித்த வகையரோ! 37

---

181. யுத்த. இராவணன் மந்திரப். 10.
182. ஆரணிய. மாரீசன்வதைப் (சூர்ப்பணகை சூழ்ச்சிப்) 8.
183. யுத்த. இராவணன் மந்திரப். 23.
184. யுத்த. இராவணன் சோகப். 15.
185. யுத்த. கும்பகருணன் வதைப். 81.
186. யுத்த. கும்பகருணன் வதைப். 97

[வேறு]

187. ‘ஆசில்பர தாரமவை யஞ்சிறை யடைப்பேம்
மாசில்புகழ் காதலுறு வேம்வளமை கூரப்
பேசுவது மானமிடை பேணுவது காமம்’
ஆசியமிம் மாற்றநனி மூசியதும் ஆய்மின். 38

[வேறு]

188 “கருத்திலா இறைவன் தீமை கருதினு லதனைக் காத்துத்
திருத்தலா மாகி னன்றே திருத்துதல் தீரா தாயின்
ஒருத்தரில் முன்னஞ் சாதல் உண்டெமக் குரிமை” யென்றான்
பெருத்த தந்திரநீர் நீந்தித் தன்பெரும் பலத்தைச் சார்ந்
[தான். 39

189. “உந்தையை மறைந்தோ ரம்பால் உயிருண்டு உதவி யோற்குப்
பந்தனைப் பகையைச் செற்றுக் காட்டலே யென்னிற் பாரோர்
நிந்தனை செய்வ” ரென்றே நிரப்பினன் வாலி சேய்க்கு
வந்திடும் வெறுங்கை யன்மேல் சூலம் வாங்காத சூரன். 40

[வேறு]

190. ‘எள்ளி எற்றலு மெயிறிளித் தோடின
வானரக் குலமெல்லாம்
உள்ள கையினு மற்றவெங் கரத்தையே
அவையஞ்ச வுய்த்திட்டான்
புள்ளி வீரனும் வாலியைப் பூக்கவர்ந்
துணியெனப் புகன்றும்வில்
வள்ளல் ராமனை வடிக்கணைச் சேவகம்
வலித்தும்’ நில் வயவீரன். 41

[வேறு]

191. இந்திர சித்தினே டிராவ ணன்திறல்
முந்தின ராயினு மிவனைப் போல்முனைப்
‘பந்தியிற் பந்தியிற் படையைச் சிந்துதல்
தந்திர மன்’றெனச் சாற்றினர் கொலோ? 42

விபீஷணன்

192. “அறிஞரே யாயினு மரிய தெவ்வரைச்
செறிஞரே யாவரேற் கெடுதல் திண்ண”மென்
றுரைசெயும் வாசக முறுத்து மேபகைத்
துறைநின்றார் பயனென்றுந் தோய்கி லாரென. 43

---

187, யுத்த. இராவணன் மந்திரப். 52.
188. யுத்த. கும்பகருணன் வதைப். 157.
189. யுத்த. கும்பகருணன் வதைப். 193.
191. யுத்த. கும்பகருணன் வதைப். 89.
192. யுத்த. வீடணன் அடைக்கலப். 73.

193. ''மறந்துறந் தவர்தரு வரத்தி னுல்தவம்
நிறம்திறம் பாவகை யியற்று நீர்மையால்
அறந்துறந் தமரரை வென்று ளே''மெனச்
சிறந்தறப் பயனேவீ டணன்தெ ரித்தனன். 44

[வேறு]

194. ''உண்டிலன் நறவம் பொய்மை உரைத்திலன் வலியா லொன்றும்
கொண்டிலன் மாய வஞ்சம் குறித்திலன் பிறனில் வைகும்
பெண்டிரிற் றிறம்பி னுற்பின் னின்றில'' னென்ற வாய்மை
எண்டிசை யிசைவ தாம்வீ டணனிசை இசைக்கு மன்றே. 45

இந்திரசித்து

[வேறு]

195. ''அரஞ்சுடர் வேற்றன தனுச னிற்றசொல்
உரஞ்சுட எரியுயிர்த் தொருவ னேங்கினுன்;
புரஞ்சுட வரிசிலேப் பொருப்பு வாங்கிய
பரஞ்சுடர் ஒருவனேப் பொருவும் பான்மையன்.'' 46

196. 'எல்லேயிற் சேனேகொண் டெதிர்ந்த இந்திரன்
ஒல்லேயி லுடைந்தனன் உய்ந்து' ளானெனில்
அல்லவன் பிழைத்ததோ அமுதின் வண்மையால் ;
ஒல்லுமோ இவனுர மொடுக்கல் ஊழியில்? 47

197. 'இவனருந் திறலினு லியன்ற போர்ச்சதிர்
சிவனல அயனல செங்கண் மாலல
எவனிவற் கிறையென உறைப வனல
புவனத்தி லொருவராற் பொருந்த லாவதோ? 48

[வேறு]

198. ''முரட்டடந் தண்டு மேந்தி மனிதரை முறைமை குன்றிப்
பிரட்டரிற் புகழ்ந்து பேதை யடியரின் இரந்து பின்சென்
றிரட்டுறு முரச மென்ன இசைத்ததே யிசைத்தா'' யென்னத்
திரட்டுறு மாற்ற மிந்திர சித்திகழ் தெரிக்கு மன்றே. 49

199. அல்லானு மரக்கர் வேந்தன் அணியென்கோ மகுட மென்கோ
மல்லாளும் வலக்கை யென்கோ மாளொணு உயிரே என்கோ
வில்லாள ரெண்ணில் முன்னர் விரல்வரும் வீரன் வென்றி
சொல்லாளத் தகுமோ சூழ்ச்சித் துறையெலாங் கடந்த
[சூரன். 50

---

193. யுத்த. இராவணன் மந்திரப். 69.
194. யுத்த. நிகும்பலேயாகப். 174.
195. சுந்தர. பாசப். 2.
198. யுத்த. நிகும்பலேயாகப். 164.

இலக்குமணன்

[வேறு]

200. "நீருள வெனினுள மீனும் நீலமும்
நாருள தனுவுளாய் நானும் சீதையும்
ஆருள ரெனினுளேம்? அருளு வாயெனச்"
சீருள அன்பியல் தெரித்த செவ்வியன். 51

[வேறு]

201. முன்னின் ருரை விலக்கி முடுகுவேல்
தன்ன ருந்தட மார்பினிற் ருங்கிய
மன்னி லக்குவன் காட்டிய மட்டிலா
இன்ன ருட்டிற மென்றும் ஒழிவதோ? 52

பொது

அனுமான்

202. "மன்னிற் ருேன்றினேம் மாண்டுளேம் இற்றைநாள்
நின்னிற் ருேன்றினேம் நீதியிற் ருேன்றிஞய்"
என்ன ராம னிசைக்கு மிசைகொளும்
பொன்தொ ழும்புப் புமான்புகழ் பொய்ப்பதோ? 53

கும்பகன்னன்

203. 'தம்பி கோறத் தவிரான் தகவிலான்
உம்பி யோடு முன்னேடு மனுமனே
டெம்பி யையைத் தினிதளித் தி'யென்ற
கும்ப கன்னன்கூர் அன்பும் குணிப்பதோ? 54

இராவணன்

204. 'முன்னை மாண்டார் முடிப்பர் பகையென்றும்
உன்னை வென்றி யுதவுமென் றுன்னிலேன்
என்னை நோக்கியே இப்பகை தேடினேன்'
என்னு மிராவணன் ஈடு மிசைப்பதோ? 55

---

200. அயோத்தியா. நகர்நீங்கு. 152.
201. யுத்த. வேலேற்ற படலத்தில் - இராவணன் விபீடணன்மேல் எறிந்த வேலை இலக்குவன் தன் மார்பில் ஏற்ற நிகழ்ச்சி குறிக்கப்படுகிறது. வேலேற்ற. 30 - 32.
202. யுத்த. மருத்துமலைப். 202.
203. யுத்த. கும்பகருணன் வதைப். 359.
204. யுத்த. இந்திரசித்து வதைப். 8.

இந்திரசித்து

205. 'சேலி யற்க ணியக்கியர் இராவணி
கோல விற்குரல் கேட்டுக் குலுங்கித்தம்
தாலி யைத்தொட்டுத் தாங்கருஞ் சூரனின்'
பாலி யைந்த படுபயம் நோக்குதிர். 56

வாலி

206. 'செயலைச் செற்றுப் பகைதெறு வான்பெரும்
புயலைப் பற்றுமப் பொங்கரி போக்கியோர்
முயலைப் பற்றிய வீரன் முயற்சியின்'
இயலைக் கூறி யிகழ்ந்ததும் எண்ணுதிர். 57

207. 'கனித்த வின்கனி கள்ளினிற் காட்டலும்
இனித்த பாக்கிய மிழிபித் தியற்றலும்
மனித்தர் தந்நிலை மாற மனத்திடைச்
சனித்த வேற்றுமை' சாற்றலும் போற்றுதிர். 58

பரதன்

208, ''எண்ணில் கோடி இராமர்க ளென்னினும்
அண்ணல் நின்னரு ளுக்கரு காவரோ ?''
கண்ணிக் கூறுமிக் கௌசலை வாசகத்
துண்ணி லைக்கு முயர்குணம் உன்னுதிர். 59

கௌசலை

209. ''சிறக்குஞ் செல்வம் மகற்கெனச் சிந்தையிற்
பிறக்கும் பேருவ கையொன்றும் பேணலள்,
துறக்கும் மன்னவ னென்னுந் துணுக்கமே''
கறக்க லானதக் கௌசலை காதலை. 60

காதல் காம வேற்றுமை

210. இலங்கு காதல் இனியநீ ரோடையும்
கலங்கு காமக் கலுழியும் வேறுறப்
பொலங்கு ழையின் புனிதநல் வேட்கையில்
விலங்க ரக்கி விழைவிற் றழையுமே. 61

---

205. யுத்த. இராவணன் சோகப். 21.
206. கிட்கிந்தா. வாலிவதைப். 94
208. யுத்த. மீட்சிப். 230.
209. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 5.
210. பால. மிதிலைக்காட்சிப் படலம்; ஆரணிய. சூர்ப்பணகைப் படலம்.

211. "இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந்தொ டே" னெனுஞ் செம்மலும்
நொந்த காமநுங் காவி யரக்கனும்
தந்த வேற்றுமை பொன்மணும் தாங்குமோ? 62

அடிமைத்தனம், நட்பு, சகோதரவாஞ்சை

212. அடிமை யிற்பெரி யானனு மன்குகன்
நெடிய கேள்சுக் கிரீவன் விபீடணன்
படியுஞ் சோதரர் பாரதன் லக்குவன்
வடியக் கூறி வகுத்த குணங்களால். 63

இராக்கதவீரர் தம்முள் வரும் வேற்றுமை

213. சுத்தனுங் கன்னன் சூரமும் இந்திர
சித்தன் மாயம் திணிதிறலும் லங்கைக்
கத்தன் காட்டுங் கடுமனத் திண்மையும்
எத்தெத் தன்மை இசைந்திசை யாவென்ருன். 64

தாரையும் மண்டோதரியும்

214. வாலி மாள மனத்தயர் வுற்றும்பின்
தாலி யற்றுயிர்த் தாங்கின தாரைசீர்
வேலி யற்கண் மண்டோதரி ராவணன்
மேலி யற்றும் விளிவில் விளியுமே. 65

## 6. மெய்ப்பாட்டு வருணனைப் படலம்

215. "கூல மாமரத் திருஞ்சிறை புலர்த்துவ குரண்டம்
ஏலும் நீர்நிழல் இடையிடை யெறித்தலிற் படிகம்
போலும் வார்புனல் புகுந்துள வாமெனப் பொங்கி
யாலு மீன்கண மஞ்சின" துரைத்ததோர் புடையே. 1

216 'அணையி லேறின சிலசில, ஆழியை நீந்தப்
புணைகள் தேடின சிலசில, நீந்தின போன
துணைக ளோடுபுக் கழுந்தின சிலசில, தோன்ருப்
பணைக ளேறின' கவிப்பயம் பகர்ந்ததோர் புடையே. 2

---

211. சுந்தர. சூடாமணிப். 34.

212. அடிமையிற் சிறந்தார்: அனுமன், குகன். நட்புக்குச் சுக்கிரீவன், விபீடணன். சகோதர வாஞ்சைக்கு பரதன், இலக்குவன்.

213. கன்னன் - கும்பகருணன்.

215. கிட்கிந்தா. பம்பைவாவிப். 19.

216. யுத்த. மூலபலவதைப். 28.

217 இலகச் சேதுவை யியற்றிய காலையிற் கடலிற்
'குலம டந்தையர் போற்கொடி மரங்களைத் தொடர்ந்த,
விலகு வேசையர் போற்கரி வண்டுவிட்' டென்ன,
உலக மாதரி ணெழுக்குவ மித்ததோர் புடையே. 3

218 'தாயொக் குமன்பில் நலம்பயப் பிற்றவ மொக்கும்
சேயொக் கும்பினர் செல்கதி யுய்க்கின்ற நீரால்
நோயொக் குமெனின் மருந்தொவு' மென்று நல்வேந்தர்
வாயும் நன்னெறி வழுத்தவந் ததுவுமோர் புடையே. 4

219 'உளப்ப ரும்பிணிப் புற்றிடா லோபமென் றென்றே
அளப்ப ருங்குண மனைத்தையுங் கிளையொடு மழித்து'
விளைப்ப வாம்பயன் வீட்டுதீ மைக்குழு லமெனக்
கிளப்ப ரும்விதம் கிளந்தளந் ததுவுமோர் புடையே 5

220 'சொல்லொக் கும்வேகச் சுடுசரம் கொடியதா டகையின்
கல்லொக் குநெஞ்சிற் றங்கிடா தப்புறங் கழன்று
புல்லர்க் குநல்லோர் புகல்பொருள் போனபோ' லென்று
நல்லு ரையிற்கீழ் நடைநவின் றதுவுமோர் புடையே. 6

221 "உருண்ட வாய்தொறும் பொன்னுருள் உரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையும் தன்னிறப் படுத்திய ரதம்போல்
தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட தன்மைமாற் றலை"மிலைந் ததுவுமோர் புடையே. 7

222. 'வியர்த்த மேனியன் விழிபொழி மழையன் மூவினையைச்
செயிர்த்த சிந்தையன் தெருமர லுழந்துழந் திழிவான்
அயிர்த்து நோக்கினும் தென்றிசை யன்றிவே றறியான்'
பயத்த துன்பிவை பரதனைப் பகர்ந்ததோர் புடையே. 8

223. 'தேறி னார்களுந் தியங்கினர் மயங்கினர் திகைத்தார்
வேறு நாஞ்சொலும் வினையிலை மெய்யிலைம் புலனும்
ஆறி னார்களு மஞ்சினர்' ஆக்கிட அரக்கன்
ஏறி னன்பெருந் தேரென இசைத்ததோர் புடையே. 9

---

217. யுத்த. சேதுபந்தனப். 59, 60.

218. பால. அரசியல். 4.

219. பால. தாடகைவதைப். 25.

220. பால. தாடகை வதைப். 50.

221. பால. சந்திரசயிலப். 8.

222. யுத்த. மீட்சிப். 208, 209.

223. யுத்த. இராவணன் தேர் ஏறு. 25.

224. 'தோற்பித் தீர்மதி யாரெழில் மேனியைச் சுட்டீர்
வேர்ப்பித் தீர்தென்றல் மீதுற மெலிவித்தீர் தோளை
ஆர்ப்பித் தீர்வேளை, அறிவித்தீ ரின்னலெ'ன் றயர்ந்த
மாற்பித் தேறும்ரா வணன்வெறி வலித்ததோர் புடையே. 10

225. 'பெண்பி றந்தவ ரருந்ததி யேமுதற் பெருமைப்
பண்பி றந்தவர்க் கருங்கல மாகிய பாவாய்
மண்பி றந்தக முனக்குநீ வானில் வந்தா' யென்
றெண்பி றந்தபெண் சிறப்பியம் பினதுமோர் புடையே. 11

226. ''உலக மேழினோ டேழும்வந் தவனுயிர்க் குதவி
விலகு மென்னினும் வில்லுடை வாளியின் வீட்டித்
தலைமை யோடுநின் றுரமும் உனக்கின்று தருவேன்
புலமை யோ''யெனப் புனிதனட் புரைத்ததோர் புடையே. 12

பெருமிதநடை

227. ''ஊழி பேரினும் பேர்வில உலகங்க ளுலைந்து
தாழுங் காலத்துந் தாழ்வில'' எனநனி தழைந்து,
''சூழு மொன்றினுக் கொன்றியோ சனைபல வுண்டென்''
றுளும் வர்ணனை யடையுங்கம் பீரத்தி னடையே. 13

228. 'மாகா ரினமினற் கொடிகையி லடுக்கினர் மடக்கி
மீகா ரத்தெவண் நறுந்துகள் விளக்கினர் வீசும்
ஆகா யந்தரு கங்கையங் கையிலளித் தெளித்தார்
பாகா யவிஞ்சொல் லவ'ரெனல் பெருமிதப் பண்பே. 14

229. 'ஆழித் தேரும்மா அரக்கரும் உருக்கிடும் செங்கட்
சூழி வெங்கதத் தும்பியும் துவன்றிய சேனை
ஊழி வெங்கன லொத்தது நடுநின்ற அனுமன்
பாழி மேரெ'னப் பகர்ந்ததும் பெருமிதப் பண்பே. 15

230. 'இறைவர் மூவரென் றெண்ணிடா தியம்பின ரென்னே
அறைக மூலனு மானெடு நால்வரா' மென்றே
பிறைஎ யிற்றிரா வணன்மகன் பேணிய பேச்சின்
முறையில் வந்ததும் அற்புதாற் புதத்தினோர் முடிவே. 16

---

224. யுத்த. மாயாசனகப். 11.
225. யுத்த. மீட்சிப். 123.
226. கிட்கிந்தா. நட்புக்கோட். 70.
227. கிட்கிந்தா. மராமரப். 3.
228. சுந்தர. ஊர்தேடு. 3.
229. சுந்தர. பாசப். 39.
230. சுந்தர. பிணிவீட்டுப். 67.

231. 'ஊரி னிந்நெடுங் கோபுரத் துயர்ச்சிகண் டுணர்ந்தால்
மேரு வெங்ஙனம் விளர்க்குமோ முழுமுற்றும் வெள்கி'
மாரு திசொல்லிவ் வாசகத் தற்புத வரம்பு
யார்க டந்துளார்? அணியுமோ ரணிபெற்ற தாமே. 17

232. 'நிலம்வி சும்புசெய் நெடியவன் படையுநின் ருனை
வலஞ்செய் தேகுவ தெனின்வலி மற்றினி யுண்டோ?
சலஞ்செய் யும்உல கெலாமிலக் குவன்முடிப் பா'னென்
றுலஞ்செய் தோளவன் உரைத்ததும் அற்புதோற் பனமே. 18

### சினக்குறி

233. 'சிலம்பு கள்சிலம் பிடச்செறித் தனகழ லோடும்
நிலம்பு கமிதித் தனள்நெடுங் கொடுமிடற் சூலம்
பலம்பு கப்பகை படுத்திட விடுத்திட அழன்ருள்'
சலம்பு கத்தருந் தொடையிதிற் சினத்தழல் ததும்பும். 19

234. 'என்ற றத்துறை கேட்டலு மிருபது நயனம்
மின்றி றப்பன வொத்தன வெயில்விடு பகுவாய்
குன்றி றத்தெழித் துரப்பினன் குறிப்பதென் காமன்
தன்றி றத்தையுங் கடந்தது சீற்றத்தின் தகைமை.' 20

### வீரத்திறல்

235. 'யாரே னுந்தானே ஆகுக, யான்தனி ஆண்மைப்
பேரே நின்றிடப் பெறுவனே வென்றியும் புகழும்,
நேரே செல்லுவன், கொல்லுமேல் நிமிர்தரு வென்றி
வேரே நிற்கு' மென் னுரைவரும் வீரத்தின் விழுப்பம். 21

236. 'வாங்கி வெஞ்சிலை கோதையை வீக்குகை விரலால்
தாங்கி நாணினைத் தாக்கினன் தாக்கிய தமரம்
ஓங்கு முக்கணன் தேவிசெய் ஊடலோட் டிடுமேல்
வீங்கு வீரன்விற் றிறத்தடல் விளம்பவே றுளதோ?' 22

237. 'நென்னற் கண்டமே னியும்பிறி தாய்நிலை தளர்வான்
தன்னைக் கண்டிரங் காதொலித் திடுந்தடங் கடல்வாய்
பின்னல் வெண்டிரைத் தவழிளந் தென்றல்கள் ளுயிர்க்கும்
புன்னை பொற்சுணம் பூசுதல்' கருணையின் பொலிவே. 23

---

232. யுத்த. இந்திரசித்துவதைப். 4.
233. பால. தாடகை வதைப். 30.
234. சுந்தர. காட்சிப். 137.
235. யுத்த. இராவணன் வதைப். 135.
236. யுத்த. வருணனை வழிவேண்டு. 16.
237. யுத்த. கடல்காண். 5.

238. ‘கானி னேங்குகற் பகமுயிர்த் திடுங்கதிர் வல்லி
மேனி பெற்றுகா மன்நெறி விளைத்தபூ வாசத்
தேன்மொ ழியுற்றே இனியசெவ் வியுநனி பெற்றே
மான்வி ழிநலாள் மருட்டலைத்’ தெருட்டுவ தெவரே? 24

239. “ஆளை யாவுனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கின” செயலினுற் பெருவிற்
காளை காட்டினன் கருணையின் கொழுந்தொடு கனியே. 25

நகைச்சுவை

240. ‘வில்லி னுர்க்கெலாம் மேலவன் வெஞ்சமம் விளிய
செல்லி டாயினி யரசிரா வணற்கெனத் தேவர்
எல்ல ருந்தத்தம் தூசினை எறிந்துட னுர்த்தார்’
சொல்ல ரும்வண மிதுதரும் நகைச்சுவை மிகையே. 26

241. “நாமம் நாட்டிய சவமெனில் நானெனு மொருவர்
ஈம னுட்டிடை யிடாதுதன் வயிற்றிடை யிடுவன்
தூம னுட்டவன்” என்றரு நகைச்சுவை துளும்ப
வீமம் நாட்டிய வீரரை விளக்கினர் சிலரால். 27

242. ‘அந்த மில்துயர்க் காதியா யமைந்தியா தொன்றும்
சிந்தி யாதவள் தீமை செயாதவள் போன்று
மந்த ரையெனுங் கூற்றமும் வழிச்செலு மவரோ
டுந்திப் போன’ அவ் வுரைவரும் உவகையக் கரையே. 28

243. ‘மாதிரம் ஒன்றும் நோக்கிடான் வளநகர் நோக்கான்
காதலர் தம்மை நோக்கிடான் கடற்படை நோக்கான்
பூதல மென்னும் நங்கையே நோக்கியில் புக்க’
தீத கன்நடை செப்புமே நாண்தரு செயலே. 29

244. ‘கூன லாமுது குடைச்சிறு குரங்கொடும் வெல்வார்
ஆன வரையோ மானுடர் ஆண்மை நம் பாலே
ஏனி லையிஃ தினிதினி’ தென்றெடுத் தியம்பும்
வான ரசடல் மாற்றினன் உரைவஞ்சப் புகழே. 30

---

238. ஆரணிய. சூர்ப்பணகைப். 33.
239. யுத்த. முதற்போர்புரி. 255.
240. யுத்த. இந்திரசித்துவதைப். 56.
241. யுத்த. இலங்கை கேள்விப். 44.
242. அயோத்தியா. ஆறுசெல். 54.
243. யுத்த. கும்பகருணன் வதைப். 3.
244. சுந்தர. பாசப். 44.

245. ‘ஊன வில்லிறுத் தோட்டைமா மரத்துளம் போட்டி
யானி மைத்திட இல்லிழந் தின்னுயிர் சுமக்கும்
மானி டன்வலி நீயலா தியார்மதிப் பாரெ’ன்
ருனிடம்வரும் இகழ்ச்சியி னிழியு மேளனமே. 31

246. ‘செவிக ளைத்தளிர்க் கையினுற் சிக்குறப் பொத்திக்
கவினும் வெஞ்சிலைக் காகுத்தன் விழைகற்பி னேனை
புவியொ மூக்கற நச்சிடல் புனிதரால் எரிசெய்
அவியை யொன்றுநாய் வேட்டெ’னல் அருவருப் பொறுப்பே.

[வேறு]

247. மனத்துறு வுணர்ச்சியின் மலிவைப் பற்பல
இனத்துறை யாக்குவ ரியற்கை நூலினர்
முனைத்துறை கதைதரு முடிபின் மக்களின்
அனைத்துறு நிலைமையு மளந்து காட்டினன். 33

சினம்

248. பாவமென் றறிஞராற் பகுத்து நாட்டிய
கோபமென் றொருகுணம் குணிக்க லாம்குறி
ஏவரு மறிதர இன்ன தீதெனத்
தீபம்போ லாங்கதன் திறம்வி ளக்கினன். 34

காதல்

249. உள்ளமென் றோரரண் இடிப்ப உட்புகும்
கள்ளக்கண் வாயிலைக் கடந்து காமவேள்
எள்ளரு முறையிலு மிழிந்த போக்கிலும்
தள்ளருஞ் சமர்தருஞ் சமர்த்தைச் சாற்றினன். 35

துயர்

250. பொறிவழி புகுந்துள புன்மைத் தேனும்பின்
அறிவழி யடலினுல் அவலம் செய்தலால்
செறிவழி உயிர்செலாச் செறுத்தலால் உள்ளக்
குறியழி கொடுந்துயர்க் குவிவைக் கூறினன். 36

அச்சம்

251. உச்சிமென் பணையொடும் ஊசி வேரொடும்
பிச்சுளக் காவினைப் பிதிர்த்து மாற்றலால்
இச்சைபுய்த் துழன்றடித் திடிக்கு மூதையாம்
அச்சத்தின் கிளர்ச்சியும் அறிந்து தீட்டினன். 37

---

245. யுத்த. இராவணன் மந்திரப். 109.
246. ஆரணிய. இராவணன் சூழ்ச்சிப். 67
247-253. சினம், காதல், துயர், அச்சம், மகிழ்ச்சி, அற்புதம் என்னும் மனத்துறு உணர்ச்சி மிகுதியின் போக்குத் தொகுத்துரைக்கப்படுகிறது.

மகிழ்ச்சி

252. தனத்தினிற் புகழினிற் றைய லார்களில்
இனத்தினின் மக்களில் எளியர்த் தாங்கலிற்
கனத்தினின் நட்பினிற் கயவர்க் கோறலில்
மனத்தினின் வருமகிழ் வகுத்துக் காட்டினன். 38

அற்புதம்

253. புற்புதம் போற்புலை வாழ்க்கை மாக்களின்
மற்பொரு வலியினான் மதியி னாலுடற்
பொற்பினாற் புனிதநன் னெறியி னாற்றரும்
அற்புத வுணர்ச்சியு மளக்க லாயினன். 39

சினம்

[வேறு]

254. “கூறின மாற்றம் சென்று செவித்தொளை குறுகா முன்னம்
ஊறின வுதிரம் செங்கண் உயிர்த்தன வுயிர்ப்புச் செந்தீ
ஏறின புருவம் மேன்மே லிரிந்தன சுடர்க ளெங்கும்
கீறின தண்ட” மென்று கிளர்சினம் கிளத்தல் காண்டிர். 40

255. ‘என்றலு முனிவு தூண்ட எழுந்துல கிறுதிக் காலம்
அன்றென ஆமென் னத்தே வயிர்த்தனர் வெயில் கரந்த
நின்றன திரிந்த மீது நிவந்தொளிர் புருவம் நெற்றிச்
சென்றன நகையும் வந்த' காதிசேய் சீற்றம் காண்டிர். 41

256. ‘இறைக்கடை துடித்து நின்ற புருவத்தா ளெயிறென் றோதும்
பிறைக்கடை பிறங்கத் தன்பேழ் வாயினை மடித்து ளாள்நீர்
நிறைக்கட னின்றிரண்டு வடவைத்தீ நிமிர்வ வேபோல்
மறக்கடை அரக்கி தீகண் மண்டிட அழலல்' காண்டிர். 42

257. ‘விண்ணும் கீழ்விழவோ வன்றிப் படிமேல்கீழ் படர வேயோ
எண்ணுங் கீறுயிரை யெல்லாம் எமனார்வா யிடவோ என்னோ
புண்ணுங்கீ றுதிர யாறு பொழிவபோற் பொங்கி யங்கி
கண்ணுங் கீறியவி ராமன்' கடுஞ்சினக் காந்தல் காண்டிர். 43

258. ‘புண்டுளங் கியவாம் கண்கள் பொங்கிடக் கனலும் கார்சூழ்
விண்டுளங் கிடவி லங்கல் குலுங்கிட வெய்ய வெய்யோன்
கண்டுளம் கதிரும் தீயக் கார்நெடுங் கடல்சு லாவும்
மண்டுளங் கிட'வி ராதன் வயின்சுடர் வெகுளி காண்டிர். 44

254. ஆரணிய. சடாயு உயிர்நீத்த. 114
255. பால. கையடைப். 14; காதிசேய்-விசுவாமித்திரன்.
256. பால. தாடகைவதைப். 31.
258. ஆரணிய. விராதன் வதைப். 7.

259. ‘காய்ந்தன சலாகை யன்ன உரைவந்து கதுவா முன்னம்
தீய்ந்தன செவிகள் உள்ளம் திரிந்தது சிவந்த சோரி
பாய்ந்தன கண்கள் ஒன்றும் பரிந்திலள் உயிர்ப்பு பெண்கட்
கேய்ந்தன வல்லா மாற்ற மியம்பினுள்’ சீற்றம் காண்டிர். 45

துயரம்

260. ‘துடித்திலன் உயிர்ப்பு மில்லன் இமைக்கிலன் துள்ளிக்
[கண்ணீர்ப்
பொடித்திலன் யாதுமொன்றும் புகன்றிலன் பொருமி யுள்ளம்
வெடித்திலன் விம்மிப் பாரில் வீழ்ந்திலன் வெயர்த்தா னல்லன்
அடுத்துள துன்ப’ மெல்லாம் யாரளந் தொதுக்கற் பாலார்? 46

261. ‘விழுதல் விம்முதல் வெதும்பல் மெய்யுற வெளிறல் பல்கால்
எழுதல் ஏங்குத லிரங்கல் இராமனை யெண்ணி யெண்ணித்
தொழுதல் சோருதல் துளங்கல் துயருழந் துயிர்த்தல் வெம்பி
அழுதலே யமைந்த’ சீதை துயரையார் அறியற்பாலார்? 47

262. ‘ஆற்றவெந் துயரத் தன்னுள் ஆண்டுறு மலக்க ணேக்கின்
ஏற்றமென் னினைக்க லாகும்? எதிரெடுத் தியம்ப லாகும்?
மாற்றமொன் றில்லை, செய்யும் வகையிலை, அரக்க னுய
கூற்றெதிர் சீதை யுள்ளக் குலைவையார் குணிக்கற் பாலார்? 48

263. ‘மக்களை மறந்தார் மாதர், வருத்தத்தால் தாயரானுர்
புக்கிட மறிந்தி லாரே புதல்வரும், பூச லிட்டு
உக்கனர் உயங்கி நைந்தார், உருகியுள் ளுலைந்து சோர்ந்தார்,
துக்கத்தால் அறிவு நீத்தார் துயர்சொலத் துணிவர் யாரே? 49

மகிழ்ச்சி

264. ‘பொடித்தன ரோமம், மூடிப் பொழிந்தன கண்ணீர் பொங்கித்,
துடித்தன மார்பும் தோளும், தோன்றின வெயர்வின் றுள்ளி,
மடித்தது மணிவா யாவி வருவது போவ தாகித்
தடித்தது மேனி’ யென்னத் தழைமகிழ்ச் சலுகை நோக்கீர். 50

265. ‘இழந்தநன் மணியை நாகம் எதிர்ந்ததோ வென்ன லானுள்.
பழந்தன மிழந்து பின்னர் அதுபடைத் தவரை யொத்தாள்,
குழந்தையை யரிதிற் பெற்ற மலடியைக் கடுத்தல் கொண்
[டாள்’,
உழந்தபின் சீதை யுற்ற உணர்வுமாய் ஓகை என்னே? 51

---

259. சுந்தர. காட்சிப். 115.
260. யுத்த. மாயா சீதைப். 56.
261. சுந்தர. காட்சிப். 5.
262. ஆரணிய. இராவணன் சூழ்ச்சிப். 64.
263. அயோத்தியா. நகர்நீங்கு. 196.
264. சுந்தர. திருவடி தொழுத. 48.
265. சுந்தர. உருக்காட்டுப். 65.

266. ‘அழுதனர் சிலவர் முன்னின் ருர்த்தனர் சிலவ ரண்மித்
தொழுதனர் சிலவ ராடித் துள்ளினர் சிலவ ரள்ளி
முழுதுற விழுங்கு வார்போல் மொய்த்தனர் சிலவர் சுற்றும்
தழுவினர் சுமந்து சென்ற’ கவிமகிழ்த் தருக்கு மென்னே ! 52

அச்சம்

267. ‘எறுப்பினம் கடைகொண் டுள்ள யானையே முதல வாய
உறுப்புடை யுயிர்க ளெல்லாம் உலைந்தலைந் தொடுங்கிச் [சாய்ந்த,
வெறிப்புற நோக்கு கின்ற, விம்மியே வெருவு கின்ற,
பறிப்பருங் கவந்தன் கைக்குட்’ படுமுயிர்ப் பதர்த்தம் பாரீர்.53

268. ‘நீரிடு துகில ரச்சர், நெருப்பிடு நெஞ்சர்’ நெக்குப்
பீரிடு முருவர், தெற்றிப் பிணங்கிடுந் தாளர், பேழ்வாய்
ஊரிடு பூச லாராய் உளைத்தனர் ஓடி யுற்ருர்,
பாரிடு பருவத் தேவர்’ படுபயப் பனிப்பும் பாரீர். 54

அற்புதம்

269. ‘நன்னக ரதனை நோக்கி நளினக்கை மறித்து நாகர்
பொன்னக ரிதனை யொக்கும் என்பது புல்லி தம்மா !
இன்னக ரண்ட மாள்வான் இருப்பதற் கேதீ’ தென்னச்
சொன்ன மாருதியி னுள்ளம் ருேன்றதி சயத்தான் மாய்ந்த ! 55

270. ‘வில்லிடைக் கழித்த வாளி மிடலினை வெருவித் தத்தம்
பல்லிடைக் கிழித்துப் பாயும் கவியினுற் பயனுய்ப் பா’யென்
றெல்லிடை யிருண்ட மேனி இந்திர சித்தன் கூறும்
சொல்லிடை வீரற் கேய்ந்த நகைச்சுவை துளும்பு மன்றே. 56

இரக்கம்

[வேறு]

271. ‘‘உண்ணீர் வேட்கை மிகவே உயங்கு மெந்தைக் கொருநீ
தண்ணீர் கொடுபோ யளித்தென் சாவு முரைத்தும் புதல்வன்
விண்மீ தடைவான் தொழுதான் எனவு மவர்பால் விளம்’’பென்
றெண்ணீர் மையினன் சொல்லே இரக்கத் தகவி னெல்லை. 57

---

266. சுந்தர. திருவடிதொழுத. 4.
267. ஆரணிய. கவந்தன். 2.
268. சுந்தர. பொழிலிறுத்த. 55.
269. சுந்தர. கடல்தாவு. 92.
271. அயோத்தியா. நகர்நீங்கு. 78.

[வேறு]

272. அகத்துள வுணர்ச்சி யாவும் அங்கமோர் ஆடி போல
மிகுத்துள குறிகள் கொண்டே வெளியுற விளக்கும்; மெய்ந்
[நூல்
வகுத்துள மரபின் பெற்றி வருபவை வரைவ ரன்றி
நகைதர இயற்கை நைய நலிவரோ புலவர் நாடி? 58

273. வாலினை யுயர்த்தி யஞ்சி மறுகின மதமா[1] வென்னே,
காலினும் விசையிற் பாய்ந்த காலின்மா மதலை[2] யென்னே,
கூலமா ருதியின் மாற்பிற் குத்தக்கை குவித்தா[3] னென்னே,
கோலமார் சீரை யாரக் குயின்றசித் திரங்க ளாமே. 59

**உதாரணம்:**

1. “மொய்யுறு செவிக டாவி முதுகுற முறைகா றள்ள
மையுறு விசும்பி னூடு நிமிர்ந்த வாலதிய மஞ்சின்
மெய்யுறத் தழீஇய மெல்லென் பிடியொடும் வெருவ லோடும்
கையுற மரங்கள் சுற்றிப் பிளிறின களிநல் யானை.” (1)

2. “வால்விசைத் துக்கை நிமிர்த்து வாயினையும்
சிறிதகலம் வகுத்து மானக்
கால்நிலத்தி னிடையூன்றி யுரநெருக்கிக்
கழுத்தினையுஞ் சுருக்கிக் காட்டி
தோள்மயிர்க் குந்தளஞ் சிலிர்ப்ப விசைத்தெழுவா
னவ்விலங்கை துளங்கிச் சூழ்ந்த
வேலையிற்புக் கழுந்தியதோர் மரக்கலம்போல்
சுரித்துலைய விசயத் தோளான்.” (2)

3. “உறுக்கித்தனி யெதிர்நின்றவன் உரத்தில்தன தொளிர்பல்
லிறுக்கிப்பல நெடுவாய்மடித் தெரிகண்டொறு மிழிய
முறுக்கிப்பொறி நிமிரப்பல விரன்முரிய திசையக்
குறுக்கிக்கர நெடுந்தோள்புற நிமிரக்கொடு குத்த.” (3)

[வேறு]

274. “திசையினை நோக்கும் நின்ற
தேவரை நோக்கும் வந்த
வசையினை நோக்கும் கொற்ற
வாளினை நோக்கும் சீதை

---

273. அழகு நிறை கவிச் சித்திரங்களாக இப்பாடலில் குறித்த மூன்றற்கும் கம்பராமாயண உதாரணமும் ஆசிரியர் எடுத்து எழுதியுள்ளார்.

1. சுந்தர. கடல் தாவு. 5.
2. யுத்த. மருத்துமலைப். 32.
3. யுத்த. முதற்போர் புரி. 184.

274. யுத்த. அதிகாயன் வதைப். 263.

நசையிடைக் கண்டா னென்ன
நகுமழும் முனியும் நாணும்’’
விசையத் தோள்வீரற் செற்ற
வேறுவே றுணர்ச்சி காண்டிர். 60

275. ‘‘தலையினை நோக்கும் தம்பி
கொற்றவை தழீஇய பொற்றோள்
மலையினை நோக்கும் நின்ற
மாருதி வலியை நோக்கும்
சிலையினை நோக்கும் தேவர்
செய்கையை நோக்கும் செய்த
கொலையினை நோக்கி’’ ராமன்
கொளுங்கொளைக் களிப்பும் காண்டிர். 61

276. ‘‘உயிர்ப்புமுன் னுதித்த பின்னர்
உரோமங்கள் சிலிர்ப்ப வூறி
வியர்ப்புள தாகக் கண்கள்
விழித்தன மேனி மெல்ல
பெயர்த்துவாய் புனல்வந் தூற
விக்கலும் பிறக்கக்’’ காட்டி
அயர்த்தல்நீங் கனுமன் தேற்றம்
இயற்கையோ டணுகக் காண்டிர். 62

277. தீதியல் வாழ்க்கைச் சேர்க்கைத்
திருவிலி சூழ்ச்சி யாலம்
மாதினைக் கொணர்ந்து மன்னர்
அமர்க்களம் மடிந்தா ரென்ன
ஓதிக்காட் டுறலு மன்னாள்
உயிர்பதைத் துடன்வீழ் துன்ப
ஓதத்தின் திரைமொத் துண்டே
உடைந்துழன் றுலைதல் காண்டிர். 63

உதாரணம்

1. ‘‘அடித்தாள் முலைமேல் வயிறலைத்தாள்
அழுதாள் தொழுதா ளனல்வீழ்ந்த
கொடித்தா னென்ன மெய்சுருண்டாள்
கொதித்தாள் பதைத்தாள் குலைவுற்றாள்

---

275. யுத்த. இந்திரசித்தன் வதைப். 66.

276. யுத்த. மருத்துமலைப். 12.

277. இந்திரசித்தன் விட்ட பிரமாத்திரத்தால் இராமன் முதலியோரும் குரங்குப் படைகளும் மாண்டார் போல் வீழ்ந்து கிடந்த போர்க்களத்தைச் சீதைக்கு அரக்கர் மகளிர் காட்டியபோது அவள் உற்ற துன்பம் இங்குச் சுட்டிக் காட்டப்படுகிறது.

துடித்தாள் மின்போ லுயிர்கரப்பச்
சோர்ந்தாள் சுழன்ருள் துள்ளினுள்
குடித்தாள் துயரை உயிரோடுங்
குழைத்தாள் உழைத்தாள் குயிலன்னுள்.'' (4)

2. ''விழுந்தாள் புரண்டாள் உடல்முழுதும்
வெயர்த்தாள் உயிர்த்தாள் வெதும்பினுள்
எழுந்தாள் இருந்தாள் மலர்க்கரத்தை
நெரித்தாள் சிரித்தா ளேங்கினுள்
கொழுந்தா வென்ரு ளயோத்தியர்தம்
கோவே யென்ரு ளெவ்வுலகும்
தொழுந்தாளரசேயோ வென்ருள்
சோர்ந்தா ளரற்றத் தொடங்கினுள்.'' (5)

## 7. சொல், நடை வனப்புப் படலம்

### கலிவிருத்தம்

278. வில்லெ டுத்துமி ளிர்மணிக் கோவையோ ?
மல்லெ டுத்தபூ மாரியோ ? வேரியோ ?
பல்லவப் பரப்போ ? பண்ணின் மாலேயோ ?
சொல்லெ டுத்துத் தொடுத்த தொடையலே. 1

உதாரணம்

''வெய்யோனெளி தன்மேனியின்
விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடும்
இளேயானெடும் போனுன்
மையோ மரகதமோ மறி
கடலோ மழைமுகிலோ
ஐயோஇவன் வடிவென்பதோ
ரழியாவழ குடையான். (6)

279. மேல சந்தம் மண ந்தரு மின்பவாய்
கால சந்த கடுநடை யில்லவாய்
நாலு சந்தத் தியற்றிய நாற்கவி
சாலு மென்மையி னுன்மனஞ் சாயுமே. 2

---

1. யுத்த. சீதை களம் காண். 8.
2. யுத்த. சீதை களம் காண். 9.

278. i. அயோத்தியா. கங்கைப். 1.

279. கடுநடை யில்லாதனவாய் கம்பன் பாடிய நான்குவகையான சந்தக் கவிகளே இப்பாடல் குறிப்பிடுகிறது. அந்தந்தச் சந்தங்களுக்கு ஏற்புடைய கம்பன் கவிகளும் உதாரண மாக எடுத்துத் தரப்பட்டுள்ளன.

உதாரணம்

1. ''நந்த நந்த வனங்களில் நாண்மலர்
கந்த முந்திய கற்பகக் காவினின்
அந்தர் வந்தென அந்திதன் கைதர
மந்த மந்த மணந்தது வாடையே.'' (7)

2. ''மந்தார முந்து மகரந்த மணந்த வாடை
செந்தா மரைவாண் முகத்திற் செறிவேர் சிதைப்ப
தந்தா முலகத்திடை விஞ்சையர் பாணி தள்ளும்
கந்தார வீணைக் களிசெஞ் செவிக்காது நுங்க.'' (8)

3. ''பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடி யளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.'' (9)

4. ''வங்கியம்பல தேன் விளம்பின
வாணி முந்தின பாணியின்
பங்கியம்பர மெங்கும் விம்மின
பம்பை பம்மினப் பல்வகை
பொங்கியம் பலவுங் கறங்கின
நூபு ரங்கள் புலம்பவெண்
சங்கியம்பின கொம்ப லம்பின
சாம கீதம் நிரம்பவே.'' (10)

[வேறு]

வஞ்சி விருத்தம்

280. காவருங் கடிகான் வருந்தடப்
பூவருமணம் பொலித லோவென
மேவருங்கவி வாணர் நாவரும்
பாவரும்வணம் பரிம ளிப்பதே. 3

நெடில் வண்ணம்

281. ஊடுலாவுநீர் ஓடை யோவெறி
மாடுலாமகிழ் வாடை யோஒளிச்
சேடுலாங்கதிர்க் காலி னரமோ
நீடுலாவுசீர்ச் சூடு பாவரோ! 4

---

2. சுந்தர. கடல்தாவு. 74.
3. ஆரணிய சூர்ப்பணகைப்—31
4. அயோத்தியா, கைகேயி சூழ்வினைப். 64.

280. பாவின் மணமும் ஒழுக்கும்.

உதாரணம்

[வேறு]

1. "பாரு மேடாதுநீ டாதெனும் பாலதே
சூரு மேடாதுகூ டாதரோ சூரியன்
தேரு மோடாதுமா மாகமீ தேரினேர்
காரு மோடாதுநீள் காலுமோ டாதரோ." (11)

2. "ஆயமா ஞுகர்தா ழாழியா னேயலால்
காயமா ஞயினுன் யாவனே காவலா
நீயமா னேர்தியா னேருமா ரீசஞர்
மாயமா ஞயினுன் மாயமா ஞயினுன். (12)

3. "நாணுலாவு மேருவொடு நாணுலாவு பாணியும்
தூணுலாவு தோளும் வாளி யூடுலாவு தூணியும்
வாணிலாவி னூலுலாவு மாலைமார்பு மீளவும்
காணலாகு மாயின்ஆவி காணலாகு மேகொலாம். (13)

4. "நீடுநாக மூடுமேக மோடநீரு மோடநேர்
ஆடுநாக மோட மான யானையோட வாளிபோம்
மாடுநாக நீடுசாரல் வாளையோடும் வாவியூ
டோடுநாக மோடவேங்கை யோடும்பூகம் ஓடவே." (14)

5. "தெவ்விரா வகைநெடுஞ் சிகைவிரா மழுவினன்
அவ்விரா மனையுமா வலிதொலைத் தருளினன்
இவ்விரா கவன்வெகுண் டெழுமிரா வணையனும்
வெவ்விரா தனையிரா வகைதுடைத் தருளினன்." (15)

குறில் வண்ணம்

282. வெறிய தொங்கலுக் குரிய தென்னென
நறிய நன்மலர்ச் செறிவு நண்ணிய
குறிலெ டுத்தடுத் துத்தொ டுத்திசை
பெறுவர் குற்றிசைப் பெற்றி முற்றுற. 5

---

281. 1. பால. தாடகைவதைப். 9.
2. கிட்கிந்தா. நட்புக் கோட். 11
3. பால. கார்முகப். 47
4. கிட்கிந்தா வாலிவதைப். 4.
5. கிட்கிந்தா. நட்புக்கோட். 9.

282. குற்றெழுத்து இசையால் வந்த பாட்டுவகை.

*உதாரணம்*

1. குரவங் குவிகோங் கலர்கொம் பினெடும்
இரவங் கணுறும் பொழுதே கினரால்
சரபங் கனிருந் துதவங் கருதும்
மரவங் கிளர்கோங் கொளிர்வா சவனம்." (16)

2. தகவுமிகு தவமுமிவை தழுவவுயர் கொழுநர்
முகமுமவ ரருளும்நுகர் கிலர்க டுயர்முடுக
அகவுமிள மயில்களுயி ரலசியன வனையார்
மகவுமுலை வருடவிள மகளிர்க டுயின்றார். (17)

3. "விளிம்பு தெற்றி முற்றுவித்து வெள்ளிகட்டி யுள்ளுறப்
பளிங்குபொற் றலத்தகட் டடுத்துறப் படுத்தலின்
தளிந்தகற் றலத்தோடச் சலத்தினைத் தனித்துறத்
தெளிந்து ணர்த்து கிற்றுமென்றல் தேவராலு மாவதே." (18)

அகைப்பு வண்ணம்

283. சித்தி ரத்தொடு சேர கைப்பென
வைத்த வண்ணமும் மன்னெ டில்குறில்
ஒத்த வண்ணமா யோங்க டிக்குளே
உற்ற வோசைசீ ரிற்ற வோசையே. 6

*உதாரணம்*

1. "மாகந்தமும் மகரந்தமு மளகந்தரு மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவழந்தரு மிதழான்
மேகந்தனி வருகின்றது மின்னேடென மிளிர்பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடென நடவா." (19)

2. "வந்தெங் கும்தன் னுயிரே யோபிறி தொன்றோ
கந்தந் துன்றும் சோர்குழல் காணார் கலைபேணார்
அந்தந் தோறு மற்றுகு முத்து மவைபாரார்
சிந்துஞ் சந்தத் தேமலர் நாடித் திரிவாரும்." (20)

3. "அந்தமா மதிற்புறத் தகத்தெழுந் தலர்ந்த நீள்
கந்தநாறு பங்கயத்த கானமான மாதரார்
முந்துவாண் முகங்களுக் குடைந்துபோன மொய்ம்பெலாம்
வந்துபோர் மலைக்கமா மதில்வளைத்தல் மானுமே." (21)

---

1. ஆரணிய. சரபங்கன் பிறப்பு நீங்கு. 1.
2. அயோத்தியா. தைலம் ஆட்டு. 15.
3. பால. நகரப். 20.

283. நெடிலும் குறிலுமாக ஓரடியில் அமைந்தெழும் ஓசை நயம்.
1. அயோத்தியா. கங்கைப். 4.
2. பால. பூக்கொய். 23.
3. பால. நகரப். 16.

### வல்லிசை மெல்லிசை இயைபு வண்ணங்கள்

284. வல்லி சைகொடு மலியு வண்ணமும்
மெல்லி சையொடு மெலியு வண்ணமும்
எல்லி சைக்கிடை இயைபு வண்ணமும்
நல்லி சைஞரின் நாவின் மேவுமே. 7

### வல்லிசை வண்ணம்

285. கரட்டுப் பொற்றை முரட்ட தர்க்கற்
றுறட்டிற் பட்டு வெருட்டி விட்ட
பறட்டைக் காற்சா டுருட்ட ரற்ற
விரட்டி சைசெவி டாக்கும் வல்லிசை. 8

*உதாரணம்*

1. இறைக்கடை துடித்தபுரு வத்தளெயி றென்னும்
பிறைக்கடை பிறக்கிட மடித்தபில வாயள்
மறக்கடை யரக்கிவட வைக்கன லிரண்டாய்
நிறைக்கடல் முளைத்தென நெருப்பெழ விழித்தாள்.'' (22)

2. ''எட்டோ டெட்டுமத மாகரி யிரட்டி அரிமா
வட்ட வெங்கண்வரை யாளிபதி னாறு வகையில்
கிட்ட விட்டிடை கிடந்தன செறிந்த வொருகை
தொட்ட முத்தலை யயிற்றொ கைமிடற் கமுவொடே.'' (23)

### மெல்லிசை வண்ணம்

286. பழுவம் வாய்கெழு பாசி பாசிலை
தழுவு தண்டலை சாய ஒய்வொடு
நழுவு மோடைநல் லோசை மூசலே
இழுகு மெல்லியத் தின்ப மென்பரால். 9

*உதாரணம்*

1. ''செங்க ணங்க வரவின் பொருவில் செம்மணி விராய்
வெங்க ணங்க வலயங் களும்வி லங்க இரவி
சங்க ணங்கிய சலஞ்சலம் அலம்பு தவளக்
கங்க ணங்களு மிலங்கிய கரம்பி றழவே.'' (24)

---

284. வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இடை இயைபு வண்ணம் என்னும் நல்லிசைகள் அமைந்த பாங்கு தெரிவித்தல்.

285. வல்லிசை இரட்டிவரும் ஓசைநயம் குறிப்பித்தவாறு.
1. பால. தாடகை வதைப். 31.
2. ஆரணிய. விராதன் வதைப். 5.

286. இழுகிய மெல்லோசை இன்பம் எடுத்துரைத்தல்.
1. ஆரணிய. விராதன் வதைப். 15.

2. "விரிந்தன நரந்தமுதல் வெண்மலர் வளாகத்
துரிஞ்சவரு தென்றலுயி ரின்புடை யுலாவ
சொரிந்தன கருங்கண்வரு துள்ளிதரு வெள்ளம்
எரிந்தன பிரிந்தவர்தம் எஞ்சுதலில் நெஞ்சம்." (25)

3. "சுவண வண்ணநெடு கண்ணனுறை தோளன் விசைதோய்
அவண விண்ணிடை நிமிர்ந்து படர்கின்ற வனறம்
சிவண தன்னசிறை முன்னவரோ டேகு செலவத்
துவண னென்னும்நெடு மன்னவனு மொத்த னனரோ." (26)

ஏந்தல் வண்ணம்

287. ஏய்ந்த சொற்கள் இருவிதப் பொருள்
ஏந்து மாறெதி ராய்ந்த சைப்பதே
எந்தல் வண்ணம் ஈதாக்கி னர்க் கொரு
ஏந்தல் நங்கவி வேந்த னென்பவே. 10

உதாரணம்

[வேறு]

288. 'கோடி யென்றனன் உள்ளமுங் கோடிய கொடியாள்'
'ஓடுயிரொடு உடையெலா முடையுமா லென்றுள்'
'வேடுமன்பினில் விலங்கினேன் விலங்கெனப் பட்டே'
பீடுடைமடக் கெத்தனை இவ்வணம் பிணித்தான். 11

289 "ஆர வாரத்தி னேடு மருவியே
ஆர வாரத்தி னேடு மருவியே"
ஆர வாரத் தனையோ டரும்பொருள்
ஆர வாரத் தடியி லணிந்துளார்? 12

290 "ஆறு சேர்வன மாவரை யாடுமே
ஆறு சேர்வன மாவரை யாடுமே"
கூறு செய்திடக் கூடிம் மடக்கினுக்
கூறு செய்திடங் கூடினு மாவதென்? 13

யமகம்

291 "இரும்ப சிக்கு மருந்தென எஃகினே
டிரும்ப சிக்கு மருந்து மெயிற்றினன்"
வரும்ப தத்துணை வைக்குமெ மகமே
வரும்ப தத்துணை வைக்குமெ மகமே. 14

---

2. கிட்கிந்தா. நட்புக்கோட். 9.

3. சுந்தர. ஊர்தேடு. 163.

287. இயைந்த சொற்கள் இருவிதப் பொருள்படுமாறு அமையும் ஏந்தல் வண்ணம் எடுத்துரைத்தல்.

291. யமகமும் உளம்பதியும் வகையில் அமைந்துள்ள பாங்கு. யுத்த. கும்பகருணன் வதைப். 64.

உதாரணம்

"அப்பு மாரி யழுந்திய மார்பைத்தன்
னப்பு மாரி யழுதிழி யாக்கையின்
அப்பு மாரி னணைக்கு மரற்றுமால்
அப்பு மானுற்ற தியாவ ருற்றுரரோ!" (27)

### செழும் பொருள்-தொடர்

[வேறு]

292 "காட்டாதன காட்டிய தாதை"யெனத்
தீட்டாதன வாய செழும்பொருளைப்
பாட்டான் மறைகிற்பவர் பாவலரே
மாட்டாதவ ரேன்கவி மாட்டுறலே? 15

293. "சிரித்த பங்கய" மாஞ்செப்பின் செப்பினை
விரித்து ரைப்பது வீணென லாவதே;
வரித்த முத்தொடு மாமணி கொண்டுசிங்
கரித்த மாளிகை ஒளிகாணு ரெவர்? 16

294. 'கரும்பை யுஞ்சுவை கைப்பித்த சொல்லியர்'
'அரம்பை யுமடி மைகொளுஞ் சாயலர்'
'இரும்பை யுங்கசி வித்த வியல்பினர்'
விரும்ப வேய்தொடர் இன்னணம் எத்தனை ? 17

295. "தையல் சிற்றிடை யாளொரு தாழ்குழல்"
"மைத வழ்ந்த கருங்கணோர் வாணுதல்"
"நையும் நொய்ய மருங்குலோர் நங்கை"யென்
றெய்தெ ழிற்றொடர் இயற்றிய தெத்தனை? 18

296. குருதி வாளெனும் செவ்வரி கட்குயில்"
'ஒருவில் பெண்மை யுடலினுக் கோருயிர்'
'தெரிவை மார்க்கொரு கட்டளை யாந்திரு'
அரிவை யர்க்குப்பே ரெத்தனை யள்ளினன்? 19

297. 'குவளை யினெழில் வேலின் கொடுமைகார்
திவளு மஞ்சனஞ் சேர்தரத் தீட்டிய
தவள வாணகை தாங்கு தடங்கண்ஏர்
இவரச் சொற்றொட ரெத்தனை ஏந்தினன்? 20

---

யுத்த. இராவணன் சோகப். 31.

293. அயோத்தியா. கைகேயி சூழ்வினைப். 54.

294. பொருள்பொதி சொற்றொடர் வளம்.

295. பால. உலாவியற். 20, 23, 36.

296. அயோத்தியா. சித்திரகூடப். 3, 14, 33.

297. அயோத்தியா. கைகேயி சூழ்வினைப். 74.

298. ''உமைக்கு நாதனே டோங்கு புள்ளூர்தியும்
இமைப்பில் நாட்டங்க ளெட்டுடை யானு''மென்
றமைபோ லண்ட மழித்தளித் தாக்குவார்
அமைக்க வந்த அருந்தொடர் எத்தனே? 21

299. ''செயிர்ப் பினுமெழில் செய்யுந் திருமுகம்''
''முயற்க றைபயி லாத மதிமுகம்''
வியக்க லாம்விதத் தின்னன போற்றொடர்
மயக்க லாயின மட்டில் வருபவோ? 22

[வேறு]

300. 'நஞ்சு தட்டுரு வுற்றிடை நடத்தல்'
'பஞ்சி மென்றழைப் பதந்தரும் பாவை'
'துஞ்சல் செய்யவோ தோள்தினும் சோம்பு'
எஞ்ச விற்றொடர் எத்தனே தந்தான்? 24

301. 'கருநெ ருப்பிடை யெழுந்தவெண் ணெருப்பு
'அரக்கர் கான்சுட முளேகற்பின் கனலி'
'விருப்ப வெங்களி விழிக்கொரு விழவு'
திருப்புக இங்ஙன் செப்பினன் சிலவோ? 24

302. 'தாய ரற்பரி சேடியர்' 'பள்ளம்
பாய்நன் னீரினர்' 'பஞ்சின்றிப் பழுத்த
தூய காலினர்' 'குளம் தூவா நளினம்'
ஏய்மு கத்தியர் இயம்பினன் சிலரோ? 25

[வேறு]

303. ''அரம்பையர் விஞ்சைநாட் டளகவல்லியர்
நரம்பினு மினியசொல் நாக நாடியர்
கரும்பியல் சித்தியர் இயக்கர் கன்னியர்''
வரம்பறு சும்மைநல் லார்சொல் லாறரோ! 26

304. இன்னணங் கூறிய இவரைப் பின்னரும்,
''பொன்னகர் மடந்தையர் விஞ்சைப் பூவையர்
பன்னக வனிதையர் இயக்கர் பாவையர்''
என்னவே றுருவண மிசைத்தல் மேயினன். 27

---

298. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 23.

299. யுத்த. ஒற்றுக் கேள்விப். 20.

301. பால. மிதிலைக் காட்சி. 76.

302. பால. மிதிலைக் காட்சி. 81.

303. சுந்தர. பிணிவீட்டு. 16.

304. சுந்தர. ஊர்தேடு. 49.

[வேறு]

305. "நீண்டு குழன்று நெய்த் திருண்டு
நெறிந்து செறிந்து நெடுநீலம்
பூண்டு புரிந்து சரிந்துகடை
சுருண்டு புகையு நறும்பூவும்
வேண்டு மல்ல வெனத்தெய்வ
வெறியே கமழும் நறுங்குஞ்சி"
ஈண்டிவ் வாறு எடுத்தோத
இயலா தோபே ரெழிலம்மா! 28

மாதர் வனப்பு

[வேறு]

306. "வாளை தாவுரு வாலியந் தடத்தினும் வாயா
நாளந் தாங்குரு நகையின்முத் தொளிநல்குமென்ன
வாள ரத்தவேல் வண்டொடு கெண்டைகள் மயங்கச்
சாள ரத்தினும் பூத்ததா மரைமலர்" தந்தான். 29

[வேறு]

307. "மழையினை நீல மூட்டி வாசமும் புகையு மாட்டி
உழையுழைச் சுருட்டி மென்பூ குவித்திடைக் கிடையூறென்ன
பிழையுடை விதியார் செய்த பெருங்குழற் கருங்கட் செவ்வாய்
இழையணி மகளிர் கூந்தல்"எழில்செயும் வளனும் எண்ணீர். 30

308. தேனிடைக் கரும்பிற் பாலி லமுதினிற் கிளவி தேடி
மானிடைக் கயலின் வாளின் மலரிடை நயனம் வாங்கி
மேனடை யனைய மற்று நல்வழி நல்க வேண்டி
வானுடை யண்ணல் செய்த" வனப் பொரு வனப்போ
[வென்னப்—31

309. "பண்களாற் கிளவி செய்து பவளத்தா லதர மாக்கிப்
பெண்களா னூர்க்கு னல்ல உறுப்பெலாம் பெருக்கி நீட்ட
எண்களா லளவா மானக் குணந்தொகுத் தியற்றிக் கண்டார்"
கண்கொளா வனப்பைத் தீட்டும் கவித்திறக் காழ்ப்புங்காணீர்.

310. "ஆலையின் மலையின் சாரல் முழையினில் லமுத வாரிச்
சோலையிற் றுவச ரில்லிற் சோனக மனையிற் றூய
வேலையிற் கொளவொண் ணுதவேற்கணுள் குமுதச் செவ்வாய்
வாலெற்யி றூறு தீந்தேன்" எனப்பலவகைத்தேன் தந்தான். 33

---

305. சுந்தர. உருக்காட்டு. 57.
306. அயோத்தியா. மந்திரப். 53
307. யுத்த. நாகபாசப். 282.
308. யுத்த. நாகபாசப். 283.
309. யுத்த. மாயாசனகப். 7.
310. சுந்தர. ஊர் தேடு. 112.

311. ''பூமழை புகழத்தக்க புனன்மழை புதுமென் சுண்ணம்
தூமழை தரளப்பந்தி சொரிமழை தோகைநல்லார்
தாமிழை நெரியத் தூளாய்த் தகர்பொனின் மழையே யின்ன
மாமழை மயங்கும் வீதி'' எனப்பல மழையுந் தந்தான். 34

312. 'நஞ்சினுங் கொடிய நாட்டம் அமுதினும் நயந்து நோக்கல்'
வஞ்சிபோல் மருங்கு லாரிற் சிலர்தரும் வழக்க மென்றே'
அஞ்சொலை யமுதிற்கொண்ட அகலிகை கதையாற் காட்டி
நெஞ்சினுல் பிழையாள் கற்பி னெறியையுங் காத்துத் தந்தான்.

முரண் தொடை

[வேறு]

313. உலையு முள்ளத்துச் சூர்ப்ப ணகையுரை
'கலையு வாமதி' யாதிய நாற்கவி
மிலைமு ரண்தொடை வீறு மிறைக்கவிக்
கிலையென் றீங்கெடுத் தாளுதல் வேண்டுமோ? 36

[வேறு]

314. 'நொய்ய கழுத்தி ஞனே நுன்
மகற்கு காப்பினுணெ' னலும்,
'தையல் கடனின் றெடுத்தவனைத்
தயிலக் கடலுய்த்' தாரெனலும்,
'வெய்ய தாம்வெற்ற ரசெய்தி
வீட்டர செற்கீய்ந்தா' னெனலும்,
செய்யத் தொடுத்த சொற்றொடரே
சிறப்பு நிரப்பு முரண்தொடையே. 37

[வேறு]

315. 'வெளுப்பன கறுப்ப வான
வேற்கண ளொருத்தி யுள்ளம்
குளிர்ப்பொடு காண வந்தாள்
வெதுப்பொடு மீண்டா' ளென்றும்

---

311. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 44

312. பால. பூக்கொய். 7.

313. முரண்தொடை அமைந்த கவிகள்.
ஆரணிய. சூர்ப்பணகைப். 74, 75, 76, 77.

314. சிறப்பு நிரம்பிய முரண்தொடை :
அயோத்தியா. நகர் நீங்கு. 47.
அயோத்தியா. தைலம் ஆட்டு. 75.

'களிப் பொடு கடைகள் தோறும்
கருங்கடல் கடந்த காலால்
பொழிலிற் பூ வாவிச் செல்லும்
பொறிவண்டிற் போனு'னென்றும், 38

316. 'மக்களி லொருவன் கொல்ல
மாள்பவன் வான மேரு
உக்கிட அணுவொன் றேடி
உதைத்தது போலு'மென்றும்,
'அக்கிட அஞ்சி னேனச்
சீதையென் றமிழ்தாற் செய்த
நக்கிடு நஞ்சால் வேந்தன்
நாளையித் தகைய'னென்றும், 39

317. 'கலந்தவர்க் கினிய தாய
கள்ளுமாய் பிரிந்து போந்தே
உலந்தவர்க் குயிரை யுண்ணும்
விடமுமாம் நிலவே'யென்றும்,
'கலந்தரு கடலிற் கான
பெருமையுங் கடிவில் தாங்கும்
நிலந்தரு சிறிய மாந்தர்
நீர்மையுங் காண்பீ'ரென்றும், 40

318. 'விடனெக்குங் கொடிய நோக்கி
னமுதொக்குஞ் சொல்லா' ரென்றும்,
'மடனெக்கு மடவாள் காலின்
வந்துகைப் போனு'ளென்றும்,
கொடுந்துயர்க் கடலை நீந்திக்
கோடுகண் டவனும் பின்னர்க்
கடுங்களிக் கரையி லாத
கடலுளாழ்ந் தனனே' என்றும், 41

319. 'வீங்கினள் மெலிந்தாள் மேனி
குளிர்ந்தனள் வெதுப்பினுலே
ஏங்கினள் உயிர்த்தாள் சீதை
எய்திய தென்னே' வென்றும்,
'தீங்குசெய் மாகால் சீறச்
சிறுதென்றல் வந்த' தென்றும்
'வீங்கிய துன்பத் தோடும்
உவகைமே வுளத்தா' னென்றும், 42

---

317. பால. உண்டாட்டு. 2.

318. பால. கடிமணப். 37.

319. யுத்த. மாயாசனகப். 88.

320. ‘பொருப்புவில் விறுத்தாய் நீயிக்
கருப்புவில் விறுத்தி’ யென்றும்,
‘பருப்பதம் போல்வீர் மாரித்
துளியிடைப் படர்வீ’ரென்றும்,
‘விருப்புற விடத்தை விண்ணின்
அமுதாய்வேண் டினனே’யென்றும்,
திருப்புகச் செப்ப லெல்லாம்
முரண்தொடைச் செப்ப மாமே. 43

## 8. புலமைத்திறன் படலம்

321. மேதகு கவிஞராம் விலையின் மாட்சியர்
மீதுசெல் லாட்சியின் மிகைவி ரும்பினர்
போதினிற் ருதளை புள்ளி வண்டென
யாதுள நூற்கலை யாவுந் தேர்வரால். 1

322. சங்கிதம்[1] சோதிடம்[2] சமயம்[3] தத்துவம்[4]
இங்கித எழிற்கலை பரதம்[5] சிற்பஞ்[6]சீர்
தங்குதர் மம்,[7] சமம் தந்த தந்திரம்[8]
நுங்கிய மதியிந் நூல் நுணித்துக் காட்டுமே. 2

*உதாரணம்*

1. (அ) “நச்செனக் கொடிய நாகக் கள்ளொடு குருதி நக்கிப்
பிச்சரிற் பிதற்றி யல்குல் பூந்துகில் கலாபம் பீறிக்
குச்சரித் திறத்தி ஞேசை களங்கொளக் குமுக் கொண்
[டீண்டிச்
சச்சரிப் பாணி கொட்டி நிறைதடு மாறு வாரும்.” (27)

(ஆ) “தந்திரி நெறியிற் ருக்குறு கருவி
தூக்கின ரெழு விதச் சதியின்
முந்துறு குணி லோ டியைவுறு குறட்டிற்
சில்லரிப் பாணடிலின் முறையின்
மந்திர கீதத் திசைப்பதம் தொடர
வகையுறு கட்டளை வழாமல்
அந்தர வானத் தரம்பையர் கரும்பிற்
பாடலார் அருகுவந் தகவ.” (28)

---

320. பால. உலாவியற். 22.

322. சங்கீதம், சோதிடம் முதலியனவெல்லாம் கம்பன் காவியமும் காட்டும். சங்கிதம்–சங்கீதம் என்பதன் குறுக்கல் விகாரம்.

1. (அ) சுந்தர. ஊர்தேடு. 189.
(ஆ) சுந்தர. காட்சிப். 90.

2. ''முத்தினின் முழுநில வெறிப்ப மொய்ம்மணிப்
பத்தியி னிளவெயில் பரப்ப நீலத்தின்
தொத்தின மிருள்வரத் தூண்டச் சோதிட
வித்தகர் விரித்தநா ளொத்த வீதியே.'' (29)

3. ''பொருவரிய சமயங்கள் புகழ்கின்ற புத்தேளிர்
இருவினையு முடையார்போ லருந்தவநின் றியற்றுவார்
திருவுறையு மணிமார்ப நினக்கென்னை செயற்பால
ஒருவினையு மில்லார்போல் உறங்குதியா லுறங்காதாய்.'' (30)

4. ''சாங்கியம் யோகமென் றிரண்டு தன்மைய
வீங்கிய பொருளெலாம் வேறு காண்பன
ஆங்கவை யுணர்ந்தவர்க் கன்றி யன்னவன்
ஓங்கிய மேனியை யுணர்தற் பாலதோ?'' (31)

5. ''ஏனைய பிறவுங் கண்டார்க் கிந்திரசால மென்னத்
தானவை யுருவிற் றேன்றும் பாவனைத் தகைமை சான்றோர்
மானமை நோக்கினரை மைந்தரைக் காட்டி வாயால்
ஆனையை விளம்பித் தேரை யவிநயத் தியற்றியுற்றார். (32)

6. (அ) ''கல்லடித் தடுக்கிவாய் பளிங்கரிந்து கட்டிமீ
தெல்லிடப் பசும்பொன்வைத் திலங்குபன் மணிக்குலம்
வில்லிடக் குயிற்றிவாள் விரிக்கும் வெள்ளி மாமரம்
புல்லிடக் கிடத்திவச் சிரத்தகால் பொருத்தியே.'' (33)

(ஆ) மரகதத் திலங்கு போதி கைத்தலத்து வச்சிரம்
புரைதபுத் தடுக்கி மீது பொன்குயிற்றி மின்குலாம்
நிரைமணிக் குலத்தி னொளி நீள் வகுத்த வோளிமேல்
விரவுகைத் தலத்தி லுய்த்த மேதகத்தின் மீதரோ.'' (34)

(இ) ''ஏழ்பொழிற்கு மேழ்நிலத் தலஞ்சமைத்த தென்ன நூல்
ஊழுறக் குவித்தமைத்த வும்பர் செம்பொன்
[வேய்ந்துமீச்... (35)

---

2. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 41.

3. ஆரணிய. விராதன் வதைப். 56.

4. யுத்த. இரணியன் வதைப். 60.

5. யுத்த. களியாட்டுப். 12.

6. (அ) பால. நகரப். 24.
(ஆ) பால. நகரப். 25.
(இ) பால. நகரப். 26.

7\. (அ) ''உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணரும்
[கோளார்
மற்றது வினையின் வந்த தாயினும் மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவர் அரிய
[நூலும்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்.'' (36)

(ஆ) ''காலமு மிடனு மேற்ற கருவியுந் தெளியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுனித்தறங் குனித்த
[மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டுஞ் செய்கையும் தெரிந்து
[கொண்டு
பால்வரும் உறுதி யாவுந் தலைவற்குப் பயக்குநீரார்.''(37)

(இ) ''தம்முயிர்க் குறுதி யெண்ணர் தலைமகன் வெகுண்ட
[போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின்றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லா தேற்றத்தார் தெரியுங்
[காலம்
மும்மையும் உணர வல்லார் ஒருமையே மொழியு நீரார்.''
(38)

8\. தேராயிர மாயிர கோடிதன் மாடு செல்லப்
போரானை புறத்தி னவற்றி னிரட்டி போதத்
தாரார் புரவிக் கடல்பின் செலத்தானை வீரப்
பேராழி முகஞ்செலச் சென்றனன் பேர்ச்சி யில்லான்.'' (39)

[வேறு]

323\. மாத வத்தி லொழுகலேம், மாமறை
யோதலேம், ஓது வார்க்கு முதவலேம்,
மூதெரி வளர்க்கேம், முறை நீங்கினேம்,
ஏது றூஉ' மெனு மந்தணர்த் தந்தனன். 3

324\. ''கரிய மாலினுங் கண்ணுத லானினும்
உரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோ ரைந்தினும் மெய்யினும்''
பெரிய அந்தணர் பீட்டினை நாட்டினன். 4

---

7\. (அ) அயோத்தியா. மந்திரப். 6.
(ஆ) அயோத்தியா. மந்திரப். 7.
(இ) அயோத்தியா. மந்திரப். 8.
8\. யுத்த. நாகபாசப். 26.

323\. ஆரணிய. அகத்தியப். 14.

324\. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 15.

325. "சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த நினக்கிலை யாயினும்
ஏத மென்பன எய்திடு மூல"மென்
றோத ரசுடை யூறுமு ரைத்தனன். 5

326. "இனிய சொல்லினன் ஈகையன் எண்ணினன்
வினையன் தூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வாதவன்
அனைய னேயர செ"ன்றெடுத் தாற்றினன். 6

327. "தீதென் றுள்ளவை யாவையுஞ் செய்தெமைக்
கோதென் றுண்டில ளித்தனை யேகுறை"
ஈது தொட்டே இராமற்குக் காதி சேய்
மாதர்க் காதும் வழக்குரை காண்பிரால். 7

328. 'கொடியைப் பற்றி விதானம் கொளுத்திக்கீழ்
நெடிய தூணைத் தழுவி நெடுஞ்சுவர்
முடியச் சுற்றி முழுது முருக்கனற்'
கடுமை கூறுங் கவித்திறன் காண்பிரால். 8

329. 'பூக்க ரிந்து முறிபொறி யாயடை
நாக்க ரிந்து சினைநறுஞ் சாம்பராய்
மீக்க ரிந்து நெடும்பணை வேருற
காக்க ரிந்த" கனற்சினம் காண்பிரால். 9

330. "எள்ளு வவென்ன இன்னுயி ராயினும்
கொள்ளல் தீது கொடுப்பது நன்றெ"ன
வள்ளற் றன்மையை மாவலி கூறத்தன்
உள்ளத் தன்மையு ரைத்ததும் காண்பிரால். 10

331. "கோல்வி ழுந்தழுந் தாமுனம் கூடியாம்
மேல்வி ழுந்திடி னுமிவன் வீயு"மென்
றேலெ ழுந்தபெருந்தொகை யாளரின்
பாலெ ழுந்தப வுருஷம் காண்பிரால். 11

---

325. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 20.

326. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 26.

327. பால. தாடகை வதைப். 38.

328. சுந்தர. இலங்கை எரியூட்டு. 1.

329. சுந்தர. இலங்கை எரியூட்டு. 19.

330. பால. வேள்விப். 28.

331. யுத்த. மூலபலவதைப். 129.

332. ''பருவ மங்கையர் பங்கய வாண்முகத்
துருவ வுண்கணை ஒண்பெடை யாமெனக்
கருதி யன்பொடு காமுறு வண்டெ''னத்
தெரிவை யர்விழி தீட்டலும் காண்பிரால். 12

333. 'இணரொ ளிக்கொண் டிருளைத் துரப்பன
மணிவி ளக்கல மாதரின் மேனி'யென்
றணிவ ளைக்கையா ரம்பொன் னழகினை
எணிவி ளக்கியன் ஞரிசை ஏத்தினன். 13

334. 'காக துண்டம் நறுங்கல வைக்களி
யாக முண்ட தடங்கலு நீங்கலாற்
வேக டஞ்செய் மணியென மின்னின
பாக டர்ந்த''சொல் லாரைப் பயந்தனன். 14

335. ''வஞ்சி நாண விடைக்கு மடநடைக்
கஞ்சி யன்ன மொதுங்க அடியன்ன
கஞ்சம் நீரி லொளிப்ப''அக் காரிகை
மஞ்ச னத்தின் வனப்பு மதித்தனன். 15

336. ''பெண்ணி னேக்குஞ் சுவையிற் பிறர்பிறர்க்
கெண்ணி நோக்கி யியம்பரு மின்பத்தைப்
பண்ணி னேக்கும் பரவமு தைப்பசுங்
கண்ணி னேக்கும்''களிப்பைக் கனிந்தனன். 16

337. ''கையைக் கையி னெரிக்குந்தன் காதலன்
வைகு மாலிலை யன்ன வயிற்றினைப்
பெய்வ ளைத்தளி ராற்பிசை யும்''புகை
வெய்து யர்க்குமோர் விம்மல் விளம்பினன். 17

338. 'வாள ரம்பொரு மான்விழி யார்முகம்
சாள ரம்வரு சந்திர ஞ்'மென
நீள ரங்குல கெங்கும் நிலவவான்
கோளி ரங்கக் குறித்தவன் யாவனே! 18

---

332. பால. நாட்டுப். 23.

334. பால. நீர்விளையாட்டுப். 22.

335. அயோத்தியா. கங்கைப். 20.

336. அயோத்தியா. கங்கைப். 11.

337. அயோத்தியா. நகர் நீங்கு. 10.

338. பால. மிதிலைக் காட்சிப். 14.

339. "தேவ முதத்த னங்கன் திருத்திய
ஓவி யம்புகை யுண்ட வுரு"வெனக்
காவி யங்கணி சீதை கவினரு
தேவி ளங்கணி சேர்த்தவன் யாவனே! 19

340. 'ஆத ரித்தமு தத்தில் அனங்கவேள்
கோதில் கோலினைத் தோய்த்தெழு தமுடி
யாது நின்று திகைப்புற் றழுங்கு'மச்
சீதை பேரெழிற் செப்பினன் யாவனே! 20

341. "எள்ளில் பூவையு மிந்திர நீலமும்
அள்ளல் வேலையு மம்புச சாலமும்
விள்ளும் வீயுடைப் பானலு மேவுமெய்"
வள்ளல் வண்ணம் வகுத்தவன் யாவனே! 21

342. "ஆம்ப லொத்தமு தூறுசெவ் வாய்ச்சியர்
தாம்ப தைத்துயி ருட்டடு" மாறுமா
றேம்ப லூட்டலா மின்னழ கென்னமு
தாம்பி ழம்பை யணிந்தவன் யாவனே! 22

343. "பறிக்கு மார்பிற் பகழியைப் பன்முறை
முறிக்கு மூர்ச்சிக்கு மோக்கும் முயங்குமால்
எறிக்கு வெங்கதிரோடுல கேழையுங்
கறிக்குங்" காந்தலைக் காட்டினன் யாவனே! 23

344. 'காலுற் றுச்சீதை கண்வழி காமனேய்
பாலுற் றபிரை யென்னப் படர்ந்தது'
மாலுற் றமயக் கோவிண் ணினேடுமண்
மேலுற் றமிதி லைப்பொனின் பொன்னுரு. 24

படைவீரர்

[வேறு]

345. "ஒடிக்கு மேல்வட மேருவை வேரொடு மொடிக்கும்
இடிக்கு மேல்நெடு வானக முகட்டையும் இடிக்கும்
பிடிக்கு மேல்பெருங் காற்றையுங் கூற்றையும் பிடிக்கும்
குடிக்கு மேல்கட லேழையுங் குடி"படை குணித்தான். 25

---

339. சுந்தர. காட்சிப். 11.
340. பால. மிதிலைக் காட்சிப். 4.
341. பால. மிதிலைக் காட்சிப். 90.
342. பால. உலாவியற். 31.
343. யுத்த. இராவணன் சோகப். 32.
344. பால. மிதிலைக் காட்சிப். 41.
345. கிட்கிந்தா. தானைகாண். 25.

346. "அனும ஞற்றலு மரசன தாற்றலுஞ் சாலா
கனியுங் காய்களு முணவுள முழையுள காக்க
மனித ராளினென் இராக்கத ராளினென் வையம்"
எனுமிக் கூற்றினுள் கவிப்படை படைகுண மிழைத்தான். 26

347. "ஈசன் மேனியை ஈரைந்து திசையினே யீண்டிங்
ஆசில் சேனையை ஐம்பெரும் பூதத்தை அறிவை
பேசும் பேச்சினேச் சமயங்கள் பிணக்குறும் பிணக்கைக்
கூச லல்லது குறிப்பரோ முடிவெனக்" குறித்தான் 27

348 "உலகிற் ரேன்றிய மறுக்கமு மிமைப்பில ருலேவும்
மலேயும் வானமும் வையமு மறுகுறு மறுக்கும்
அலேகொள் வேலேக ளஞ்சின சலிக்கின்ற அயர்வும்
அலகி லாதெறி துயர்க்கட லாழமும் அளந்தான். 28

349. "கண்ணன் நேமியுங் கண்ணுதல் கணிச்சியும் கமலத்
தண்ணல் குண்டிகைக் கலசமும் அழியினும் அழியாத"
திண்மை சான்றவத் தேரதன் அழிகலாச் சீரை
வண்மை சான்றிதன் மேலெவர் வழுத்துவர் வரம்பே. 29

350. "அகழி வேலேயைக் காலத்தை யளக்கர்நுண் மணலே
நிகழு மீன்களே விஞ்சையை நினேப்பதே நின்ற
இகழ்வில் பூதங்க ளிறப்பினு மிறுதிசெல் லாத
புகழெ னச்சரம் தொலேவிலாத் தூணியும் பொறித்தான். 30

## படைக்கலம்

[வேறு]

351. "மழுக்களும் அயிற்களும் வயிர வாட்களும்
எழுக்களும் தோமரத் தொகையு மீட்டியும்
முழுக்களு முசுண்டியுந் தண்டு முத்தலேக்
கழுக்களு முலக்கையுங் கால பாசமும்." 31

352. "குந்தமுங் குலிசமுங் கோலும் பாலமும்
அந்தமில் சாபமும் சரமும் ஆழியும்
வெந்தொழில் வலயமும் விளங்கு சங்கனு
பந்தமு"மெனப் பல படையுந் தந்தனன். 32

---

346. யுத்த, மூலபலவதைப். 43.
347. கிட்கிந்தா. தானேகாண். 36.
348. யுத்த. இராவணன் தேர் ஏறு. 32.
349. யுத்த. இராலணன தேர் ஏறு. 23.
350. யுத்த. இராவணன் தேர் ஏறு. 17.
351. ஆரணிய. கரன்வதைப். 34.
352. ஆரணிய. கரன்வதைப். 35.

பல்லியம்

353. ''கும்பிகை திமிலையுங் குறடு செண்டையும்
பம்பொலிப் பாண்டிலும் பணவம் தூரியும்
கம்பொலி கரடிகை தக்கை கண்டையும்
அம்பலி கனுவையும் சகடை ஊமையும்.'' 33

354. ''தாரையுஞ் சங்கமுந் தாளம் கொம்பொடு
வார்மிசை பம்பையு துடியும் மற்றவும்''
பேரியு மெனக்களன் பிளிறு பற்பல
தூரியம் அடுக்குறத் தொடுத்துத் தந்தனன். 34

[வேறு]

355. ''சங்கொலி வயிரி ஞேசை யாகுளி தழங்கு காளம்
பொங்கொலி வரிகண் பீலி பேரொலி வேயின் பொம்மல்
சிங்கத்தின் முழக்கம் வாசிச் சிரிப்புதே ரிடிப்பு திண்கைம்
மங்குலி னதிர்வு'' போரின் வழங்கொலி மயக்கு நோக்கீர். 35

356. ''பண்டரு கிளவுச் செவ்விப் பல்லியத் தொழுகு தீந்தேன்
கண்டினிற் குயின்ற வீணை நரம்பொடு கமழுந் தேறல்
வண்டினிற் பொலியும் நல்யாழ் வழியுறு நறவம் வானத்
தண்டர்தம் செவியி னுண்ணும் அமுதிசை''யணிதல்
[நோக்கீர். 36

357. ''தாதுகு நறுமென் சந்தம் குங்குமம் குலிகம் தண்ணென்
போதுகு பொலன்ரு தின்ன தொடத்தக்க யாவும் பூசி
மேதகு சொல்லின் மெல்லென் சொல்லெனும் பளிங்கின்
[வாயே
சீதுகு சாந்தம் தேக்கிச் செய்தளச் செல்வி நோக்கீர். 37

358. சுந்தரப் பவழச் செவ்வாய்க் கைகையி சூழ்ச்சி யாலம்
மந்தரம் புரையுந் தோளான் மயக்குற்று மறுகு மெல்லி
எந்தவா றகன்ற தென்ன எழில் பொழிந்தொழுகு சொல்லாற்
சந்தர்ப்பத் தகுதி நோக்கித் தந்த வர்ணனையும் நோக்கீர். 38

---

353. யுத்த. பிரமாத்திரப். 5.

354. அயோத்தியா. ஆறு செல். 33.

355. யுத்த. பிரமாத்திரப். 7.

356. யுத்த. பிரமாத்திரப். 8.

357. சுந்தர. கடல்தாவு. 9.

358. கைகேயியின் சூழ்வினையால் தசரதன் உள்ளம் அழிந்து பெருந்துயருற்ற இரவுப் பொழுது கழிந்த தன்மையை வருணிக்கும் பகுதி இங்குக் குறிக்கப்படுகிறது. அயோத்தியா, கைகேயி சூழ்வினைப். 46.

359. ''தேவரும் முனிவர் தாமுந் திசைதொறு முறையிற் சிந்துங்
கேவல மலரால் வேறே ரிடமின்றிக் கிடந்த வாற்றல்
பூவெனு நாம மன்றிவ் வுலகிற்கும் பொருந்திற்'' றென்ற
நாவனும் காட்டி னன்நற் பொருளொரு மொழியுண்
[ணட்டி. 39

360. ''வீதிவாய் செல்கின் றன்போல் விழித்திமை யாது நின்ற
மாதரார் கண்க ளூடே வாவுமான் தேரிற் செல்வான்
யாதினு முயர்ந்தோர் தன்னை யாவர்க்குங் கண்ண னென்றே
ஓதிய பெயரு''க் குற்ற பொருளுரைத்ததுவு மஃதே, 40

361. ''இலக்குவ னென்னும் நாமம் உனக்கென்று மியைவ தென்ன
இலக்குவன் கணைக்கு யானே ஆக்குவ னிடையிற் புக்கு
விலக்குவ னென்னப் பொங்கி விடையவ னுறினும் வீரம்
கலக்குவ''னென்னு மிந்திர சித்துரை வீறு மஃதே. 41

362. 'அண்டத்தி னளவு மின்ன பகர்ந்தழைத் தரக்கர் வேந்தன்
கெண்டையங் தடங்கண் ணாளுள் கிளுகிளுத் தொடுங்கும்
[வண்ணம்
பண்டைத் தன்னுமம் வந்த காரணம் பாரித் தா'னென்
றெண்டிசை வென்றார்க் கேற்ப இயம்பிய குறிப்பு மஃதே. 42

363. 'செப்பிடுங் காலை மேலோர் சீறினுஞ் சிறப்பே யாதல்
தப்புமே, அதனைக் கண்டோம் சாகரத் திடையந் நாளே
உப்புடை வேலை யென்ற உலகுரை பழியை நீங்கி
அப்புடை வேலை யாகி யமைந்த' தென்பதுவு மஃதே. 43

364. 'பொசிவுறு பசும்பொற் குன்றிற் பொன்மதில் நடுவட் பூத்து
வசையற விளங்குஞ் சோதி மணியினா லமைந்த மாடத்
தசைவில இலங்கை மூதூர் ஆரிரு ளின்மை யாலே
நிசிசர ராஞ ரந்த நிருதரெ'ன் குறிப்பு மஃதே. 44

[வேறு]

365. ''தழைத்த பொன்முலைத் தடங்கடந் தருவிபோய்த் தாழ
புழைத்த போலநீர் நிரந்தரம் பொழிகின்ற பொலிவால்
இழைக்கு நுண்ணிய மருங்குலாள் இணைநெடுங் கண்கள்
மழைக்கண்'' என்னவோர் காரணங் குறித்தது மஃதே. 45

---

359. யுத்த. திருமுடி சூட்டு. 8,
360. பால. உலாவியற். 6.
361. யுத்த. பிரமாத்திரப். 64.
362. யுத்த. மாயாசனகப். 87.
363. யுத்த. வருணனை வழிவேண்டு. 33.
364. யுத்த. ஊர்தேடு. 99.
365. சுந்தர. காட்சிப். 6.

[வேறு]

366. ''எல்லை யற்ற இடர்தரு வாயெ''ன
மெல்லி யற்கு இராமன் விளம்பலும்,
'இல்லை யாகி முடியலுற் ருன்திருச்
சில்லி யந்தேர்ச் செறிந்தன'னென்றலும், 46

367. 'இன்னல் செய்யு மிராவணன் தீமைபோல்
துன்னு கூனியும் தோன்றின' ளென்றலும்,
'முன்னை நாளுயி ரோடு முளைத்த நோ'
யென்னச் சூர்ப்ப ணகையை இசைத்ததும், 47

368. பின்னர் வந்து பிணங்கு நிகழ்ச்சியை
முன்னர்ச் சுட்டி முடிக்குந் துறை; கதை
மன்னு மிம்முறை மாபுல வர்கவித்
துன்னு மென்ன நாம் சொல்லவும் வேண்டுமோ? 48

[வேறு]

369. 'கடுப்பினில் யாரு மறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்
தடுத்திமை யாம லிருந்தவர் தாமெ'ன்
றடுத்த விரைவை யறைந்துளர் யாரே? 49

370. 'மாலும் மதிக்கணம் வாளி தொடுப்பான்
கோல நெடுவில் குனித்தது காணா்
சூல மறத்துண் டங்கள் கண்டாரெ'ன்
றேலும் விரைவை இசைத்துளர் யாரே? 50

[வேறு]

371. ''மன்னெடுங் குடைமிடைந் தடையவான் மறைதரப்
பொன்னிடும் புவியிடும் புனைமணிக் கலனெலாம்
மின்னிடும் வில்லிடும் வெயிலிடும் நிலவிடும்''
என்னிடாக் கதிரிவை எரித்தல்யார் விரித்துளார்? 51

---

366. அயோத்தியா. நகர்நீங்கு. 227.

367. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 47.
ஆரணிய. சூர்ப்பணகைப். 8.

368. பின்னர் வரவிருக்கும் ஒரு நிகழ்ச்சியைக் காவியத்தில் முன்னரே குறிப்பாக உணர்த்தும் கவிமரபு காவியத்தில் உள்ளமை கூறல்.

369. பால. கார்முகப். 34.

370. பால. தாடகைவதைப். 48

371. பால. எதிர்கொள். 11.

[வேறு]

372. "நஞ்சினின் நளிர்நெடுங் கடலின் நங்கையர்
அஞ்சன நயனத்தின் அவிழ்ந்த கூந்தலின்
வஞ்சனை யரக்கர்தம் வடிவிற் செய்கையின்
நெஞ்சினின்" எனவிருள் நிகர்ப்புத் தந்தனன்.' 52

373. "கொன்றையந் தாரநின் கோபம் பூணபவர்
வன்றிறல் யமனையு மரசு மாற்றுவார்
வென்றிய மதகரி பிடித்து வீசுவார்"
என்றன னிலங்கைக்கா வலர்தம் மீட்டினை. 53

374. "சுள்ளியி னிருந்துறை குரங்கின் றேள்வலிக்
கெள்ளுதி போலும்நின் புயத்தை" என்பது
தள்ளரு வலியினுற் றருக்கி ராக்கதர்
உள்ளத்தில் வானரர் உவர்ப்புக் காட்டுமால். 54

## 9. அறவுரைப் படலம்

375. பல்லொ ழுக்கம் படரும் புவிக்கொரு
நல்லொ ழுக்கம் புகட்டலும் நாமநூல்
தொல்லொ ழுக்கத் தொடர்பெனவே ; கம்பன்
சொல்ல முத்திய தூநெறி மட்டில. 1

376. கலையி னேக்கமே நற்புல வர்கவித்
தலையி னேக்கமாய்ச் சாரினு முள்ளுறை
நிலையி னுக்கம்பால் நெய்யென நன்னெறி
விலையி லாக்கம் விரவித் தழைக்குமே. 2

377. "அருப்ப மென்று பகையையு மாரழல்
நெருப்பை யுமிகழ்ந் தாலது நீதியோ?"
'விருப்பத் தக்கோர் முதலொடு வீயினும்
மருப்புகு மரம்போல் வண்மை மாய்வரோ?' 3

---

372. கிட்கிந்தா. கார்காலப். 4.

374. யுத்த. இராவணன் மந்திரப். 25.

375. உலகிற்கு உயரிய நல்லொழுக்க நெறிகளை எடுத்துரைப்பது சிறந்த நூல்களின் உட்கோள் என்பது கம்பன் வாக்குகளிலும் விரவிவரக் காணலாம்.

[வேறு]

378. "ஒன்று வேண்டல ராயினு மொருவர்பா லொருவர்
சென்று வேண்டுவ ரேலவர் சிறுமையிற் றீரார்;"
'நின்றி டாநெறிச் சிறியவர் தீயன நிகழ்த்தின்
கன்றி டாவுளிற் பொறுப்பது பெரியவர் கடனே.' 4

379. 'மெய்யி னின்றபின் வேள்வியு மியற்றவேண் டுவதோ?
'உய்யத் தஞ்சென மாதரை யுள்ளிடார் தக்கோர்?
'வெய்ய கூற்றுவாய் வீரமும் குறைவரோ இறையோர்?
'துய்ய சொல்மரு மக்களுற் ருர்துய ரற்ருர்.' 5

[வேறு]

380. "தீர்வரு மின்னல் தம்மைச் செய்யினுஞ் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தம் செய்கையிற் பிழைப்ப துண்டோ?"
'பார்வரு முயிர்கள் நீதிப் பண்புமே னேக்கம் வைத்துச்
சேருதல் கிழமைத் தாகும் திறம்புதல் சீர்மைத் தாமோ?' 6

381. "தொல்லருங் கால மெல்லாம் பழகினும் தூயரல்லார்
புல்லலர்; உள்ளம் தூயார் பொருந்துவ ரெதிர்ந்த ஞான்றே;"
'நல்வினை யுடைய ராகி அறம்நலி யாதார்க் கெல்லாம்
பல்வினை நலனே எய்தும் படரோடீ றடைவ துண்டோ? 7

382. 'கேடுவந் துற்ற போதும் உணர்வரோ உணர்வி லாதார்?'
'தேடிவந் துற்ற தத்தம் நிலைதிரிந் தனர்க்குத் தோல்வி
ஓடிவந் துறுமே; தஞ்சென் றுற்றவர் பிழைக்கின் நாமும்
நாடியே பிழைசெய் தீட்டல் நலமெனக் கொள்ள லாமோ? 8

383. 'கொள்ளிய பெருமையாண்மை கொடைவரும் வண்மை
[எல்லாம்
உள்ளிநா முணர நோக்கின் பொறையின தூற்ற மாமே;'
'ஒள்ளிய உணர்வு கூட உதவல ரெனினு மொன்ரே
வள்ளிய ராயோர் செல்வம் மன்னுயிர்க் குதவு'மன்றே. 9

384. "மாரியை நோக்கிக் கைம்மா றியற்றிடா வைய மென்ன
பேரிய லாளர் செய்கை யூதியம் பிடிக்கா" ரென்றும்'
'பாரினில் வாழ்க்கை மக்கட் டுணையின்றேல் பழுதா'
[மென்றும்,
'சேரிய பாம்பின் காலைப் பாம்புதான் தேரு'மென்றும், 10

---

378. யுத்த. வருணனை வழி வேண்டு. 9.
379. அயோத்தியா. மந்தரை சூழ்ச்சிப். 25.
380. யுத்த. வீடணன் அடைக்கலப் 125.
381. யுத்த. வீடணன் அடைக்கலப். 120.

385. 'கனிவருங் காலத் தைய பூக்கொளக் கருதா' ரென்றும்'
'அனிதெறும் அன்பின் றன்மை அமரரும் அறியா' ரென்றும்'
'தனைக்கொலத் துணிவா ராயின் தனக்கது தகுமே யென்னின்
முனங்கொல' முயல்க வென்றும் மொழிந்தன ரறிஞர்'
[என்ருன். 11

[வேறு]

386. 'புலைமேலுஞ் செலற்கொத்துப் பொதுநின்ற
செல்வத்தின் புன்மைத் தன்மை
நிலைமேலு மினியுண்டோ நீர் மேலைக்
கோலமென நிகழ்த்தி ஞன்காண்
மலைமேல நின்ருர்க்கும் வழுக்குண்டே
வாழ்ந்தார்தா மரையின் மன்னும்
இலைமேல நீர்போல இடருழந்து
துயருகுத லின்று முண்டே. 12

## 10. கவி இலக்கணப் படலம்

387. கவிக்க லையெனுங் கரையிலாப் பாற் கடல் கடைந்து
புவிக்கிலை வேரு ரமுதெனப் புதுக்கிய புலவன்
திவிய காவியத் திடையிடை யக்கலை தேர்வோர்
செவிகொ ளத்தகுஞ் சிற்சில விதிமுறை தெளித்தான். 1

388. முன்னுள் ளார்புனை நூற்ருெகை முறைமுறை யாய்ந்தே
பின்னுள் ளார்பெறும் பெற்றிய நியதிபே ணுவரால்;
சொன்னி றைந்தபிற் றமிழ்க்கவித் துறையினைத் துருவின்
இன்னி றைந்தில தென்றுநீர் எளிதுணர் கிற்பீர். 2

389. கவின்க லைக்கணே கவினுவ கவியெனக் கணித்துப்
புவியி னல்லிசைப் புலவரும் நலம்வரப் புனைந்தார்;
செவிக்குப் புல்லிசை செலுத்துவர், திகழ்கவி மாது
தவிக்க வெண்பொருள் தழக்குவர் மென்கவி சமைப்பார். 3

390. நல்லி சைவலோர் நவையிலா ஒளிநகு மணியும்,
புல்லி சைஞரின் புரைநிரை புனைதரு முத்தும்,
எல்லி மின்மினி, எழிற் பொழில் பறந்தலை, சிற்பம்
வல்லு நர்வனை பாவைவேளு ருவென மலையும். 4

391. இத்தி றத்தினி லியலுவ தாற்கவி மதிப்பார்
ஒத்துக் கொள்வன உலகியல் ஒளிர்வன வனப்பே
தத்தி யாங்கணும் தழைப்பன குழைப்பன வாய
உத்த மக்கவி யுதவுவோர் மதமெடுத் துரைப்பாம். 5

---

390. வேளுரு-வேளார் வனையும் மண்ணுருவங்கள்

[வேறு]

### 1. மாதுரியம்

392. மதுரம் சொற்பொருண் மாட்டு மலிவுகொண்
டுதிர வேண்டுவ தாமே முதல்விதி;
எதுவின் றேனு மிஃதிழை யாக்கவி
மதுகை நீங்கிய மைந்தரை மானுமால். 6

393. மணமி லாத மலர்க்குவை யென்கெனோ?
எணமி லாத மனமென் றிசைக் கெனோ?
குணமி லாத கொடுந்தவ மென்கெனோ?
வணமி லாது வழங்குங் கவிவகை. 7

[வேறு]

394. போது ரீயதேன் புகுந்து கொள் ஈயெனப் புலவர்
ஓது ரீயநூல் உலகியல் ஒருபட ஆய்ந்து
மாது ரீயமே துளும்புதீம் பொருட்கவி வார்ப்பர்
சாதுரீ யமாம் சொல்லெனும் பல்லவத் தளிகை. 8

### 2. தெளிவு

[வேறு]

395. ஒளியே வீசி யுறைபொருள் காண்பபோல்
மொழியின் னேசை முதிர அதிற்பொருட்
பொழிவு தூங்கப் புலனெறி போயநற்
றெளிவு தேங்கித் திளைத்திடல் வேண்டுமே. 9

396. கலங்க னீர்கலுழ் கொண்டிழி காலென்கோ?
மலங்கி ருட்புதர் மாய்த்த பொருளென்கோ?
விலங்கு புள்ளும் விளைக்கு முளைப்பென்கோ?
துலங்க லாம்பொருள் தோன்ற லிலாக்கவி. 10

[வேறு]

397. 'தேறல்' என்னத் தேனி னுக்கொரு பெயர்முனோர் தெரித்தார்
தேறல் சான்றருந் தித்திப்பும் பெற்றுள திறத்தால்;
'தேறல்' தேனினுந் தெளிந்ததீங் கவிக்கமை பெயராய்த்
தேறல் வேண்டுமே நயமிகுத் தேறலே செய்ய. 11

### 3. வளம்

398. இளம ரக்கா இழைத்துதிர் செல்வம்போல்
மழைக்கண் மாரி வழங்குவண் தாரைபோல்
அளவை யில்பொரி வாணத் தவிர்வபோல்
வளமே சொற்பொருள் மன்ன மலியுமால். 12

399. நெருக்கம் விட்டமீன் நீள்வெளி யென்கெனோ?
வருக்கம் விட்டு வறழ்மல டென்கெனோ?
உருக்கென் பொட்டல் உலர்மர மென்கெனோ?
பெருக்கம் விட்டு மெலிகவிப் பெற்றியை. 13

[வேறு]

400. சரக்கி லாவொரு தரித்திரன் வாணிகந் தாங்கின்
இரக்க லாவிதத் தென்செயும்? இரப்பதே துணிந்து
விரக்கி லாக்கவி வேண்டுவ பிறர்வயின் வேண்டி
கரக்கெ லாவிதம் கருதினும் கரத்தலா வதுவோ? 14

4. பாவிகம் (Idealisation)

[வேறு]

401. விழுமிய சொல்லின் மேதகு நற்பொருள்
கெழும வேண்டுவ துங்கிழ மைத்தென
வழுவிற் றேய்ந்த வளாக வுரைமறு
நழுவிற் றேய்ந்திற நற்புலம் நாட்டுமே. 15

402. சீரிய வல்ல வாம்பொருள் கீழ்நடை
சேரிய புஞ்சொல் லொன்றுந் தெரிந்திடா
ஊரு முப்பொழித் துண்ணீ ருதவிட
மாரித் தாரை கடலின் வடித்தவா. 16

403. காணுங் காட்சியைக் கண்ட கருத்தினை
வீணு ணர்வை மிகுத்திடல் வேண்டுமோ ?
பேணு மாந்தர் அறிந்ததைப் பின்னுநூற்
பூண லேன்கவி யென்றபொய்ப் பெயரொடு ? 17

404. உள்ளி லோங்கு முணர்வு மியற்கையும்
எள்ளி லோங்குநெய் இப்பிய ளிமுத்தம்
அள்ள லோங்கல ரென்னக் கவியகம்
கொள்ள வேறு குழகிற் குழையுமே. 18

405. அழகி ழிந்த அழகில் வளர்வதும்
அழகி லாத அழகைப் பெறுவதும்
பழகு நூற்கவி வாணர் பவித்திரக்
குழகி னுள்ளங் குவிதிறத் தென்னலாம். 19

5. அணி

406. மணியி னுன்மிளிர் மாதின் வனப்பிரு
பிணியி னுன்மைந்தர் சிந்தையைப் பின்னுமால் ;
கணியி னுற்கவின் கால்கவி நங்கையை
அணியி னுலழ கான்றிடச் செய்வரே.’ 20

407. அணியில் லாத அமுதுகு தீங்கவி
மணியில் லாமடப் பாவை நிர்க்குமென்
றெணிவ குத்தலங் காரநூல் ஏத்துவார்
துணிவிற் றேன்றும் ‘சுவைக்குச் சுவைசெயல்.’ 21

408. சொல்லின் வந்த தொடைமுத லாமணி
நல்லு ரைப்பொரு ளுட்டு பொலனணி
எல்லை விட்டழ கெய்துவிக் குங்கவிக்
கில்லை யாண்டு மிழிதக வெய்தலே. 22

409. ஆயி னுஞ்சா லறிஞு ரளவினே
தாயி னுஞ்சதிர் தம்மகப் பூட்டுவர் ;
தோயு மின்சுவை தூங்கச் செயாரமு
தாயி னுமத ரோசிக மாமென. 23

410. “அளவை மிஞ்சில் அமுதமும் நஞ்செனும்”
பழமை நற்கலைக் கும்பயன் ஈவதே ;
தளவிற் சாய்ந்த தளரிளந் தென்றலும்
உளர்வுந் தன்மையு மோங்கப்புல் ஊதையாம். 24

411. இத்தி றத்திற் பொதுவிதி மூன்றிரண்
டொத்தி டக்கம்பன் ஓதினும் பாவினைச்
சித்தி ரிக்கச் சிறப்பு வகையினில்
வைத்தி ரண்டு விதியும் வகுத்தனன். 25

6. இசை

412. “தண்ணெ ழுக்கந் தழுவிய” சொல்லென
எண்ணிக் கூறுவ தென்னை?சீ ராண்டுள
வண்ணத் தாற்சொல் வனப்பமைப் பாலிசை
நண்ணத் தான்கவி நாட்டுதல் வேண்டுமே. 26

413. இழுமெ னுாஉமொலி ஏரசை சீர்வரும்
ஒழுகிசை யோசீ ரொன்றலிற் றுன்றுமால்
விழுமி யவிரு மேதகு மெல்லொலி
கெழும றிஞர்கைக் கேடில் இருபடை. 27

414. சித்தி ரத்தினைத் தீட்ட விரும்புவோன்
வைத்துக் கொள்வது வண்ணத்தின் கிண்ணமே
எத்து ணைக்கவிக் கின்னெழில் வேண்டுமோ
அத்து ணைக்கிசை பூசல வாவுமின். 28

415. தசையி றந்தச டலமெஃ தீயுமோ
இசையி றந்த கவியஃ தீயுமால்,
நசையி றந்தவோர் நங்கை நயந்தவன்
வசையி றந்தஇல் வாழ்க்கை வழுவல்போல். 29

416. ஓசை யின்பம் கவிக்கோ ருயிரெனப்
பேச வேண்டுமோ ? பேணிடார் யாவரே ?
ஆசை யெங்கு மளாவு மரிக்கதிர்
மூசு யிர்க்குயி ராய முயக்குபோல். 30

417. திசையி லாதபன் செல்லிடத் தெங்கணும்
பசையி லாத படுக்கைக் கல்லாயினும்
வசையி லாத வரகவி யார்தரும்
இசையுள் ளேக இனிமை சொரியுமே. 31

## 7. தொனிப்பொருள்

418. இனிது ளும்பிசை யேர்செவிக் காவபோல்
நுனிது ளும்பிய நுண்ணறி வார்கவிக்
கனிது ளும்பிய காமர் பொருளொடு
தொனிது ளும்பிச் சுவைசெயல் வேண்டுவர். 32

419. பொருளி னுமும் புகழ்வர், புகுஞ்சொலே
தருபொரு ளன்றித் தன்னய லோடுசார்
வருபொரு ளொன்றி, வேறு வழங்கலே
தெருளு ணர்வார் தொனியெனச் செப்புவர். 33

420. ஆரி யத்தின் அணித்துறை யாடிய
சீரி யோர்முறை செப்பூர் வியங்கியம்
சேரில் லாக்கவி எக்கவின் செய்யினும்
சாறில் லாக்கரும் பாமெனத் தள்ளலே. 34

421. புவிக்க லக்கணைப் போக்கியின் பாக்கிய
கவிக்க லைஞர்கை யாடு மெழுவிதி
செவிக்குச் சாற்றிய சீரியன் தன்செயுள்
குவிக்க லாதிருப் பானோ குழகெலாம் ? 35

422. எங்கு நோக்கினும் எல்சொரி நல்லொளி
இங்க டைந்து மிமையவ ரின்னிசை
பங்க ணைந்தும் இணையில் பரிமளம்
எங்கு மெங்கு மினிமை இனிமையே. 36

———

# பாடல் முதற்குறிப்பு அகராதி

(எண் : பாடல் எண்)


அகத்துள வுணர்ச்சி 272
அகழி வேலையைக் 350
அங்கம் சேரும் 12
அடித்தாள் மூலமேல் 277:1
அடிமையிற் பெரி 212
அண்டத்தினளவு 362
அணியில்லாத 407
அணையிலேறின 216
அந்த மாமதிற் 283:3
அந்தமில்துயர்க் 242
அப்புமாரி 291:1
அரக்கி வன்குடர் 87
அரஞ்சுடர் 195
அரம்பையர் 303
அரவினுடும் 119
அருங்கவி வாணர் 111
அருப்பமென்று 377
அல்லானு மரக்கர் 199
அலம்பு மாமணி 144
அவ்வகை யறுபதெழு 171
அழகிழிந்த 405
அழகினை முடிய 59
அழகுக்கழகணித 75
அமுதனர் சிலவர் 266
அளப்பரு மான்ற 55
அளவை மிஞ்சில் 410
அறிஞரே யாயினும் 192
அறியார் செயுந் 72
அறைதரும்பர 179
அன்ன மென்னடை 130
அனும னுற்றலு 346
ஆசில்பர தாரமவை 187
ஆடல் வேண்டலர் 36
ஆதரித் தமுதத்தில் 340
ஆதலால் அறிஞு 23
ஆம்ப லொத்த 342
ஆயமானுகர் 281:2
ஆயினுஞ் சாலறிஞு 409
ஆயினு மிஃதறிந் 53
ஆர்வத்தாலழி 152
ஆரந்தாழ் திரு 172
ஆரவாரத்தி 289
ஆரியத்தின் 420
ஆரிய மொழிக்கோர் 25
ஆலம் பூமி 131
ஆலையின் மலையின் 310
ஆழநீர்க் கங்கை 155
ஆழித் தேரும்மா 229
ஆளையா வுனக் 239
ஆற்றரவமும் 120
ஆற்றவெந் 262
ஆறுசேர்வன 290
ஆறெலாங் 122
ஆன்ற ஓவியச் 32
ஆன்ற காத 127
இசைக்கிசைதரு 33
இசைபெறு 181
இடும்பை யெத்தனை 93
இடைந்துபோன 89
இணரொளிக் 333
இத்திறத்திற் பொதுவிதி 411
இத்திறத்தினியலுவ 391
இந்த இப்பிறவிக் 211
இந்திரசித்தனோ 191
இராமகாதை 28
இரும்பசிக்கு 291
இலக்குவ னென்னும் 361
இல்லவா கொள் 185

இலகச் சேதுவை 217
இலங்கு காதல் 210
இவனருந் திறலினு 197
இழந்தநன் மணியை 265
இழுமெனுஉ மொலி 413
இழைபடப் 102
இளமரக்கா 398
இளையவ னிறந்தபின் 160
இற்பிறப்பா 150
இறைக்கடை துடித்த 285:1
இறைக்கடை துடித்து 256
இறைவர் மூவரென் 230
இன்னணங் 304
இன்னபோ திவ்வழி 182
இன்னல் செய்யு 367
இன்னும் வேறொரு 51
இனிதுளும்பிசை 418
இனிய சொல்லினன் 326
ஈசற் காயினு 174
ஈசன் மேனியை 347
ஈர நீர்ப்படிந் 84
ஈர மாவதும் 154
உச்சிமென்பணை 251
உட்டளையன் 157
உண்டிலன் 194
உண்ணீர் வேட்கை 271
உந்தையை 189
உமைக்கு நாதனே 298
உயிர்ப்புமுன் னுதித்த 276
உருண்ட வாய்தொறும் 221
உலக மேழினே 226
உலகிற் றேன்றிய 348
உலையு முள்ளத் 313
உள்ளமென் 249
உள்ளி லுதித்துத் 109
உள்ளிலோங்கு 404
உளப்பரும்பிணிப் 219
உற்றதுகொண்டு 322:7 (அ)
உற்று நின்ற 177
உறுக்கித்தனி 273:3
உன்னு நாரை 134
உன்னை மீட்பான் 158
ஊடலு மன்பர்க் 136
ஊடு லாவுநீர் 281
ஊதை தாக்க 98
ஊரி னிந்நெடுங் 231
ஊழி பேரினும் 227
ஊன வில்லுறுத் 245
ஊனளைந்த 138
எங்கு நோக்கினும் 422
எட்டோ டெட்டு 285:2
எண்கின் கூட்டம் 91
எண்ணில் கோடி 208
எந்தச் சாதியர் 37
எல்லார் விரி 74
எல்லையற்ற 366
எல்லையிற் சேனை 196
எவ்வுரை கொள்ளினு 46
எழுமிருக்கு 184
எள்ளி எற்றலு 190
எள்ளில் பூவையு 341
எள்ளுவ வென்ன 330
எறுப்பினம் 267
என்றலு முனிவு 255
என்றறத் துறை 234
என்ன ஏவினனே 166
என்னை வெல்லின் 186
ஏதிலாரு 153
ஏய்ந்த சொற்கள் 287
ஏய்ந்தருங்கன 133
ஏழ்பொழிற்கு 322:6 (இ)
ஏழுமே கடலுல 164
ஏனைய பிறவுங் 322:5
ஐயின் வாரிக் 69
ஒடிக்குமேல் வட 345
ஒளியே வீசி 395
ஒன்று வேண்டல 378
ஓசை இன்பம் 7
ஓசை பெற்றுயர் 83
ஓசையின்பம் 416
ஓடலா லுலாவலா 64
ஓவியம் சிற்ப 50
கட்டன பொருளெலாங் 45
கடல்மடை 67
கடல்வற்றின 143
கடுப்பினில் யாரு 369
கண்ணன் நேமியுங் 349
கண்ணினைக்கரந் 123

கதையெனுங் 43
கம்பம் வேய்ந்த 3
கம்பன் என்னும் 1
கம்பன் பாவருங் 54
கரட்டுப் பொற்றை 285
கரிய மாலினுங் 324
கருத்திலா இறைவன் 188
கருந்தடக் கணக் 95
கருநெருப்பிடை 301
கரும்பையுஞ் சுவை 294
கல்லடித் தடுக்கி 322:6 (அ)
கல்லெலாம் 62
கல்வியிற்றிகழ் 103
கலங்கனீர்கலுழ் 396
கலந்தவர்க் கினிய 317
கலையினேக்கமே 376
கவிக்கலையெனுங் 387
கவிமாளிகை 78
கவின்கலைக்கணே 389
கள்ளுண் மாந்தரும் 35
கனித்த வின்கனி 207
கனிவருங்காலத் 385
காகதுண்டம் 334
காட்டாதன காட்டிய 292
காணுங் காட்சியை 403
காதை யுள்ளமை 27
காமர் பூவுதிர் 4
காய்ந்தன சலாகை 259
காயுஞ் சூரிய 146
கார்த்தவீரியனென் 168
காலமு மிடனு 322:7
காலுற்றுச் 344
காவருங்கடி 280
காவிய மென்னுங் 52
காவியன்ற 14
காவின் வேந்தனும் 34
கானினேங்கு 238
குகனெடு மைவ 167
குந்தமுங் 352
கும்பிகை திமிலையுங் 353
குமுதவாயிற் 11
குரவங்குவி 322:1
குருட னெறி 73
குருதி வாளெனும் 296
குவளையி னெழில் 297
குறைப்பன 26
கூரிய அம்பெனக் 159
கூல மாமரத் 215
கூறில் அண்டரும் 8
கூறின மாற்றம் 254
கூனலா முதுகுடைச் 244
கேடுவந் துற்ற 382
கைத்திடு பொருளை 112
கையைக் கையி 337
கொடியைப் பற்றி 328
கொள்ளிய பெருமை 383
கொன்றையந்தார 373
கோட்டிலை துறுமரம் 105
கோடி யென்றனன் 288
கோல் பிடித்த 85
கோல்விழுந்தழுந் 331
சங்கிதம் சோதிடம் 322
சங்கொலி 355
சமைய நோக்கமே 41
சமைய வாதியர் 38
சரக்கிலாவொரு 400
சவியுறத் 56
சாங்கியம் 322:4
சித்திரத்தினை 414
சித்திரத்தொடு 283
சிரித்த பங்கய 293
சிலம்புகள் சிலம்பிடச் 233
சிறக்குஞ் செல்வம் 209
சீதைபோல் 151
சீரிய வல்ல 402
சுத்தனுங் கன்னன் 213
சுந்தரப் பவழச் 358
சுவண வண்ணனெடு 286:3
சுள்ளியி னிருந்துறை 374
சூது முந்துறச் 325
செங்கணங்க 286:1
செந்தொடையொடு 31
செப்பிடுங் காலை 363
செயலைச் செற்றுப் 206
செயிர்ப்பினு மெழில் 299
செவிகளைத் தளிர்க் 246
சேலியற்க ணியக்கியர் 205
சைவம் வைணவம் 42

சொல்கண்டார் 79
சொல்லின் வந்த 408
சொல்லினுட் 66
சொல்லொக்கும் 220
சொல்வளம் 58
தகவு மிகு தவமு 282:2
தசையிறந்த 415
தண்ணெழுக்கந் 412
தந்திரி நெறியிற் 322:1 (ஆ)
தம்பி கோறத் 203
தம்முயிர்க் குறுதி 322:7 (இ)
தலையினை நோக்கும் 275
தழங்கு பேரியி 121
தழைத்த பொன் 365
தனத்தினிற் 252
தாதுகு நறுமென் 357
தாயரிற்பரி 302
தாயொக்கு மன்பில் 218
தாரையுஞ் சங்கமுந் 354
திங்களைக் கரிதென்னத் 92
திங்களொன்றி 175
திசையி லாதபன் 417
திசையினை நோக்கும் 274
திருகுறுஞ்சினத் 148
திறம் திறம்பிய 180
தீதியல் வாழ்க்கை 277
தீதென் றுள்ளவை 327
தீய ளான 156
தீர்வரு மின்னல் 380
தீவியல் 110
துடித்திலன் 260
தெய்வமணம் 76
தெவ்விராவகை 281:5
தேராயிர 322:8
தேவ பாஷையில் 2
தேவ முதத்த 339
தேவரும் முனிவர்தாமும் 359
தேறல் என்னத் 397
தேறினர்களுந் 223
தேனிடைக் கரும்பிற் 308
தேனுஞ் சாந்தமும் 147
தையல் சிற்றிடை 295
தொல்லருங் கால 381
தொல்லையிற் 57
தொலைவில 107
தொழுங்கையிற் 169
தோற்பித்தீர்மதி 224
நச்செனக் கொடிய 322:1 (அ)
நஞ்சினின் 372
நஞ்சினுங் கொடிய 312
நஞ்சு தட்டுரு 300
நந்த நந்த 279:1
நல்லிசை வலோர் 390
நன்னகரதனை 269
நாடி நாடிப் 68
நாணுலாவு மேரு 281:3
நாத னிந்திரன் 161
நாமகள் அருள் 15
நாமம் நாட்டிய 241
நாயகன் வனம் 176
நிலம் விசும்பு செய் 232
நிலமகள் முகமென்ன 88
நிறப்பெரும் 163
நிறைந்தன 141
நிறையி னீங்கிய 178
நீடு நாக மூடு 281:4
நீண்டு குழன்று 305
நீரிடு துகில 268
நீருள வெனினுள 200
நீலவல்லிருள் 128
நூலினை வகுத்துக் 21
நெருக்கம் விட்டமீன் 399
நென்னற்கண்ட 237
நொய்ய கழுத்தின 314
பகடுரப்பலும் 135
பங்கய நீலம் 137
பங்குனி மலர்ந்தொளிர் 140
பஞ்சியொளிர் 279:3
படிகம் போற்றெளி 29
படியின் வெம்மை 132
பண்களாற் 309
பண்டமை நூல் 24
பண்டரு கிளவி 356
பண்ணில் வந்த 10
பருவ மங்கையர் 332
பல்லொழுக்கம் 375
பல்வளத்தின் 63
பழுவம் வாய் 286

பறிக்கு மாற்பிற் 343
பாங்கின் வேந்தை 17
பாதம் நான்கோதிய 44
பார்ப்பைச் 99
பாரு மோடாது 281;1
பாவமென் 248
பாஷை மாதர் 13
பின்னர் வந்து 368
புண்டுளங்கியவாம் 258
புலேமேலுஞ் 386
புவிக்க லக்கணேப் 421
புவியினுக்கணி 145
புள்ளி கொள்வன 139
புள்ளி மால்வரை 117
புற்புதம் போற்புலே 253
புற்றராவென 100
புனேவர உயிர்வரு 101
பூக்கரிந்து 329
பூதபௌதிகத்துட் 22
பூமழை 311
பூமி மாது 16
பூவிடைப் 60
பூவின் மென்மை 9
பெண்ணி னேக்குஞ் 336
பெண்பிறந்தவ 225
பொசிவுறு 364
பொடித்தன ரோமம் 264
பொருப்புவில் 320
பொருவரிய 122:3
பொருள் தேடிடப் 70
பொருளினுழம் 419
பொறிவழி புகுந்துள 250
பொன்கொண்டிழைத்த 81
போது ரீயதேன் 394
போந்த காதை 30
மக்களி லொருவன் 316
மக்களே மறந்தார் 263
மணமிலாத 393
மணியி ஞுன்மிளிர் 406
மதுரம் 392
மந்தார முந்து 279:2
மரகதத் திலங்கு 322:6 (ஆ)
மழுக்களும் 351
மழையினே நீல 307
மறத்தைக் 165
மறந்துறந்தவர் 193
மன்னிற் ருேன்றினேம் 202
மன்னெடுங்குடை 371
மனத்துற லாய 116
மனத்துறு வுணர்ச்சியின் 247
மாகந்தமும் 283:8
மாகா ரினமினற் 233
மாதவத்தி 323
மாதிரம் ஒன்றும் 243
மாந்தர் மடுக்கும் 115
மாரியை நோக்கிக் 384
மாலும் மதிக்கணம் 370
மானச மடு 18
மானி னேக்கியர் 129
மின்ன லோவிளக் 149
மின்னற் பிழம் 77
மீனெளித்தவான் 86
முடிந்தன பிளந்தன 142
முத்தினின் 322.2
முதலென 20
முரட்டடந் தண்டு 198
முற்றிலும் புதுமை 48
முன்பிழைக்க 97
முன்பு நின்றிசை 162
முன்னவர் நூற்றெகை 47
முன்னர் வினே 71
முன்னின்ருரை 201
முன்னுள்ளார்புனே 388
முன்னே மாண்டார் 204
மூவரும் மூவரின் 82
மெய்யி னின்றபின் 379
மேதகு கவிஞராம் 321
மேல சந்தம் 279
மொய்யுறு 273:1
மொழிவளம் 80
யாரேனுந் தானே 235
யாவரு மிறைவரென் 183
யானிழைத்த 173
வங்கியம் பல 279:4
வஞ்சப் பூசையின் 94
வஞ்சி நாண 335
வந்தெங்கும் 283.2
வம்பவிழ் 61
வருணனே தேக்கி 106
வருணனே வன்மை 113

| | |
|---|---|
| வல்லிசை கொடு | 284 |
| வன்புலங் கடந்து | 170 |
| வாங்கரும் பாதம் | 19 |
| வாங்கி வெஞ்சிலை | 236 |
| வால்விசைத்துக் | 273:2 |
| வாலி மாள | 214 |
| வாலினை யுயர்த்தி | 273 |
| வாளரம் பொரு | 338 |
| வாளை தாவுரு | 306 |
| வான்ெருடர் | 108 |
| வானமேந்திய | 124 |
| வானயாறு | 5 |
| வானிடை வந்த | 114 |
| வானும் மண்ணுநீர் | 96 |
| விடனெக்குங் | 318 |
| விண்ணவர்க்கு | 90 |
| விண்ணும் கீழ் | 257 |
| வியர்த்த மேனியர் | 222 |
| விரிந்த சாத்திரத் | 49 |
| விரிந்தன நரந்தமுதல் | 286 ,2 |
| வில்லிடைக் | 270 |
| வில்லினர்க்கெலாம் | 240 |
| வில்லெடுக்கும் | 65 |
| வில்லெடுத்து | 278 |
| விழுதல் விம்முதல் | 261 |
| விழுந்தாள் புரண்டாள் | 277:2 |
| விழுமிய சொல்லின் | 401 |
| விளிம்பு தெற்றி | 282:3 |
| வீங்கினன் | 319 |
| வீதிவாய் | 360 |
| வீறெடுத்த | 40 |
| வெண்ணிற நறை | 125 |
| வெய்யோனெளி | 278:1 |
| வெள்ளிக்கும்பம் | 126 |
| வெளுப்பன | 315 |
| வெறிய தொங்கலுக் | 282 |
| வெறுங்கை நாற்றிய | 104 |
| வேந்தன் நற்புகழ் | 118 |
| வேரி மாமணம் | 6 |
| ஹோமர் மாகவி | 39 |

# பொருட்குறிப்பு அகராதி

(எண் : பக்க எண்)


அகத்திணையிற் களவு 12
அசைப்பு வண்ணம் 71
அச்சம் 62, 65
அடிமைத்தனம், நட்பு, சகோதர வாஞ்சை 57
அதிவீரராம பாண்டியர் நைடதம் 5
அதிவீரராம பாண்டியன் 7, 12
அயோத்திநகர் வெண் மாடங்கள் 17
அர்த்தமில்லாத சொற்களை அகற்றுதல் 20
அழகிய சொற்றொடர் 24
அளவு கடந்த மதப்பற்று 8
அற்புதம் 63, 65
அறவுரைப் படலம் 89
அனுமான் 51, 55
ஆக்கியோன் படலம் 28
ஆதி கவி 29
ஆறு 46
இசை 45
இதிகாச புராணங்கள் 3
இந்திரசித்து 54, 56
இயற்கை வருணனைகள் 7
இயற்கை வருணனைப் படலம் 41
இரக்கம் 65
இரட்டுறமொழிதல் 16
இரவி வர்மா 12
இரவிற் றுயின்ற வரை மெல்லிய ஒலியாற் காலையிலெழுப்புகை 14
இராக்கத வீரர் தம்முள்வரும் வேற்றுமை 57
இராமலிங்க சுவாமிகள் கவித்திறம் 7
இராமன் 47
இராமனது மனோ துக்கம் 17
இராவணன் 52, 55
இருள் 44
இலக்கண வித்துவான்களால் வரையறுக்கப்பட்டு கவி வளர்ச்சி குன்றியமை 6
இலக்கிய மதிப்பாசிரியர்கள் 3
இலக்குமணன் 55
இலங்கை 47
இலங்கை எரியூட்டல் 46
உசிதமான சொற்கள் 17
உண்மையொடு முரணுமை 10
உயர்தரக் கவிஞன் சந்மார்க்க போதகனுகவும் இருத்தல் வேண்டும் 12
உவமான அணிகள் 23
எதுகை மோனை 22
எதுகையை ஒழித்துவிட்ட கவிகள் சிந்தாமணியில் 23
எலிஜி 10
எளிய தெள்ளிய சொற்கள் 16
ஏந்தல் வண்ணம் 73
ஒரு மொழி கொண்டே மிக்க பொருள் தருதல் 21
ஒழுகிசை நடை 13
கங்கைப் படலம் 13
கண் உறுப்பு வருணனை வேறுபாடு 19
கதை மக்கட் படலம் 47
கதையின் போக்கை முற்பட வகுத்தல் 10
கம்பரந்தாதி 5
கம்பராமாயணம் 22
கம்பர் 8, 12
கம்பன் பா 33
கருத்து வளம் 19
கலன்காண் படலம் 13
கலி விருத்தம் 68
கவி இலக்கணப் படலம் 91
கவிக்குத்தக்க சொற்களைத் தெரிந்தெடுத்தல் 15

கவிஞன் மெல்லோசை பயக்கும் சொற்களைத் தெரிந்தெடுத்தல் 21
கவிஞனுக்கு உரித்தான விசேஷ வனப்பு வாய்ந்த நடை 15
கவி மாதுரியம் அமைய 5
கவியின் உண்மை லக்ஷணத்தை உணர்தல் 1
கவியின் உயிர்நிலை 11
கவியை அலங்கரிக்கும் அணிகள் 12
கவியைப் பற்றிய தப்பெண்ணம் 8
கவிவாணருக்குச் சொல் வன்மை 19
காஞ்சிப் புராணம்—சுரகரீசப் படலம் 5, 8
காதல் 62
காதல்-காம வேற்றுமை 56
கார் காலம் 46
கார்முகப் படலம் 14
காலத்திற்கேற்ற இலக்கிய பரிஷ்காரம் 24
காவிய அணங்கைப் பீடித்தவை 8
காவியங்களெல்லாம் மத சம்பந்தமாக எழுந்தன 6
காவியத்திற்காம் விஷயங்களைத் தெரிந்தெடுத்தல் 9
காவியத்திற்காம் விஷயம் தெரிவதில் கவனம் 4
காவியத்தின் உருவம் 10
காவியத்தின் பொருள் 10
காவிய மென்னுங் கலை 32
கானல் 44
கிரே 10
கிளைக்கதை 29
கும்ப கன்னன் 52, 55
குறில் வண்ணம் 70
கூப்பர் 10
கௌசலை 56
சந்மார்க்க நாசத்திற்கேதுவான கதைகள் 7
சந்மார்க்க வழு ஏற்படாமை 11
சமயப் பற்று 6
சமுதாயத்தாரது அறிவின்மை 8
சித்தர் முதலியோர் கவித்தன்மை 4
சித்திரப் பாக்களின் விசித்திரங்கள் 5
சிவஞான சுவாமிகள் 5, 7
சிறந்த காவியம் புனையும் முறைகளை அறிதல் 9
சிறுத்தொண்டர் சரித்திரம் 9
சினக்குறி 60
சினம் 62, 63
சீதை 50
சீதையின் ஆற்றொணத் துயரம் 17
சீதையின் மந்த காசம் 17
சீவக சிந்தாமணி 22
சுத்தத் தமிழ் மொழி தெரிந்தெடுத்தல் 22
சூர்ப்பணகையின் வசீகர சக்தி 14
சூளாமணி 21
செழும்பொருள்-தொடர் 74
சேதுபுராணம் 5
சைவம்-வைணவம் 31
சொல், நடை வனப்புப் படலம் 68
சோபா 10
ஞாயிறு 43
ஞான சாஸ்திரங்கள் 3
டான் ஜுவான் 12
டீட்டஸ் அன்டிரானிக்ஸ் 9
தமிழ் மற்றைய திராவிட பாஷைகளை விட உயர்ச்சி பெற்றது 2
தமிழ் மொழியின் வளர்ச்சிக்குரிய காரணங்கள் 2
தமிழின் பெருமை 1
தல புராணங்கள் 6
தாரையும் மண்டோதரியும் 57
திங்கள் 43
திரிமூர்த்திகள் 20
திருவனந்தபுரம் சாலைச் செந்தமிழ்க் கழகம் 1
துயர் 62
துயரம் 64
துளசி தாசர் 8
தெள்ளிய நடை 13
தோத்திரப் பாக்கள் 6
நகைச்சுவை 61
நடை 14
நற்கலைகளின் பொது நோக்கம் 3
நிரம்பவழகிய தேசிகர் 5
நிலாத்தோற்றம் 18
நெடில் வண்ணம் 69
நைடதம் 10
படைக்கலம் 85
படை வீரர் 84
பரசுராமன் கோபாக்கினி 15

பரதன் 51, 56
பல்லியம் 86
பல விகற்பங்கள் அமைந்த
சொற்றொடர் 19
பறவை 45
பாதாதிகேச வருணனை 7
பிரபந்தத் தொகை 6
பிற்காலத்துக் காவியங்கள் 7
பிறபாஷை மொழிகள் 22
புதியன புனையும் ஆற்றல் 12
புராணங்கள் 6
புலமைத்திறன் படலம் 79
பெரிய புராணம் 9
பெருமித நடை 59
பைரன் 12
பொருளிற் கவனம் 11
பொருளைக் காட்டினும்
உருவத்திற்கு அதிகச்
சிறப்பு 5
போர் வருணனை 46
போலிக் கவிகள் 4
மக்கள் தொழில் 45
மகா கவிகள் 5
மகிழ்ச்சி 63, 64
மாத்யூ ஆர்னல்டு 8
மாதர் வனப்பு 76
மிகுந்த சொல்வன்மை 18
முரண் தொடை 77
முன்னுரைப் படலம் 25
மெக்காலே 3
மெய்ப்பாட்டு வருணனைப்
படலம் 57
மெய்ப்பாடுகள் மூலமாக
வருணித்தல் 16
மெல்லிசை வண்ணம் 72
மேகம் 9
மேற்றிசைக் கவிஞர்கள் 13
யமகம் 73
யாப்புறுப்போர் 11
ரஸ்கின் 10
ரஸம் 23
வசன நூல்கள் 2
வஞ்சி விருத்தம் 69
வடமொழியோடு ஒப்
பிடக் கூடியது தமிழ் 1
வருணனை 23
வல்லிசை மெல்லிசை
இயைபு வண்ணங்கள் 72
வல்லிசை வண்ணம் 72
வாலி 56
வான்மீகி 28
விபீஷணன் 53
வியங்கியம் 11
விராதனது கரிய உருவம் 18
விரைவுக் குறிப்பு 15
விறலிவிடுதூது 12
வீரத்திறல் 60
வீல நாடகம் 12
வெப்பம் 44
ஷெல்லி 9
ஷேக்ஸ்பியர் 9
ஸ்ரீ ராமனை வந்து காணக்
கூடின மாதர் வரும் விதம் 19
ஹோமர் மாகவி 30